# ප්‍රගති වාර්තාව
## முன்னேற்ற அறிக்கை
# Progress Report

අයවැය කාරක සභා අවස්ථාව
வரவுசெலவுத் திட்ட குழுநிலை
**Budget Debate Committee Stage**

# 2023/24

**වැය ශීර්ෂ අංක**
செலவுத் தலைப்பு இலக்கம்
**Expenditure Head No**

# 118

**කෘෂිකර්ම සහ වැවිලි කර්මාන්ත අමාත්‍යාංශය**
கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
**Ministry of Agriculture and Plantation Industries**

**කෘෂිකර්ම අංශය**
விவசாயப் பிரிவு
Agriculture Division

# முன்னேற்ற அறிக்கை

# வரவுசெலவுத் திட்ட குழுநிலை *2023/2024*

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

*இல. 80/5, கொவிஜன மந்திரய, ரஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்ல*

# முன்னேற்ற அறிக்கை

## வரவுசெலவுத் திட்ட குழூநிலை 2023/2024

*(2023.09.30 வரை கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்குகள் என்பவற்றை உள்ளடக்கிய முன்னேற்றம் அறிக்கை )*

*அமைச்சின் செலவுத் தலைப்பு - இலக்கம் 118*

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

- கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் - கௌரவ மஹிந்த அமரவீர அவர்கள்
- கௌரவ பிரதி அமைச்சர்கள்
    - கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் - கௌரவ திரு. மொஹான் பிரியதர்ஷன த சில்வா அவர்கள்
    - கால்நடை வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் - கௌரவ திரு. டீ.பீ ஹேரத் அவர்கள்
    - கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் – கௌரவ திரு. கே. காதர் மஸ்தான் அவர்கள்
- அமைச்சின் முன்னால் செயலாளர் - திரு. குணதாச சமரசிங்க
- அமைச்சின் தற்போதைய செயலாளர் - திரு. ஜானக தர்மகீர்த்தி


| | |
|---|---|
| தொலைபேசி | 011-2034300 |
| தொலைநகல் | 011-2868910 |
| மின்னஞ்சல் முகவரி | info@agrimin.gov.lk |
| இணையத்தளம் | www.agrimin.gov.lk |

உள்ளடக்கம்


| | |
|---|---|
| *அறிமுகம் - கமத்தொழில் அமைச்சு* | *3-7* |
| *கமத்தொழில் அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான பொழிப்பு* | *8-9* |
| *2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதிசார் முன்னேற்றம் (செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ், 30.09.2023 ஆம் திகதி வரையில்)* | *10-12* |
| *2024 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள்* | *13-17* |
| *செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்* | *18-34* |
| *செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மீண்டுவரும் செலவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்* | *35* |
| *கமத்தொழில் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட செயற்திட்டங்கள்* | *36-40* |
| *2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களின் முன்னேற்றம்* | *41-57* |
| *கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்* | *58-153* |

## அறிமுகம் - கமத்தொழில் அமைச்சு

- தொலைநோக்கு

*“உணவுப் பாதுகாப்பையும் தேசிய சுபீட்சத்தையும் நோக்காகக் கொண்ட வினைத்திறன் மிக்கதும், விளைவுப் பெருக்கமுடையதும், பலமானதுமான விவசாயத்துறை”*

- செயற்பணி

*“இயற்கை வளங்களை நிலைபேறான விதத்தில் முகாமை செய்வதினூடாக சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட புதுவடிவமுடையதும் வர்த்தக நோக்கத்துடன் கூடியதுமான, பூகோல ரீதியில் போட்டிமிகு உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழில்முயற்சி விவசாயத்துறையொன்றை அடைதல்”*

### நோக்கங்கள்

i.) உணவு, வாசனைத்திரவிய மற்றும் இவை சார்ந்த விவசாயப் பயிர்த்துறைக்கு கொள்கை ஒத்துளைப்பை வழங்குதல்.

ii.) உணவு மற்றும் போசாக்குப் பாதுகாப்பை உறுதி செய்தல்.

iii.) விவசாய உற்பத்திகளுக்கான தளம்பலற்ற விலையை முன்னெடுத்துச் செல்லல்.

iv.) நெல் இருப்புக்களை கொள்வனவு செய்தலும் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறன் மிக்க வகையில் முகாமை செய்தலும்.

v.) கருத்திட்டங்களை உரிய வேளையில் அமுல் செய்தல்.

vi.) தெரிவு செய்யப்பட்ட பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல்.

vii.) துரித உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை வினைத்திறன் மிக்க வகையிலும், விளைவுப் பெருக்கமுள்ளதாகவும் அமுல் செய்தல்.

viii.) வெளிநாட்டு நிதி அமைப்புக்களை வினைத்திறன் மிக்க வகையிலும் விளைவுப்பெருக்கமுள்ளதாகவும் ஈடுபடுத்தல்.

ix.) சேவை வழங்குணர்களுக்கு நட்புறவுடனான மற்றும் சிறந்த பெறுபேறுகளை நோக்காகக் கொண்ட நிருவாக முறையொன்றை அமுல் செய்தல்.

x.) முழு அரச சேவையிலும் விளைவுப் பெருக்கமுள்ள முகாமைத்துவத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

### கடமைகளும் பணிகளும் திணைக்களங்களும்

i. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசனம் பற்றிய விடயத்துடனும் மற்றும் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்

ii. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்

iii. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்.

iv. உணவு பாதுகாப்பதை உறுதி செய்யும் வண்ணம் உணவு உற்பத்தி செய்தல்

v. இருப்பைக் கையாளுவதற்கும் மற்றும் வழங்கல் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

vi. பயிர் பல்வகைப்படுத்துகையின் அடிப்படையிலான கமத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

vii. உள்நாட்டு கமத்தொழில் உற்பத்திகளின் பண்பு ரீதியான பெறுமதிகளை பாவனையாளர்களான நுகர்வோருக்கு உறுதிப்படுத்துவதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தல்

viii. பாரம்பரிய விவசாயிகள், இளைஞர் யுவதிகள் மற்றும் மாணவர்களை நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய விவசாய கற்கைகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

ix. இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.

x. இரசாயனக் களைநாசினிகள் மற்றும் ஏனைய இரசாயனக் கலவைகள் குறித்து வழங்கப்பட்ட தரத்துடன் பயன்படுத்தலும் ஒழுங்குறுத்தலும்.

xi. விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்குப் பயிர்ச்செய்கை காப்புறுதி முறைமை மற்றும் விவசாய ஓய்வூதியத் திட்டங்களை விஸ்தரித்தல்

xii. நேரடி உற்பத்தியாளர்கள், ஏற்றுமதிக் கம்பனிகள், பதனிடும் நிலையங்கள், மொத்த வர்த்தகக் கம்பனிகள் என்பவற்றுக்கிடையில் விநியோகம் தொடர்பான ஒருங்கிணைப்பினை வலுவூட்டுவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு அதிக விலையைப் பெற்றுக் கொடுத்தல்

xiii. காலநிலை மாற்றங்கள் மற்றும் வானிலை தொடர்பான நாளாந்த தகவல்களை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளுதல்.

xiv. தரமான விதைகள், கன்றுகள் என்பவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துதல்.

xv. நீர் முகாமைத்துவம் மற்றும் விவசாயிகளின் தேவைகளை முகாமைத்துவம் செய்தல்.

xvi. விவசாய அபிவிருத்தி வலயங்கள், விவசாயக் கிராமங்கள் நிலைபேறான வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை என்பவற்றுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துதல்

xvii. இலங்கை கமத்தொழில் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமையும்

xviii. சிறிய அளவிலான விவசாய தொழில்முயற்சிகள் மற்றும் அமைப்புகளை எழுச்சிபெறச் செய்தலும் அவற்றை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தலும்

xix. சேதனப் பசளைப் பயன்பாடு மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி தொடர்பில் அதிகளவில் ஈடுபாடு கொள்வதற்கான வேலைத்திட்டங்களை விஸ்தரித்தலும் ஊக்குவித்தலும்

xx. தரமான உர இறக்குமதி, விநியோகம் என்பவற்றை அரச நிவாரண கொள்கைத் திட்டத்திற்கமையச் செயல்திறனுடன் நடைமுறைப்படுத்துதல்

xxi. சிறந்த தரத்திலான இரசாயனப் பசளைகள் மற்றும் சூழலுக்கு சாதகமான சேதனப் பசளைகளை உரிய நேரத்தில் பகிர்ந்தளிப்பதற்கான வழிமுறைகளைத் தயாரித்தல்

xxii. உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் சர்வதேச தரத்துக்கமைய சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவித்தல்

xxiii. உள்நாட்டு விவசாயிகள் மற்றும் நுகர்வோர் திருப்பதியடையும் வகையில் நியாயமான விலைகளுக்கான கொள்கையொன்றையும் பயிர்ச் செய்கைக்கான பல்லினத்தன்மை வேலைத்திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்துதல்

xxiv. வீட்டுத்தோட்டச் செய்கைக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

xxv. மேலதிக உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்றை வகுத்தல்

xxvi. விவசாய உற்பத்திகளைப் பெறுமதிசேர்த்து எற்றுமதி செய்வதற்கான வேலைத் திட்டமொன்றை வகுத்தல்

xxvii. சர்வதேச மட்டத்திலான தரமான விதை உற்பத்திகளுக்காக உள்நாட்டு விதைக் கொள்கைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்

xxviii. தரமான விதைகள் மற்றும் பயிர்ச்செய்கைக்கான உற்பத்திகளுக்காக தனியார் துறையினரை ஊக்குவித்தல்

xxix. அரச விவசாயப் பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்

xxx. உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பயிர்களை இறக்குமதி செய்தலைக் குறைத்தல்

xxxi. கால்நடைவளப் பிரிவின் உற்பத்திகளை அதிகரித்தலுக்கான வசதிகளைச் செய்து கொடுத்தல்

xxxii. கால்நடை நலன் அபிவிருத்தி மற்றும் அவை தொடர்பான நடவடிக்கைகள்

xxxiii. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடை வளம் தொடர்பான ஆராய்ச்சிப் பிரிவினை விஸ்தரித்தலும் அதன் அடிப்படையில் தரமான உற்பத்தியினைப் போதுமான அளவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்

xxxiv. கால்நடைகளின் இனவிருத்தித்தை அதிகரிப்பதற்காக விஞ்ஞான ரீதியில் இனவிருத்தி முறைகளை பிரபல்யப்படுத்தலும் நோய்களிலிருந்து அவற்றைப் பாதுகாத்தலும்

xxxv. பல்வேறு வகையான பூகோளத் தேவகளுக்கமைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயப் பண்ணை அபிவிருத்தியை ஊக்குவித்தல்

xxxvi. கால்நடைவளத் துறையைச் சேர்ந்த உற்பத்திகளை மேம்படுத்தலும் அவற்றை ஏற்றுமதிக்காக ஊக்குவித்தலும்

xxxvii. நடுத்தர மற்றும் பாரிய அளவிலான கால்நடைப் பண்ணைகளை நிர்மாணிப்பதற்காகத் தேவையான காணிகளையும் முதலீட்டு வசதிகளையும் வழங்குதல்

xxxviii. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு உற்பத்திகளையும் நுகர்வுக்கான வாய்ப்புகளையும் அதிகரித்தல்

xxxix. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரச் சேவையின் நிர்வாகமும் ஆளணி முகாமைத்துவமும்

xl. உள்நாட்டு விவசாய உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புகளை விஸ்தரித்தல்

xli. நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுடன் தொடர்பான நடவடிக்கைகள்

xlii. கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களையும் கண்காணித்தல்

- *கமத்தொழில் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் (22.12.2022 முதல் நடைமுறைக்கு வரும் வகையில்)*

i.) கமத்தொழில் திணைக்களம்

ii.) கமநல அபிவிருத்தித் திணைக்களம்

iii.) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

iv.) கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபை

v.) நெல் சந்தைப்படுத்தல் சபை

vi.) ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

vii.) இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம் (SLCARP)

viii.) தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்துகை மற்றும், குடியேற்ற அதிகாரசபை (ஹதபிம அதிகார சபை)

ix.) தேசிய பின் அறுவடை முகாமைத்துவ நிறுவகம் (NIPHM)

x.) தேசிய உரச் செயலகம்

xi.) வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி

xii.) கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி

xiii.) இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை (தேசிய உணவு மேம்பாட்டுச் சபை)

xiv.) தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையும் இணைக் கம்பனிகளும் (NLDB)

xv.) மில்கோ (பிறைவேட்) லிமிட்டெட் (Milco)

xvi.) வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ரபிரய்ஸ் கம்பனி

xvii.) பிரதேச பொருளாதார நிலையங்கள்

- நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்

i.) (1999ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம்

ii.) (2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க) கமநல அபிவிருத்திச் சட்டம்

iii.) 1982ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க) கிராமோதய சபைச் சட்டம்

iv.) (1951 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) மரங்களை வெட்டிச் சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம்

v.) (2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) விதை நெல் சட்டம்

vi.) (1996ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க) மண்வளம் பேணல் சட்டம்

vii.) (1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம்

viii.) (1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க) கமத்தொழில் அலுவல்கள் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனச் சட்டம்

ix.) (1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான இலங்கை மன்றச் சட்டம்

x.) 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) அரச கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்

xi.) (1980ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) களைநாசினி கட்டுப்படுத்தல் சட்டம்

xii.) (1999ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) தாவர பாதுகாப்புச் சட்டம்

xiii.) 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க) பசளைகள் ஒழுங்குபடுத்தற் சட்டம்

xiv.) (1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபைச் சட்டம்

xv.) (1992ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க) விலங்கு நோய்ச் சட்டம்

xvi.) (1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) விலங்கு தீனிச் சட்டம்

xvii.) (1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) விலங்குகள் சட்டம்

xviii.) (1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) விலங்கு மருத்துவ தொழில்துறைச்; சட்டம்

xix.) வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும்

கமத்தொழில் அமைச்சின் கீழ் பல நிறுவனங்கள் இருப்பதன் காரணமாக அவற்றின் முறையான நிருவாகத்தைக் கருத்திற்கொண்டு அந்த நிறுவனங்கள் அமைச்சின் 04 பிரதான பிரிவுகளின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன. அப்பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் உள்ள நிறுவனங்கள் பின்வருமாறு.

i.) கமத்தொழில் பிரிவு

விவசாயத் திணைக்களம், விவசாயம் மற்றும் கமநலக் காப்புறுதி சபை, நெல் சந்தைப்படுத்தல் சபை, ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை மற்றும் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பன இதன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ii.) கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிறுவனங்கள், மில்கோ (தனியார்) லிமிடெட் மற்றும் வரையறுக்கப்பட்ட மகாவலி விலங்கு வியாபர நிறுவனம் என்பன இதன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

iii.) உரப் பிரிவு

கமநல அபிவிருத்தித் திணைக்களம், தேசிய உரச் செயலகம், வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி, வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி, இலங்கை தேசிய பட்டினை

*ஒழிப்பு இயக்கச் சபை (தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை) மற்றும் தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் என்பன இதன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.*

*iv.) கிராமியப் பொருளாதாரப் பிரிவு*

*தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபை கமத்தொழில் அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது.*

*அதற்கமைவாக, 2023/24 ஆம் ஆண்டின் கமத்தொழில் அமைச்சின் வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்திற்கான முன்னேற்ற அறிக்கையில் அமைச்சின் கீழ் உள்ள பிரதான 04 பிரதான பிரிவுகளான விவசாயப் பிரிவு, உரப் பிரிவு, கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு மற்றும் கிராமியப் பொருளாதாரப் பிரிவு ஆகிய பிரிவுகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 30.09.2023 ஆம் திகதி வரையிலான நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் மற்றும் 2024 ஆம் ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக இலக்குகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.*

## கமத்தொழில் அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான பொழிப்பு

*நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின்படி, உலகளாவிய அபிவிருத்தி இலக்குகளை (நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை) அடைதல் மற்றும் தேசிய உணவு உற்பத்தியை அதிகரித்தல் என்பவற்றை இலக்காகக் கொண்டு விவசாயப் பிரிவினால் பல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.*

*கமத்தொழில் அமைச்சின் 2023 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 118 ஆம் இலக்க செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை 25,602.50 மில்.ரூபா ஆகும். மேலும், மீண்டுவரும் நிகழ்ச்சித் திட்டமொன்றான உர மானியத் திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டில் 56,263.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள்.*

*இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்தும் அமைச்சின் கீழ் உள்ள 04 பிரதான பிரிவுகளான விவசாயப் பிரிவு, உரப் பிரிவு, கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு மற்றும் கிராமியப் பொருளாதாரப் பிரிவு ஆகியவற்றின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.*

*அதற்கமைவாக, 2023 ஆம் ஆண்டில் கமத்தொழில் அமைச்சின் விவசாயப் பிரவின் செயல்படுத்தப்படும் முக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில், உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டத்திற்கு 900.00 மில். ரூபாயும், விவசாயத் துறையில் இளைஞர்களை தக்கவைக்கும் செயற்திட்டத்திற்கு 120.00 மில். ரூபாவும், இலங்கையில் வர்த்தக ரீதியான ஈரப்பலா உற்பத்தி தொடர்பான முன்னோடி செயற்திட்டத்திற்கு 2.00 மில். ரூபாவும், விவசாயிகளுக்கான பங்களிப்பு காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு 1,000.00 மில். ரூபாயும், பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாயக் கொள்கையை தயாரிப்பதற்காக 20.00 மில். ரூபா நிதியும், இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபைக்கு 25.00 மில். ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடு 22,204.62 மில். ரூபாய் ஆகும்.*

*இது தவிர, விவசாயப் பிரிவின் கீழ் செயற்படும் நிறுவனங்களான விவசாயம் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கு 10.00 மில். ரூபாய் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு 3,171.00 மில். ரூபாய் மற்றும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு 25.00 மில். ரூபாய் நிதியும் மூலதனச் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

*கால்நடை வளத் துறையின் முன்னேற்றத்திற்காக கொள்கைகள் மற்றும் திட்டங்களை தயாரிப்பதில் முதன்மையான அங்கமாகச் செயற்படும் கமத்தொழில் அமைச்சின் கால்நடை வளப் பிரிவு, உள்நாட்டுப் பசுமையான பால் உற்பத்தியில் தன்னிறைவடைவதை இலக்காக் கொண்டு, உள்நாட்டுப் பால் உற்பத்தியாளர்களை வலுப்படுத்துவதன் மூலம் உள்நாட்டுப் பால் உற்பத்தித் துறையை வலுப்படுத்துதல், ஆடு, கோழி, பன்றி போன்ற ஏனைய துணைப் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் தரத்தில் உயர்ந்த சிறந்த கால்நடை உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் சூழல் நட்பு முறைகளின் அடிப்படையில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதை ஊக்குவித்தல் என்பவற்றுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.*

*அதன்படி, 2023 ஆம் ஆண்டில் திரவ பால் நுகர்வை ஊக்குவிக்கும் மற்றும் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு 25.00 மில். ரூபாயும், விலங்கு இனவிருத்திப் பண்ணைகளை*

அமைப்பதற்கு 50 மில். ரூபாயும், சிறு மற்றும் நடுத்தர கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 275.00 மில். ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சின் உரப் பிரிவினால், நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில், உலகளாவிய அபிவிருத்தி இலக்குகளை (நிலையான அபிவிருத்தி இலக்குகளை) வெற்றிகொள்ளல் மற்றும் உரிய தரத்தைக்கொண்ட உரங்களின் பயன்பபாட்டை ஊக்குவித்தல், அவற்றை சரியான நேரத்தில் விநியோகிப்பதற்கான முறைகளை அமைத்தல். மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தாவர போசணைப் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் உணவு பாதுகாப்பை ஏற்படுத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட அதன் அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்தியுள்ளன.

2023 ஆம் ஆண்டில், உரப் பிரிவு பல முக்கிய அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களைத் ஆரம்பித்துள்ளது. அவை, தேசிய உர முகாமைத்துவ தகவல் அமைப்பின் (National Fertilizer Management Information System) உருவாக்கம், இலங்கை உரக் கம்பனியின் உரப் பரிசோதனை ஆய்வகத்தை அபிவிருத்தி செய்தல், இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி ஆகியவற்றை ஒன்றிணைத்தல் ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களாகும். இவற்றுக்கு மேலதிகமாக, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நிலைபேறான விவசாயத் துறையை ஊக்குவிக்கும் விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், உர மானியம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் நெற் செய்கைக்குத் தேவையான உர வகைகளை விவசாயிகளுக்கு இலவசமாகவும், ஏனைய பயிர்களுக்குத் தேவையான உர வகைகளை மானிய விலைகளின் அடிப்படையிலும் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, 2023 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உர வகைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டில் உரப் பிரிவுக்கு, இரசாயன மற்றும் சேதன உரங்களுக்கான உர மானிய நிகழ்ச்சித் திட்டத்திற்கான மீண்டுவரும் செலவினமாக 56,263.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மூலதனச் செலவீனமாக தேசிய உரச் செயலகத்தின் முகாமைத்துவ தகவல் முறைமைக்காக 20.00 மில். ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை உரக் கம்பனியின் உர ஆய்வுகூடத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக 9.00 மில். ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அறுவடைக்குப் பிந்தைய சேதத்தைக் குறைத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலை விருத்தி செய்தல் ஆகியவற்றுக்காக 150.00 மில். ரூபா நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இவற்றுக்கு மேலதிகமாக, உரப் பிரிவின் இணை நிறுவனமான தேசிய உணவு ஊக்குவிப்புச் சபைக்கு, 5.00 மில். ரூபாயும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப மூலதனச் செலவீனமாக 30.00 மில். ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கமத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் கிராமியப் பொருளாதாரப் பிரிவிற்கு மேலதிக உணவுப் பயிர் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டில் 100.00 மில். ரூபாய் நிதியும் ஆடு வளர்ப்புத் திட்டத்திற்கு 150.00 மில். ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், கிராமியப் பொருளாதாரப் பிரிவின் கீழ் செயற்படும் நிறுவனமான இலங்கை ஹதபிம அதிகாரசபைக்கு மூலதனச் செலவினமாக 200.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதிசார் முன்னேற்றம்*
*(செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ், - 30.09.2023 ஆம் திகதி வரையில்)*

| தொடர்/இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % | கடமைகள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | மொத்த வரவுசெலவு | | | | |
| 1.1 | மூலதன செலவு | 25,602.50 | 14,139.39 | 49 | |
| 1.2 | மீண்டுவரும் செலவு | 64,318.24 | 45,619.03 | 71 | |

செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்

| தொடர்/இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % | கடமைகள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| | மீண்டுவரும் | | | | |
| | உர மானிய நிகழ்ச்சித் திட்டம் | 56,263.00 | 41,126 | 73.10 | 5,821.158 |
| | மூலதன | | | | |
| 1. | உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டம் | 900.00 | 93.17 | 10.35 | 55.19 |
| 2. | விவசாயத் துறையில் இளைஞர்களை தக்கவைக்கும் செயற்திட்டம் | 120.00 | 0.51 | 0.43 | 11.878 |
| 3. | திரவ பால் நுகர்வை ஊக்குவிக்கும் மற்றும் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் | 25.00 | 25.00 | 100.00 | 25.00 |
| 4. | விலங்கு இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி | 50.00 | 7.47 | 14.94 | 7.36 |
| 5. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்) | 50.00 | 25.00 | 50.00 | 18.38 |
| | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (அபிவிருத்தி நிதியுதவி) | 225.00 | 70.43 | 31.30 | 69.54 |
| 6. | மேலதிக பயிர் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் | 100.00 | 49.21 | 49.21 | 60.16 |

| தொடர்/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % | கடமைகள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| *7.* | ஆடு வளர்ப்புச் செயற்திட்டம் | *150.00* | *46.23* | *30.82* | *107.97* |
| *8.* | தேசிய உரச் செயலகத்தின் முகாமைத்துவ தகவல் தொகுதி | *20.00* | *7.90* | *39.50* | - |
| *9.* | பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாயக் கொள்கையை தயாரித்தல் | *20.00* | *2.30* | *11.50* | *6.623* |
| *10.* | இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை | *25.00* | *8.63* | *34.52* | - |
| *11.* | இலங்கை உரக் கம்பனியின் உரப் பரிசோதனை ஆய்வகத்தை அபிவிருத்தி செய்தல் | *9.00* | *5.29* | *58.78* | *3.715* |
| *12.* | அறுவடைக்குப் பிந்தைய சேதத்தைக் குறைத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலை விருத்தி செய்தல் | *150.00* | *8.76* | *5.84* | *4.582* |
| *13.* | விவசாயிகளுக்கான பங்களிப்பு காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் | *1,000.00* | *165.58* | *16.56* | - |
| | உப கூட்டுத்தொகை - *i* | *2,844.00* | *534.01* | | |
| *1.* | காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயச் செயற்திட்டம் *(CSIAP) -* உலக வங்கிக் கடன் | *6,380.00** | *5307.74* | *83.19* | - |
| *2.* | சிறிய அளவிலான விவசாய வியாபர பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் *(SAPP) – IFAD* | *6,392.28* | *2431.00* | *38.03* | *2,431.87* |
| *3.* | விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம் *(ASMP) -* உலக வங்கிக் கடன் | *7,825.00* | *3,933.63* | *50.27* | - |
| *4.* | சிறிய அளவிலான விவசாய வணிகத்திற்கான பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கான செயற்திட்டம் *(SARP)* | *700.00* | *77.99* | *11.14* | - |
| *5.* | சிறிய அளவிலான பால் உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்தல் - பிரான்ஸ் நிதியுதவி | *835.34* | *8.36* | *1.00* | - |
| *6.* | கட்டுநாயக்க தாவர தனிமைப்படுத்தல் சேவையை *(NPQS)* வலுப்படுத்தல் *(JICA)* | *20.00* | *2.09* | *10.45* | *1.79* |
| *7.* | இலங்கை தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையை *(KOICA)* நவீனமயமாக்கல் | *50.00* | *16.30* | *32.60* | *13.7* |
| *8.* | இலங்கையில் வர்த்தக ரீதியான ஈரப்பலா உற்பத்தி தொடர்பான முன்னோடி செயற்திட்டம் | *2.00* | *0.14* | *7.00* | *0.1* |
| உப கூட்டுத்தொகை - *ii* | | *22,204.62* | *11,777.25* | | |

| தொடர்/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % | கடமைகள் மற்றும் பொறுப்புகள் (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| அமைச்சின் விடயப் பரப்புடன் தொடர்பான நிறுவனங்கள் | | | | | |
| *1* | விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபை | *10.00* | கட்டுநிதி கிடைக்க வில்லை | | - |
| *2* | நெல் சந்தைப்படுத்தும் சபை | *3,171.00* | *2158.61* | *68.07* | - |
| *3* | ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் | *25.00* | *10.52* | *42.08* | - |
| *4* | தேசிய உணவு ஊக்குவிப்பு சபை | *5.00* | கட்டுநிதி கிடைக்க வில்லை | | |
| *5* | அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம் | *30.00* | *6.0* | *20.00* | *7.28* |
| *6* | இலங்கை ஹதபிம அதிகாரசபை | *200.00* | *111.84* | *55.92* | - |
| *உப கூட்டுத்தொகை - iii* | | *3,441.00* | *2,286.97* | | |
| மொத்த கூட்டுத்தொகை - *(i+ii+iii)* | | *28,489.62* | *14,579.70* | | |

** காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பச விவசாய செயற்திட்டத்திற்கு 2023 ஆம் ஆண்டுக்கு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட 3,380 மில். ரூபா நிதி ஜூலை மாதத்தில் முடிவடைந்ததன் காரணமாக, மேலதிகமாக 3000 மில். ரூபா வழங்கப்பட்டது. எனவே, ஆண்டுக்கரிய மொத்த ஒதுக்கீடு. 6,380 மில். ரூபாய் ஆகும்.*

## 2024 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள்

- கமத்தொழில் அமைச்சின் 2024 ஆம் ஆண்டின் நிதிசார் இலக்குகள்

| தொடர்/ இல | விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1. | மூலதன செலவு | 41,595.80 |
| 2. | மீண்டுவரும் | 89,923.47 |
| | மொத்த வரவுசெலவு | 131,519.27 |

- 2024 ஆம் ஆண்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் – பொழிப்பு

கமத்தொழில் அமைச்சு

| பிரிவு | 2024 முன்மொழியப்படும் ஒதுக்கீடு (மில். ரூபா) |
|---|---|
| கமத்தொழில் பிரிவு | 1,600.00 |
| கிராமியப் பொருளாதாரப் பிரிவு | 865.00 |
| கால்நடை வளப் பிரிவு | 810.00 |
| உரப் பிரிவு (மீண்டுவரும்) | 26,000.00 |

### 01. விவசாயப் பிரிவு

செலவுத் தலைப்பு இலக்கம் 118-02-03-020-2509

| தொடர்/ இல | செயற்திட்டம் | ஒதுக்கீடு (மில். ரூபா) 2024 |
|---|---|---|
| 1 | வினைத்திறன்மிக்க விவசாய இயந்திரங்களின் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் பிரபல்யப்படுத்தல் என்பவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | 100.00 |
| 2 | விவசாய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் | 25.00 |
| 3 | வருடாந்த பயிர் உற்பத்தித் திட்டமிடல் | 5.00 |
| 4 | பயிர் பாதுகாப்பு (காலநிலை மாற்றம், உயிரியல் மற்றும் உயிரற்ற காரணிகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்தல், வன விலங்கு சேதம், படைப் புழுவினால் ஏற்படும் சேதங்களைக் குறைத்தல் | 150.00 |
| 5 | விவசாய விரிவாக்கம், புதிய தொழில்நுட்பங்களை பகிர்வதன் மூலம் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல் (பயிற்சி, கள நாட்கள்), பிரச்சார நடவடிக்கைகள் , கருத்தரங்குகள், விவசாயிகள் சந்திப்பு – மாதிரிகளைக் கொண்டு மாவட்ட அளவில் நிகழ்ச்சிகளை நடாத்தல். | 100.00 |
| 6 | மாவட்ட கமத்தொழில் குழுக் கூட்டங்கள் | 5.00 |
| 7 | சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய தொழில் நுட்ப முறைகளை ஊக்குவித்தல் | 50.00 |
| 8 | இளைஞர் விவசாய சங்கங்களின் உறுப்பினர்களின் தொழில் முயற்சியாண்மையை விருத்தி செய்தல் | 165.00 |
| | மொத்தம் | 600.00 |

செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-020-2202*

| தொடர்/ இல | செயற்திட்டம் | ஒதுக்கீடு (மில். ரூபா) 2024 |
|---|---|---|
| | உயர் தொழில்நுட்பப் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல் (சூரியசக்தி நீர் இரைக்கும் இயந்திர நீர்ப்பாசன, பொலித்தீன் வளர்ப்பு இல்லங்கள், நீரியல் வளர்ப்பு, நிழல் வலை, வள முகாமைத்துவம், அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல், விவசாயக் கிணறுகள்) | 175.00 |
| | விஷேட பயிர்களின் உற்பத்திப் பயனுறுதித் தன்மை மற்றும் உற்பத்தியை அதிகரித்தல் (களப் பயிர்கள், காய்கறிகள், கிழங்கு வகைகள்) | 145.00 |
| | பயன்படுத்தப்படாத நிலங்களை அபிவிருத்தி செய்தல் (சோஜன், தரிசு வயல் நிலங்கள்) | 40.00 |
| | விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட தொழிற்துறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி (அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவம், பெறுமதி சங்கிலி முகாமைத்துவம், காளான், தேனீ வளர்ப்பு) | 40.00 |
| | மொத்தம் | 400.00 |

செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-083-2506*

| தொடர்/ இல | செயற்திட்டம் | நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள மாவட்டங்கள் | ஒதுக்கீடு (மில். ரூபா) 2024 |
|---|---|---|---|
| 1 | இலகுவில் பழுதடையக்கூடிய விவசாயப் பொருட்களின் விநியோகச் சங்கிலிகளில் ஏற்படும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் பொருட்டு பாதுகாப்பான பொதியிடல் மற்றும் போக்குவரத்து முறைகளை அறிமுகப்படுத்துதல். | நாடு முழுவதும் | 55.00 |
| 2 | விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் பொருட்டு நெல், சோளம் மற்றும் பயறு வகைகளின் பண்ணை களஞ்சிய வசதிகளை அபிவிருத்தி செய்தல். | அனுராதபுரம், குருநாகல், கிளிநொச்சி, மொனராகலை, கண்டி மற்றும் அம்பாறை | 15.00 |
| 3 | குடிசை ரீதியாக அரிசி பதப்படுத்தும் தொழிற்துறையை விருத்தி செய்தல் | நாடளாவிய ரீதியில் | 10.00 |
| 4 | வாசனைப் பொருட்களைப் பதப்படுத்தும் நுண் வியாபர நிலையங்களை அறிமுகம் செய்தல் | அனுராதபுரம், அம்பாறை, குருநாகல், காலி, ஹம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு | 5.00 |
| 5 | இலங்கையில் பழங்களின் பெறுமதிச் சங்கிலியின் பங்குதாரர்களை வலுவூட்டுவதற்காக பழங்களைப் பதப்படுத்தும் நிலையங்களை நிறுவுதல் | நாடு முழுவதும் | 5.00 |
| 6 | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஏற்றுமதியை இலக்காகக்கொண்டு வாழைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை இலக்காகக் கொண்ட 'அம்புல்' வாழைப்பழம் பொதியிடும் அலகு ஒன்றை நிறுவுதல். | நாடு முழுவதும் | 5.00 |
| 7 | இலங்கையில் விவசாய அடிப்படையிலான பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளை மேற்கொள்ளும் தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டல் | நாடு முழுவதும் | 5.00 |
| | மொத்தம் | | 100.00 |

செலவுத் தலைப்பு இலக்கம் 118-02-03-084-2509/2202

| தொடர்/ இல | செயற்திட்டம் | விபரம் | ஒதுக்கீடு (மில். ரூபா) 2024 |
|---|---|---|---|
| 1 | வினைத்திறன்மிக்க விவசாய இயந்திரங்களின் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் பிரபல்யப்படுத்தல் என்பவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | • இந்த செயற்திட்டம் நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்காக ஒரு மாவட்டத்தில் இருந்து 2 கிராமங்கள் தேர்வு செய்யப்பட உள்ளன. தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள செயற்திட்டங்களைக் கண்டறிய பங்கேற்பு கிராம அணுகல் (PRA) முறை நடத்தப்படும்.<br>• மேலும், குறித்த கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், அவர்களின் திறன் மற்றும் ஆற்றல்களுக்கு ஏற்ப விவசாய தொழில்முனைவோராக இந்தச் செயற்திட்டத்திற்கு உள்வாங்கப்படுவர். | 500.00 |

## 02. உரப் பிரிவு

- 2024 ஆம் ஆண்டின் நிதிசார் இலக்குகள்

| தொடர்/ இல | விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1. | மூலதன செலவு | 42.55 |
| | மொத்த வரவுசெலவு | |

- 2024 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்)

| தொடர் / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு (ரூபா) | மொத்த செலவு (மில். ரூபா) |
|---|---|---|---|---|---|
| | நெற் செய்கைக்கு விவசாயிகளுக்கு நிதிசார் மானியம் வழங்கல் | ஹெக்டயர் | 1.30 மில். ஹெக் | 20,000.00 ரூபாய் (ஹெக்.) | 26,000.00 |

## 03. கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு

- 2024 ஆம் ஆண்டின் நிதிசார் இலக்குகள்

| தொடர்/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீட்டுத் தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 1,173.05 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 450.48 |

*2024 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொடர்/ இல | செலவுத் தலைப்பு இலக்கம் | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மொத்த செலவு (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | 118-2-03-078-2507 | விலங்கு இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி | 50.00 |
| 3 | 118-2-03-079-2506 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்) | 257.00 |
| 4 | 118-2-03-079-2202 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (அபிவிருத்தி நிதியுதவி) | 558.00 |
| மொத்தம் (மில். ரூபா) | | | 865.00 |

குறிப்பு - திரவ பால் நுகர்வை ஊக்குவித்தல் மற்றும் பிரபல்யப்படுத்தலுக்கான நிகழ்ச்சித் திட்டம் (விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டு செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது)

## 04. கிராமியப் பொருளாதாரப் பிரிவு

*2024 ஆம் ஆண்டின் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

- *2024 ஆம் ஆண்டின் நிதிசார் இலக்குகள்*

| தொடர்/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீட்டுத் தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 834.50 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 202.00 |

*2024 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்)*

| தொடர்/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு (ரூபா) | மொத்த செலவு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | பயிர்ச் செய்கைச் செயற்திட்டம் | பயனாளர் குடும்பங்களின் எண்ணிக்கை | 29,440 | ஒரு பயனாளர் குடும்பத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு அதிகபட்சம் - 15,000.00 ரூபாய் | 200.00 |
| | | பயிர்ச் செய்கை மேற்கொண்ட நிலப் பரப்பு - ஹெக்டயர் | 5,120 | | |
| | | அறுவடை மெ. தொன் | 4,200-5,000 | | |
| 2. | ஆடு வளர்ப்புச் செயற்திட்டம் | பயனாளர் குடும்பங்களின் எண்ணிக்கை | 2,250 | ஒரு பயனாளர் குடும்பத்திற்கு மூன்று ஆடுகளுக்கு 85,000.00 ரூபாய். | 200.00 |
| | | வழங்கப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை | 6,750 | | |
| 3. | பொருளாதார மையங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் | ஆரம்பிக்கப்படாத மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார | நிர்மாணப் பணிகள் மற்றும் விலைப்பட் | நிர்மாணப் பணிகளின் மதிப்பீடுகள் | 50.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மையங்களில் நடைபெற்று வரும் செயற்திட்டங்களின் எண்ணிக்கை | டியல் செலுத்தல்கள் (மின்சாரம், நீர், பாதுகாப்பு சேவைகள்) | மற்றும் விலைப்பட்டியல்களின் பெறுமதிக்கு ஏற்ப நிதி ஒதுக்கப்படுகிறது . | |
| 4. | * இந்திய அரச மானியத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கழிவறை அலகுகளை நிர்மாணித்தல் | கழிவறை அலகுகளின் எண்ணிக்கை | 1,325 அலகுகள் | 225,000.00 ரூபாய் | இந்திய நிதியுதவி 300.00 |
| | | | | | உள்நாட்டு நிதியுதவி 60.00 |

- ** இந்திய அரச மானியத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கழிவறை (மலசலகூட) அலகுகளை நிர்மாணித்தல்*

*இது 2018 ஆம் ஆண்டில் கிராமியப் பொருளாதார அமைச்சின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டமாகும். 03.07.2018 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதுடன் 29.07.2018 ஆம் திகதி இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே உந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. அமைச்சரவை திருத்தங்களின் பின்னர், இந்த செயற்திட்டம் வெவ்வேறு அமைச்சுகளின் கீழ் கொண்டு செல்லப்பட்டதுடன் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் கீழ் இதற்கு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த சில ஆண்டுகளாக பொருளாதார நெருக்கடியின் கீழ் பொருட்களின் விலை உயர்வு காரணமாக, அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி இந்த செயற்திட்டத்தை செயல்படுத்த முடியாமல் போனது. செயற்திட்டத்தின் ஒப்பந்த காலம் 18.07.2021 ஆம் திகதி முடிவடைந்துள்ளது. இது தொடர்பாக, இந்திய உயர் ஸ்தானிகராலயத்துடன் கலந்துரையாடப்பட்டதுடன் தற்போதைய விலைகளின்படி, சுகாதார அலகுகளின் எண்ணிக்கை மற்றும் பிற திருத்தங்கள் சேர்க்கப்பட்டு, ஒப்பந்தம் திருத்தப்பட்டு, மேலதிக நடவடிக்கைகளுக்கான ஒப்புதலுக்காக இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்கு 2024 ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடு இந்திய நிதியுதவியின் கீழ் 300.00 மில். ரூபாவும் உள்ளூர் நிதியிலிருந்து 60.00 மில். ரூபாவும் ஆகும்.*

*இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சுமார் 200,000 நேரடி மற்றும் மறைமுக பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவ முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

## செலவுத் தலைப்பு இலக்கம் *118* இன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

### *01.* உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டம் - செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-020-2509/2202*

*2023* ஆம் ஆண்டுக்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டற்கு வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் *900* மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான அடிப்படை நோக்கங்கள் பின்வருமாறு.

- *i.)* உணவுப் பாதுகாப்பை உருவாக்குதல் மற்றும் தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்
- *ii.)* உணவுப் பணவீக்கத்தைக் குறைத்தல்.
- *iii.)* அந்நியச் செலாவணியை சேமித்தல்.
- *iv.)* இளைஞர் சமுதாயத்தை விவசாயத்தின்பால் ஈர்த்தல்.
- *v.)* புதிய தொழில்நுட்பங்களை நோக்கி விவசாயிகளை வழிகாட்டல்

போன்ற விடயங்களாகும்.

இந்த நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு, அடையாளம் காணப்பட்ட விஷேட பயிர்களின் (களப் பயிர்கள், கிழங்குப் பயிர்கள், காய்கறி வகைகள்) உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல், விவசாயத்திற்கு உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், விவசாயத் தொழிற்துறை மற்றும் தொழில்முனைவு அபிவிருத்தி, நீர் முகாமைத்துவம், பயன்படுத்தப்படாத நிலங்களை அபிவிருத்தி செய்தல், காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் பொருட்டு மேற்கொள்ளும் பயிர் பாதுகாப்புத் நிகழ்ச்சித் திட்டங்கள், விவசாய செயற்திட்டச் நடவடிக்கைகள், ஏற்றுமதியை இலக்காகக்கொண்ட பழ உற்பத்திக் கிராமங்களை உருவாக்குதல், விவசாயப் புத்தாக்க நடவடிக்கைகள், விவசாயக் கொள்கைகளுடன் தொடர்பான நடவடிக்கைகள் போன்ற துறைகளின் கீழ் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களை கமத்தொழில் அமைச்சு, மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்கள், விஷேட செயற்திட்டங்களுக்கான மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் விவசாய திணைக்களம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படுகின்றன.

செயற்திட்டத்தின் முன்னேற்றக் கட்டுப்பாடு கமத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் கீழ் உள்ள அனைத்து செயற்திட்டங்களும் களத்தில் செயற்படுத்தப்பட்டு வருவருவதுடன், இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த செயற்திட்டங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் கீழ்க்கண்டவாறு அமையும்.

| தொ / இல | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | *2023* ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி *(மில். ரூபாய்)* | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | *30.09. 2023* ஆம் திகதிக்கு செலவு செய்த தொகை *(மில். ரூபாய்)* |
|---|---|---|---|---|
| | உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டம் | | | |
| *1* | விஷேட பயிர் வகைகளின் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல் மற்றும் உற்பத்தியை அதிகரித்தல் (களப் பயிர்கள், கிழங்குப் பயிர்கள், காய்கறி வகைகள்) | *246.66* | *23* | |

| தொ / இல | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மில். ரூபாய்) | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 30.09. 2023 ஆம் திகதிக்கு செலவு செய்த தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|
| 2 | உயர் தொழில்நுட்பப் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல் (சூரியசக்தி நீர் இறைக்கும் இயந்திர நீர்ப்பாசன, பொலித்தீன் வளர்ப்பு இல்லங்கள், நீரியல் வளர்ப்பு, நிழல் வலை, வள முகாமைத்துவம், அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல், விவசாயக் கிணறுகள்) | 364.15 | 26 | |
| 3 | விவசாய அடிப்படையில் தொழிற்துறைகளை ஊக்குவித்தல் மற்றும் தொழில் முனைவு நடவடிக்கைகளை விருத்தி செய்தல். (அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவம், பெறுமதி சங்கிலி முகாமைத்துவம், காளான், தேனீ வளர்ப்பு) | 86.40 | 17 | |
| 4 | மண் போசணைப் பொருட்கள் மற்றும் நீர் முகாமைத்துவம் | 10.82 | 1 | |
| 5 | குறை பயன்பாட்டைக் கொண்ட நிலங்களை அபிவிருத்தி செய்தல் (சோஜன், தரிசு வயல் நிலங்கள்) | 18.95 | 4 | |
| 6 | பயிர் பாதுகாப்பு (காலநிலை மாற்றம், உயிரியல் மற்றும் உயிரற்ற காரணிகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்தல், வன விலங்கு சேதம், படைபுழுவினால் ஏற்படும் சேதங்களைக் குறைத்தல் | 1.78 | 1 | |
| 7 | விவசாய விரிவாக்கம், புதிய தொழில்நுட்பங்களை பகிர்வதன் மூலம் உற்பத்திப பயனுறுதித் தன்மையை அதிகரித்தல் (பயிற்சி, கள நாட்கள்), பிரச்சார நடவடிக்கைகள் , கருத்தரங்குகள், விவசாயிகள் சந்திப்பு – மாதிரிகளைக் கொண்டு மாவட்ட அளவில் நிகழ்ச்சிகளை நடாத்தல். | 1.65 | 3 | |
| 9 | ஏற்றுமதியை இலக்காகக்கொண்ட பழ உற்பத்திக் கிராமங்களை உருவாக்குதல் மற்றும் உற்பத்தியை அதிகரித்தல். | 59.25 | 17 | |
| 10 | விவசாயப் புத்தாக்க நடவடிக்கைகளை ஊக்குவித்தல். | 3.00 | 1 | |
| 11 | விவசாயக் கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் | 2.00 | 1 | |
| 12 | மாவட்ட விவசாயக் குழுக் கூட்டங்கள் | 3.00 | 1 | |
| 14 | வருடாந்த பயிர் உற்பத்தி திட்டமிடல் | 2.00 | 1 | |
| 15 | 2022 ஆம் ஆண்டுக்குரிய கடமைகள், பொறுப்புகள் மற்றும் செலுத்த வேண்டிய விலைப் பட்டியல்கள் | 50.24 | 0 | |
| 16 | மாகந்துர விவசாயம். ஆராய்ச்சி நிலையத்தில் மண் ஆய்வுகூடத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல் | 24.41 | 1 | |

| தொ / இல | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மில். ரூபாய்) | செயற்தி ட்டங்க ளின் எண்ணி க்கை | 30.09. 2023 ஆம் திகதிக்கு செலவு செய்த தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|
| | மொத்தம் | 874.31 | 97 | 93.17 |

பௌதீக முன்னேற்றம்

இந்த நிகழ்ச்சித் திட்டம் கமத்தொழில் அமைச்சு, விவசாயத் திணைக்களம், மாவட்ட செயலகங்கள், மேற்கு, தெற்கு, வட மற்றும் ஊவா மாகாண சபைகளின் மாகாண விவசாய அமைச்சுகளின் ஊடாக நாட்டின் 18 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மேலும், இந்த நிகழ்ச்சித் திட்டமானது விவசாயப் பிரிவுடன் தொடர்புடைய 11 விஷேட துறைகளின் கீழ், தெரிவு செய்யப்பட்ட துறைகளில் செயல்படுத்தப்படுவதுடன் இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களாக, காய்கறிகள், பழங்கள் மற்றும் தானிய வகைகளின் உற்பத்தியை ஊக்குவித்தல் வணிகப் பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல், குறை பாவனையுடைய நிலங்களில் சோஜான் முறையின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளல், விதை உற்பத்தி, மண் போசணைப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல் என்பன காணப்படுகின்றன.

மேலும், இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களத்தினால் 14 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மேற்படிச் செயற்திட்டங்கள் பின்வரும் துறைகளை உள்ளடக்கும் வகையில் செயல்படுத்தப்படுகின்றன. உயர் தரத்திலான காய்கறி விதைகளை உற்பத்தி செய்தல், சோளப் பயிர்ச் செய்கையின் உற்பத்திப் பயநிறுத்தித் தன்மையை அதிகரித்தல், விதைகள் மற்றும் விவசாய உபகரணங்களின் தரத்தை மேம்படுத்துதல், விவசாயத் துறையுடன் தொடர்பான ஆராய்ச்சிக் கூடங்களை விருத்தி செய்தல் மற்றும் நிலைபேறான நீர்ப்பாசனத் தொகுதிகளை நிறுவுதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு கமத்தொழில் அமைச்சினால் 410.75 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த செயற்திட்டங்கள் அனைத்தும் தற்போது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவதுடன், சுமார் 30% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. மேலும், இந்த செயற்திட்டங்கள் அனைத்தும் இந்த ஆண்டுக்குள் நிறைவு செய்யப்படவுள்ளன.

புகைப்பட இலக்கம் 01 - 06

*02. இளைஞர்களை விவசாயத் துறையில் தக்கவைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் (இளைஞர் கிராம நிகழ்ச்சித் திட்டம்) - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-084-2509/2202*

*கமத்தொழில் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய நிறுவனங்களின் பங்களிப்புடன், இளைஞர்களை விவசாயத் துறையில் தக்கவைப்பதற்கான இந்நிகழ்ச்சித் திட்டமானது ஹம்பாந்தோட்டை, காலி, வவுனியா, குருநாகல் மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட கிராமங்களை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2023 ஆம் ஆண்டில்ற்கு 120.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறித்த மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் 30.09.2023 ஆம் திகதி வரையிலான நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு.*

*நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-084-2509/2202 இன் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்*

| தொ./இ | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%) | பௌதீக முன்னேற்றம் | நடைமுறைப்படுத்தப்படும் கிராமங்கள் |
|---|---|---|---|---|---|---|
| ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இளைஞர் கிராம நிகழ்ச்சித் திட்டம் | | | | | | |
| 1. | அப்பில் கொய்யாச் செய்கை ஊக்குவிப்பு செயற்திட்டம் | 7.85 | - | - | Plant Agro மாதிரிகள் மற்றும் தெளிப்பான் என்பவற்றுக்கு 3 விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. | சிட்டினமலுவ வடக்கு, கபெட்டியாவ வடக்கு, பந்திகங்தொட்டை, வாடிகல, கஹந்தாவ |
| 2. | அன்னாசிச் செய்கையை ஊக்குவிக்கும் செயற்திட்டம் | 6.58 | - | - | விலைமனுக் கோரப்பட்டுள்ளது. | சிட்டினமலுவ வடக்கு, கபெட்டியாவ வடக்கு |
| 3. | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாதுளஞ் செய்கையை விரிவாக்கம் செய்தல். | 9.54 | - | - | விலைமனுக் கோரப்பட்டுள்ளது. | சிட்டினமலுவ வடக்கு, கபெட்டியாவ வடக்கு, பந்திகங்தொட்டை, வாடிகல, கஹந்தாவ |
| 4. | குரக்கன் தடிகளைப் பயன்படுத்தி விதைகளை பிரித்தெடுக்கும் இயந்திரங்களை வழங்குவதன் மூலம் உற்பத்திப் பயனுறுதித் தன்மை அதிகரித்தல் | 0.36 | - | - | 2 வாரங்களுக்குள் நிறைவு செய்ய கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. | பந்திகங்தொட்டை |
| 5. | நிலக்கடலை விதைப் பிரிப்பு இயந்திரங்களை வழங்குவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல். | 0.34 | - | - | விலைமனுக் கோரப்பட்டுள்ளது. | பந்திகங்தொட்டை |
| 6. | தற்போது களத்தில் செய்கை செய்யப்பட்டுள்ள புளி வாழைச் செய்கையை | 10.05 | - | - | விலைமனுக் கோரப்பட்டுள்ளது. | பந்திகங்தொட்டை ஐந்துற |

| தொ/இ | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%) | பௌதீக முன்னேற்றம் | நடைமுறைப்படுத்தப்படும் கிராமங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுமதிக்கு ஏற்ற வகையில் விருத்தி செய்தல். | | | | | |
| 7. | ஏற்றுமதிக்கான புளி வாழைப் பழச் செய்கை | 19.84 | - | - | விலைமனுக் கோரப்பட்டுள்ளது. | பந்திகங்தொட்டை ஜந்துற |
| 8. | அரிசி மாவு உற்பத்தி | 2.52 | - | - | விலைமனுக் கோரப்பட்டுள்ளது. | சிட்டினமலுவ வடக்கு, கபெட்டியாவ வடக்கு, பந்திகங்தொட்டை, வாடிகல, கஹந்தாவ, ஜந்துற |
| 9. | காளான் வளர்ப்புக் கிராமமொன்றை நிறுவுதல் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் காளான் வளர்ப்பு இல்லங்களை நிறுவுவதன் மூலம் காளான் வளர்ப்பை முறையான விதத்தில் மென்மேலும் விரிவாக்கம் செய்தல் | 12.79 | - | - | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 08 வளர்ப்பு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. | ஜந்துற |
| 10. | TOM E.J.C. மாம்பழச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் | 3.11 | - | - | விலைமனுக் கோரப்பட்டுள்ளது. சூரியவவைக்கு ஹரித்த (தனி) நிறுவனத்துக்கு கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. | கபெட்டியாவ வடக்கு, பந்திகங்தொட்டை, வாடிகல, கஹந்தாவ, ஜூல் பள்ளம, காவந்திஸ்ஸபுற |
| 11. | பாப்பாசிச் செய்கை செயற்திட்டம் | 18.38 | - | - | விலைமனுக் கோரப்பட்டுள்ளது. | சிட்டினமலுவ வடக்கு, கபெட்டியாவ வடக்கு, பந்திகங்தொட்டை, வாடிகல, கஹந்தாவ, ஜந்துற |
| 12. | நீரிழப்பு முறை மூலம் பெறுமதி சேர்த்த உற்பத்திகள் - 2023 | 2.13 | - | - | விலைமனுக் கோரப்பட்டுள்ளது. | வாடிகல, கஹந்தாவ |
| காலி மாவட்டத்தில் இளைஞர் கிராம நிகழ்ச்சித் திட்டங்கள் | | | | | | |
| 1. | ஸ்வயங்பாலித்த பால் பண்ணை சங்கத்தின் பால் விற்பனை நிலையத்தை நிறுவுதல். | 2.35 | - | - | பால் விற்பனை நிலையம் செயற்படுகிறது. நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. | ரணபனாதெனிய |
| 2. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழி வளர்ப்பை விரிவாக்கம் செய்தல். | 0.36 | 0.0015 | 0.39 | பயிற்சி திட்டத்தின் முதல் கட்டம் நிறைவடைந்துள்ளது. பெறுகை நடவடிக்கைகள் நிறைவடைந்த | பங்வில, மாவடவில, ரணபனாதெனிய |

| தொ / இ | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%) | பௌதீக முன்னேற்றம் | நடைமுறைப்படுத்தப்படும் கிராமங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பின்னர் கோழிக் குஞ்சுகளுக்கான கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. | |
| 3. | ரத்கம கால்நடை வைத்திய அதிகாரப் பிரிவில் 2023 ஆம் ஆண்டு முதல் ஆடு வளர்ப்பை பிரபல்யப்படுத்தல் | 2.18 | 0.0096 | 0.44 | பயிற்சி திட்டத்தின் முதல் கட்டம் நிறைவடைந்துள்ளது. பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. | பங்வில, மாவடவில, ரணபனாதெனிய |
| வவுனியா மாவட்டத்தில் இளைஞர் கிராம நிகழ்ச்சித் திட்டம் | | | | | | |
| 1. | உளுந்து செய்கை செயற்திட்டம் | 1.07 | 0.48 | 44.86 | விதை விநியோகம் நடைபெற்று வருகின்றது | பெரியகட்டு |
| 2. | மாடு வளர்ப்பு | 8.35 | - | - | செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் பயனாளிகளை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. | பெரியகட்டு |
| 3. | ஆடு வளர்ப்பு | 2.66 | - | - | | பெரியகட்டு |
| 4. | வீட்டுத் தோட்டக் கோழி வளர்ப்பை விருத்தி செய்தல் | 2.14 | - | - | | பெரியகட்டு |
| குருநாகல் மாவட்டத்தில் இளைஞர் கிராம நிகழ்ச்சித் திட்டம் | | | | | | |
| | CSIAP மற்றும் SARP செயற்திட்டங்களிற்கு ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. | | | | பக்மீவெவ |

உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத் நிகழ்ச்சித் திட்டம்ம் (செலவுத் தலைப்பு இலக்கம் 118-02-03-020-2509/2202) காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டம் (CSIAP) மற்றும் சிறிய அளவிலான விவசாய வியாபார நடவடிக்கைகளுக்குக் காணப்படும் தடைகளை நீக்கும் செயற்திட்டம் (SARP) ஆகியவற்றின் கீழ் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

புகைப்பட இலக்கம் 07-08

*03. திரவ பால் நுகர்வை ஊக்குவித்தல் மற்றும் பிரபல்யப்படுத்தலுக்கான நிகழ்ச்சித் திட்டம் - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-077-2202*

*உள்நாட்டுத் திரவ பால் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் நுகர்வை அதிகரித்தல் என்பவற்றை பிரதான நோக்கங்களாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் இந்த செயற்திட்டத்திற்கு 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 25.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

- *நிதிசார் முன்னேற்றம்*

| தொ/இ | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் |
|---|---|---|---|---|
| | நிதிப் பொறுப்புகள் - திரவ பால் நுகர்வை ஊக்குவித்தல் மற்றும் பிரபல்யப்படுத்தலுக்கான நிகழ்ச்சித் திட்டம் | 4.69 | 4.69 | 100% |
| | நிதிப் பொறுப்புகள் - 2022 ஆண்டின் திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு அமைவாக பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக வழங்கப்பட்ட ஒதுக்கீடு | 20.31 | 20.31 | 100% |
| | மொத்தம் | 25.00 | 25.00 | 100% |

*அதன் பிரகாரம், இந்த செயற்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களிடையே திரவப் பால் நுகர்வை அதிகரித்தல் மற்றும் பிரபல்யப்படுத்தல் என்பவற்றுக்கான செயற்பாடுகள் முன்மொழியப்பட்ட போதிலும், திறைசேரியில் நடைபெற்ற அரச செலவின மதிப்பாய்வுக் குழுவின் ஆலோசனையின்படி இந்த செயற்திட்டத்தை 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தாது இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அந்த முழுத் தொகையும் 2022 ஆம் ஆண்டின் நிதிப் பொறுப்புகளை செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டதுடன் அந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட பொறுப்புகள் பின்வருமாறு.*

*i.) 2022 ஆம் ஆண்டில் திரவ பால் நுகர்வை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் உருவான பொறுப்புகள் - 4.69 மில். ரூபாய்*

*ii.) 2022 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் பால் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டத்தின் கீழ் உருவான பொறுப்புகள் - 20.31 மில். ரூபாய்*

*04. விலங்கு இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-078-2507*

*2023ஆம் ஆண்டின் கால்நடை வளப் பிரிவின் செயல் திட்டத்தின்படி, விலங்கு இனவிருத்திப் பண்ணைகளை நிறுவும் பொருட்டு 50.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அந்த ஒதுக்கீட்டிலிருந்து 2022 ஆம் ஆண்டின் பொறுப்புகளுக்காக 7.36 மில். ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. இதன்படி, மீதி ஒதுக்கீட்டிலிருந்து முழு இலங்கையையும் உள்ளடக்கும் வகையில் விலங்கு இனவிருத்திப் பண்ணைகளை நிறுவுவதுடன் தொடர்பான செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டது.*

*எனினும், 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவுகள் மூலம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு இனவிருத்தி விலங்குகளை இறக்குமதி செய்யும் செயற்திட்டத்திற்கு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ஒதுக்கீடு போதுமானதாக இல்லாததன் காரணத்தினால் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு மேற்படி செயற்பாட்டை மேற்கொள்ள இச்செயற்திட்டத்திலிருந்து 35.30 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.*

*2023 செப்டம்பர் மாதம் திருத்தப்பட்ட செயல் திட்டத்தின் பிரகாரம் பொரலந்த அரசாங்க இனவிருத்திப் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்காக 7.0 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

- *நிதிசார் முன்னேற்றம்*

| அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | *2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)* | *30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)* | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் |
|---|---|---|---|
| விலங்கு இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி | *50.00* | *7.47* | *15%* |
| மொத்தம் | *50.00* | *7.47* | |

*05. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-079-2202/2506*

- *நிதிசார் முன்னேற்றம்*

| செலவுத் தலைப்பு இலக்கம் | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | *2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)* | *30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)* | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் |
|---|---|---|---|---|
| *118-2-03-079-2506* | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ( உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்) | *50.00* | *25.00* | *50%* |
| | கால்நடை வள அபிவிருத்தி இடைக்கால நிகழ்ச்சித் திட்டம் | *31.62* | *6.62* | *21%* |
| | நிதிப் பொறுப்புகள் - 2022 ஆண்டின் திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு அமைவாக பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக வழங்கப்பட்ட ஒதுக்கீடு | *18.38* | *18.38* | *100%* |
| *118-2-03-079-2202* | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி (அபிவிருத்தி நிதியுதவி) | *225.00* | *70.43* | *31%* |
| | பன்றி வளர்ப்புத் துறையை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | *16.11* | *3.42* | *21%* |
| | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | *69.59* | *11.68* | *17%* |
| | எருமை மாடு வளர்ப்பு அபிவிருத்தி செயற்திட்டம் | *30.81* | *0.50* | *2%* |

| செலவுத் தலைப்பு இலக்கம் | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் |
|---|---|---|---|---|
| | பாற் பசு வளர்ப்பு அபிவிருத்தி செயற்திட்டம் | 29.87 | - | - |
| | ஆடு வளர்ப்பு அபிவிருத்தி செயற்திட்டம் | 25.08 | 6.54 | 26% |
| | திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 5.54 | 0.30 | 5% |
| | நிதிப் பொறுப்புகள் - பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாற் பண்ணைகளை ஊக்குவித்தல் | 16.88 | 16.88 | 100% |
| | நிதிப் பொறுப்புகள் - 2022 ஆண்டின் திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு அமைவாக பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக வழங்கப்பட்ட ஒதுக்கீடு | 31.12 | 31.12 | 100% |

*5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் – (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்)*

*5.1.1 கால்நடை வள அபிவிருத்தி இடைக்கால நிகழ்ச்சித் திட்டம்*

*கால்நடை வளத் துறையை விருத்தி செய்வதற்கு வட மாகாணத்தில் காணப்படும் சாத்தியப்பாடுகளை கருத்தில் கொண்டு கால்நடை வைத்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதன் மூலம் கால்நடை வளத் துறையில் சேவை வழங்கலை மேம்படுத்தும் நோக்கில் இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.*

*2022 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட "யாழ்ப்பாணம் திருநெல்வேலி பல்நோக்குக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக" 6.62 மில். ரூபாய் பெறுமதியான இறுதி விலைப்பட்டியல் இந்த வருடத்தில் செலுத்தப்பட்டது.*

*"பருத்தித்துறை கால்நடை வைத்திய அலுவலக கட்டிடத்தை மீள் நிர்மாணம் செய்தல் – II ஆம் கட்டம்" எனும் செயற்திட்டத்திற்கு 2023 ஆம் ஆண்டில், 25.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வடமாகாண நீர்ப்பாசனம்/ கட்டிடங்கள் திணைக்களம் என்பவற்றின் ஊடாகவும் குறித்த மதிப்பீடு பெறப்பட்டிருந்த போதிலும், அரச செலவின மீளாய்வுக் குழுவின் (PERC) அறிவுறுத்தலின்படி இந்த ஆண்டு மே மாதம் இந்த செயற்திட்டத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டது.*

*மேலும், 2022 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதிசார் பொறுப்புகளைத் தீர்ப்பதற்காக 18.38 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.*

*5.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி (அபிவிருத்தி நிதியுதவி)*

*5.2.1. பன்றி வளர்ப்புத் துறையை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்*

*சூழல் பிரச்சினைகளைக் குறைத்து பன்றி வளர்ப்புத் துறையைய மேம்படுத்துவதற்குத் தேவையான உள்ளீடுகளை வழங்கும் நோக்கத்துடன் 2023 ஆம் ஆண்டில் இந்தச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, 2023 ஆம் ஆண்டுக்கு 9.17 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 45 பன்றி வளர்ப்புப் பண்ணைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. மீளாய்வுக் காலஎல்லை நிறைவுறும் நிலையில், 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிதிசார் பொறுப்புகளுக்குரிய 3.42 மில். ரூபாய் பெறுமதியான தொகை செலுத்தப்பட்டுள்ளது.*

*மீளாய்வுக் காலஎல்லை நிறைவுறும் நிலையில், முறையான கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்யும் முறையொன்றை நிறுவுதல், வளர்ப்பு இல்லங்களின் வசதிகளை விருத்தி செய்தல் ஆகிய செயற்பாடுகளுக்காக சூழல் நட்பு பண்ணையொன்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரச பங்களிப்பாக ஒரு பண்ணைக்கு அதிகபட்சமாக 0.2 மில். ரூபாய் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பயனாளிகளின் பங்களிப்பு மொத்த செயற்திட்ட மதிப்பில் 50% ஆகும். 2023 செப்டம்பர் 30 ஆம் திகதிக்குள், 45 சூழல் நட்பு பன்றி வளர்ப்புப் பண்ணைகளின் செயற்திட்ட அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், 3.3 மில். ரூபாய் முற்பணத் தொகையாக மாகாணங்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*மேலும், செப்டம்பர் 2023 இல் மேற்கொள்ளப்பட்ட செயல் திட்டத் திருத்தத்திற்கு அமைவாக, பொரலந்த பன்றி இனவிருத்திப் பண்ணையை விருத்தி செய்வதற்காக 3.15 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் - 09*

*5.2.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழி வளர்ப்புப் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்*

*கோழி உற்பத்திப் பொருட்களில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்கு கோழி வளர்ப்புப் பண்ணைகளை நிறுவுதல், கோழி உற்பத்திப் பொருட்களின் நுகர்வை பிரபல்யப்படுத்துதல் மற்றும் கோழி வளர்ப்புத் துறை நோக்கி புதிய தொழில் முனைவோரை ஈர்த்தல் ஆகியவை இந்த செயற்திட்டத்தின் நோக்கங்களாகும்.*

*தற்போது நாட்டில் நிலவும் கோழிக் குஞ்சுகளின் அதிக கேள்விக்கு தீர்வாக, குஞ்சுகளை தாராளமாகக் கிடைக்கச் செய்யும் நோக்கில், இந்த செயற்திட்டத்தின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் கரந்தகொல்ல பண்ணையை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ், குஞ்சு பொரிப்பகத்துக்குத் தேவையான கருவிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் பண்ணையின் உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்பவற்றுக்காக கோழிப் பண்ணைகளை திருத்தியமைக்கும் பணிகளுக்கு 18.65 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. குஞ்சு பொரிப்பகத்துக்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதுடன் தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் தற்போது முடிவடைந்துள்ளன. கோழிப் பண்ணைகளை திருத்தியமைப்பதுடன் தொடர்பான பெறுகை நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன.*

*கிராமப்புற மக்களிடையே முட்டை தாராளாமாகக் கிடைக்கும் தன்மையை ஏற்படுத்தல் மற்றும் போசணைக் குறைபாட்டை நீக்குதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு பயனாளிக்கும் ஒரு மாத வயதுடைய 10 குஞ்சுகள் வழங்கப்படும், மேலும் பயனாளிகள் கோழிக் கூண்டுகளைத் தயார் செய்துகொள்வதுடன் குஞ்சுகளுக்குத் தேவையான உணவுகளை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். இந்த செயற்பாடுகளுக்காக 38.86 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு*

*செய்யப்பட்டுள்ளதுடன் அனைத்து மாகாணங்களுக்கும் முற்பணமாக 25.02 மில். ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. முற்பணம் வழங்கப்பட்ட மாகாணங்களில் இந்த செயற்திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது.*

*மீளாய்வுக் காலஎல்லை நிறைவுறும் நிலையில், 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிதிசார் பொறுப்புகளுக்குரிய 11.58 மில். ரூபாய் பெறுமதியான தொகை செலுத்தப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் - 10*

*5.2.3. எருமை மாடு வளர்ப்பு அபிவிருத்தி செயற்திட்டம்*

*ஊட்டச் சத்து வறுமையை ஒழிப்பதன் முக்கியத்துவம் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் அதன் பங்களிப்பு ஆகியவற்றின் காரணமாக, 2023 ஆம் ஆண்டில் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவின் ஒரு முக்கிய செயற்திட்டமாக நாடாளாவிய ரீதியில் மாகாண மட்டத்தில் எருமை மாடு வளர்ப்பு அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆண்டில் 60 எருமை மாடு வளர்ப்பு அபிவிருத்தி செயற்திட்டங்களைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டதுடன் இதற்கான உத்தேச முதலீடு 30.81 மில். ரூபாய் ஆகும்.*

*இலங்கையின் அனைத்து விவசாய காலநிலை வலயங்களிலும் எருமை மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. பல எருமை மாட்டு மந்தைகள் திறந்தவெளியில் வளர்க்கும் முறையில் (Extensive Management) நிர்வகிக்கப்படுகின்றன, இதன் காரணமாக பண்ணையின் உகந்த உற்பத்தி கொள்ளளவை அடைவதில் சிரமங்கள் காணப்படுகின்றன. எனவே, இனவிருத்தி மற்றும் ஊட்டச்சத்து என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் பண்ணை உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுவதுடன் தனியார் எருமை மாட்டுப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கு பண்ணை ஒன்றுக்கு அரச பங்களிப்பாக அதிகபட்சமாக 0.5 மில். ரூபாய் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பயனாளிகளின் பங்களிப்பு மொத்த செயற்திட்ட மதிப்பில் 50% இருக்கும். 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்குள், 88 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான எருமை மாடு வளர்ப்பு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளதுடன் மீளாய்வுக் காலஎல்லை நிறைவுறும் நிலையில், 8.2 மில். ரூபாய் பெறுமதியான முற்பணத் தொகையை மாகாண பணிப்பாளர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் - 11*

*5.2.4. கறவை மாடு (பாற் பசு) வளர்ப்பு அபிவிருத்தி செயற்திட்டம்*

*2023 செப்டம்பர் மாதத்தில் திருத்தப்பட்ட செயல் திட்டத்தின்படி, கறவை மாடு வளர்ப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் இரண்டு பிரதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது இந்த செயற்திட்டத்தினூடாக கிழக்கு மாகாணத்தில் உள்ள உப்புவெளி பண்ணையை மையப்படுத்தி கறவை மாடுகளைப் பாதுகாக்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த 10.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டணத்துக்கு மேற்கொள்ளப்படும் அதிக செலவினத்துக்கு நீண்டகாலத் தீர்வாக சூரியசக்தி மின்சுற்றுகளை நிறுவும் செயற்திட்டங்களுக்கு மேல் மாகாணத்தில் உள்ள கொட்டதெனிய கோழி இனவிருத்தி அலகுக்கு 10.00 மில். ரூபாய் மற்றும் வடமத்திய மாகாணத்தின் திறப்பனை விலங்குப் பண்ணைக்கு 9.00 மில் ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.*

*5.2.5. ஆடு வளர்ப்பு அபிவிருத்தி செயற்திட்டம்*

*2023 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் திருத்தப்பட்ட செயல் திட்டத்திற்கு அமைவாக ஆரம்பிக்கப்படவிருந்த ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராம செயற்திட்டமானது, திறைசேரியில் நடைபெற்ற அரச செலவின மீளாய்வுக் குழுவின் ஆலோசனையின் பிரகாரம், 2023 ஆம் ஆண்டில் செயற்படுத்தாது இடைநிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டது. எனினும் 2023 ஆம் ஆண்டு செபடம்பர் மாதத்தில் திருத்தப்பட்ட செயல் திட்டத்தின்படி, கால்நடை வள அபிவிருத்திப் பிரிவின் கீழ் செயற்படுத்தத் தீர்மானிக்கப்பட்ட இந்த செயற்திட்டத்திற்காக கிழக்கு, வடமேற்கு*

*மற்றும் வட மாகாணங்களுக்கு 18.54 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கிழக்கு மாகாணத்தில் இரண்டு ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராம செயற்திட்டமும், வடமேற்கு மற்றும் வட மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராம செயற்திட்டமும் உருவாக்கப்படவுள்ளன.*

*இவற்றுக்கு மேலதிகமாக, 2022 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராம செயற்திட்டத்துடன் தொடர்பான நிதிசார் பொறுப்புகளுக்காக செலுத்த வேண்டியிருந்த 6.54 மில். ரூபாய் நிதியானது இந்த வருடத்திற்கான ஒதுக்கீடுகளில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது.*

*5.2.6. திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*இதன் கீழ், அதிகாரிகள், இளைஞர் தொழில்முனைவோர் மற்றும் விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு தொடர்பான சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள் (Good Management Practices in Animal Husbandry) பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் மற்றும் கால்நடை வளக் கொள்கைகள் (பால் பண்ணைத் தொழிற் துறைக்கான தேசியக் கொள்கை அறிக்கை, பன்றி வளர்ப்புத் தொழிற்துறை தொடர்பான கொள்கை அறிக்கை, கோழி வளர்ப்புத் தொழிற் துறைக்கான கொள்கை அறிக்கை) தயாரிக்கும் செயற்பாடும் இதில் பிரதானமாகக் காணப்படுகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடாக 5.54 மில். ரூபா வழங்கப்பட்டதுடன் அதில் 0.30 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*5.2.7. 2022 ஆம் ஆண்டின் நிதிசார் பொறுப்புகள்*

*a***).** *2022 ஆம் ஆண்டின் நிதிசார் பொறுப்புகளின் கீழ் பயனுறுதித் தன்மையை அதிகரித்தலுடன் தொடர்பான சிறிய மற்றும் மத்திய தரத்திலான பாற் பண்ணைகளை ஊக்குவிக்கும் செயற்திட்டம்*

*2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட, பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதன் மூலம் சிறிய மற்றும் மத்திய தரத்திலான பாற் பண்ணைகளை ஊக்குவிக்கும் செயற்திட்டத்திற்கு வழங்க வேண்டியிருந்த 16.88 மில். ரூபாய் பெறுமதியான தொகை இதனூடாக வழங்கப்பட்டுள்ளது.*

*b***).** *2022 ஆம் ஆண்டின் நிதிசார் பொறுப்புகளின் 2022 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு மதிப்பீட்டின் மூலம், பால் உற்பத்தியை அதிகரிக்கும் செயற்திட்டம்*

*2022 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம், வீடுகளில் மேற்கொள்ளும் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய நிதிசார் பொறுப்புகளாக, ரிதியகம பண்ணையின் விலங்கு உணவு உற்பத்திக்காக சோள உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு செலுத்த வேண்டியிருந்த 20.45 மில். ரூபாய் தொகையையும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சோள உற்பத்திச் செயற்திட்டத்திற்கு செலுத்தப்படவிருந்த 10.67 மில். ரூபாய் நிதியும் இதனூடாக வழங்கப்பட்டன.*

*06. மேலதிக பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-071-2202*

*2023 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 100.00 மில். ரூபாய் ஆகும். 2022 ஆம் ஆண்டில் நிலுவையில் உள்ள விலைப் பட்டியல்களுக்கு செலவிடப்பட்ட தொகை 7.27 மில். ரூபாய் ஆகும். 2023 ஆண்டில் மீதமுள்ள 92.73 மில். ரூபாய் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி சுமார் 15,500 பயனாளிகளைக் கொண்டு 2,800 ஹெக்டேர் உளுந்து மற்றும் பாசிப்பயறு ஆகிய பயிர் வகைகளை பயிரிட நடவடிக்கை மேற்கொள்வதுடன் இதன் மூலம் 2,100 - 2,500 மெற்றிக்தொன் அறுவடை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த செயற்திட்டங்கள் மாவட்டச்*

செயலாளர்களின் வழிகாட்டலின் கீழ் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பின் ஊடாக மாவட்ட விவசாயப் பணிப்பாளர்களின் வழிகாட்டலில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. 30.09.2023 ஆம் திகதி வரையிலான இதன் முன்னேற்றம் பின்வருமாறு.

<u>உளுந்துப் பயிர்ச் செய்கை</u>

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, குருநாகல், பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, இரத்தினபுரி, அனுராதபுரம் மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்கு 21.36 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் 859 ஹெக்டேர் நிலத்தில் பயிரிட 4,118 பயனாளிகளுக்க்கு 21,291 கிலோ விதைகள் பயிரிட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

<u>பாசிப்பயறு பயிர்ச் செய்கை</u>

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, குருநாகல், பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, இரத்தினபுரி, அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்கு 57.31 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், 7,213 பயனாளிகளுக்கு, 1,528 ஹெக்டேர் நிலத்தில் பயிரிட, 37,460 கிலோ விதைகளை வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

- உளுந்து மற்றும் பாசிப்பயறுப் பயிர்ச் செய்கை செயற்திட்டம் - 30.09.2023 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம்

| தொ / இ | மாவட்டம் | பயிர் வகை | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மில். ரூபாய் | 2022 நிலுவையிலுள்ள விலைப்பட்டியல் மில். ரூபாய் | பயனாளர் எண்ணிக்கை | அங்கீகாரமளிக்கப்பட்ட விதை அளவு (கி. கிராம்) | விதைகளுக்கு அங்கீகாரமளிக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்) | பயிர்ச் செய்கை மேற்கொள்ள உத்தேசித்துள்ள நிலப்பரப்பு (ஏக்கர்) | நிதிசார் முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | செலவுகள் (மில். ரூபாய்) | செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்கள் 2023 மில். ரூபாய் |
| 1 | யாழ் | உளுந்து | 4.50 | | 397 | 1,131.25 | 1.13 | 113.25 | | |
| | | பாசிப்பயறு | | | 646 | 1,924.75 | 3.23 | 196.96 | | |
| | | மொத்தம் | | | 1,043 | 3,056.00 | 4.37 | 310.20 | | |
| 2 | கிளிநொச்சி | உளுந்து | 6.50 | | 417 | 2,495.00 | 2.50 | 249.50 | | |
| | | பாசிப்பயறு | | | 336 | 2,172.50 | 3.65 | 217.25 | | |
| | | மொத்தம் | | | 753 | 4,667.50 | 6.15 | 466.75 | | |
| 3 | மன்னார் | உளுந்து | 7.50 | | 100 | 750.00 | 0.75 | 75.00 | | |
| | | பாசிப்பயறு | | | 611 | 3,900.00 | 6.55 | 390.00 | | |
| | | மொத்தம் | | | 711 | 4,650.00 | 7.30 | 465.00 | | |
| 4 | முல்லைத்தீவு | உளுந்து | 7.50 | | 815 | 3,637.50 | 3.64 | 363.75 | | |
| | | பாசிப்பயறு | | | 611 | 2,102.50 | 3.64 | 210.25 | | |
| | | மொத்தம் | | | 1,426 | 5,740.00 | 7.28 | 574.00 | | |
| 5 | வவுனியா | உளுந்து | 8.43 | 1.07 | 1,322 | 8,039.20 | 8.04 | 803.92 | | |
| | | பாசிப்பயறு | | | 13 | 85.00 | 0.14 | 8.50 | | |
| | | மொத்தம் | | | 1,335 | 8,124.20 | 8.18 | 812.42 | | |
| 6 | குருநாகல் | உளுந்து | 5.00 | | 175 | 768.00 | 0.77 | 96.00 | | |
| | | பாசிப்பயறு | | | 606 | 2,788.00 | 4.08 | 348.50 | | |

| தொ / இ | மாவட்டம் | பயிர் வகை | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மில். ரூபாய் | 2022 நிலுவையிலுள்ள விலைப்பட்டியல் மில். ரூபாய் | பயனாளர் எண்ணிக்கை | அங்கீகாரமளிக்கப்பட்ட விதை அளவு (கி. கிராம்) | விதைகளுக்கு அங்கீகாரமளிக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்) | பயிர்ச் செய்கை மேற்கொள்ள உத்தேசித்துள்ள நிலப்பரப்பு (ஏக்கர்) | நிதிசார் முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | செலவுகள் (மில். ரூபாய்) | செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்கள் 2023 மில். ரூபாய் |
| | | மொத்தம் | | | 781 | 3,556.00 | 4.85 | 444.50 | | |
| 7 | பொலன்னறுவை | உளுந்து | 7.00 | | 68 | 228.75 | 0.30 | 22.88 | | |
| | | பாசிப்பயறு | | | 1,104 | 4,386.50 | 5.74 | 438.75 | | |
| | | மொத்தம் | | | 1,172 | 4,615.25 | 6.04 | 461.63 | | |
| 8 | திருகோணமலை | உளுந்து | 5.50 | | 206 | 1,159.79 | 1.16 | 115.98 | | |
| | | பாசிப்பயறு | | | 377 | 2,289.70 | 4.01 | 228.98 | | |
| | | மொத்தம் | | | 583 | 3,449.49 | 5.17 | 344.96 | | |
| 9 | மட்டக்களப்பு | உளுந்து | 6.00 | | 497 | 2,450.00 | 2.45 | 245.00 | | |
| | | பாசிப்பயறு | | | 516 | 2,360.00 | 3.38 | 236.00 | | |
| | | மொத்தம் | | | 1,013 | 4,810.00 | 5.83 | 481.00 | | |
| 10 | அம்பாறை | உளுந்து | 5.30 | 6.20 | 18 | 120.00 | 0.12 | 12.00 | | |
| | | பாசிப்பயறு | | | 624 | 3,541.25 | 5.08 | 354.13 | | |
| | | மொத்தம் | | | 642 | 3,661.25 | 5.20 | 366.13 | | |
| 11 | மொனராகலை | உளுந்து | 3.50 | | 27 | 200.00 | 0.20 | 20.00 | | |
| | | பாசிப்பயறு | | | 258 | 1,525.00 | 2.64 | 152.50 | | |
| | | மொத்தம் | | | 285 | 1,725.00 | 2.84 | 172.50 | | |
| 12 | இரத்தினபுரி | உளுந்து | 4.00 | | 10 | 67.50 | 0.07 | 6.75 | | |
| | | பாசிப்பயறு | | | 398 | 2,331.00 | 3.88 | 233.00 | | |
| | | மொத்தம் | | | 408 | 2,398.50 | 3.95 | 239.75 | | |
| 13 | அனுராதபுரம் * | உளுந்து | 8.00 | | | | | | | |
| | | பாசிப்பயறு | | | | | | | | |
| | | மொத்தம் | | | | | | | | |
| 14 | ஹம்பாந்தோட்டை | உளுந்து | 10.00 | | - | - | - | - | | |
| | | பாசிப்பயறு | | | 827 | 6,734 | 9.70 | 673.40 | | |
| | | மொத்தம் | | | 827 | 6,734 | 9.70 | 673.40 | | |
| 15 | பதுளை | உளுந்து | 4.00 | | 66 | 244.50 | 0.25 | 24.50 | | |
| | | பாசிப்பயறு | | | 286 | 1,320.00 | 2.28 | 132.00 | | |
| | | மொத்தம் | | | 352 | 1,564.50 | 2.53 | 156.50 | | |
| | மொத்தம் | உளுந்து | | 7.27 | 4,118 | 21,291.49 | 21.36 | 2,148.520 | | |
| | | பாசிப்பயறு | | | 7,213 | 37,460.20 | 57.04 | 3,820.20 | | |
| | மொத்த கூட்டுத்தொகை | | 92.73 | 7.27 | 11,331 | 58.751.69 | 78.396 | 5,968.72 | 49.21 | 39 .90 |

* பயனாளிகளை தெரிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## *07.* ஆடு வளர்ப்பு செயற்திட்டம் - செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-080-2202*

*2023* ஆம் ஆண்டில் அங்கீகாரம் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை *150.00* மில். ரூபாய் ஆகும். *2022* ஆம் ஆண்டில் நிலுவையில் உள்ள விலைப் பட்டியல்களுக்கு செலவிடப்பட்ட தொகை *0.64* மில். ரூபாய் ஆகும். *2023* ஆம் ஆண்டிற்கான மீதமுள்ள ஒதுக்கீட்டுத் தொகை *149.36* மில். ரூபாய் ஆகும். *18* மாவட்டங்களில் மாவட்டச் செயலாளரின் மேற்பார்வையிலும், மாத்தளை மாவட்டத்தில் மத்திய மாகாண பிரதம செயலாளர்களின் மேற்பார்வையின் கீழும் கால்நடை வைத்திய அதிகாரிகளினால் இந்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பயனாளிக் குடும்பம் ஒன்றுக்கு மூன்று ஆடுகளைப் பெற்றுக்கொள்ள *75,000.00* ரூபாய் வீதம் இந்தச் செயற்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகிறது. அதன்படி, *1,921* பயனாளிக் குடும்பங்களுக்கு *5,763* ஆடுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஒதுக்கீடு *19* மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டதுடன் இதன் *30.09.2023* ஆம் திகதிக்கான முன்னேற்றம் பின்வருமாறு.

| தொ / இ | மாவட்டம் | அங்கீகரிக்கப்பட்ட விதம் | | | | | ஆடுகள் பகிர்ந்தளிப்பதன் முன்னேற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மில். ரூபா | 2022 செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்கள் மில். ரூபாய் | 2023 ஆண்டின் புதிய செயற்திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | பயனாளர் குடும்பங்களின்எண்ணிக்கை | ஆடுகளின் எண்ணிக்கை | பயனாளர் குடும்பங்களின்எண்ணிக்கை | ஆடுகளின் எண்ணிக்கை | செலவுகள் மில். ரூபாய் | செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்கள் - 2023 (மில். ரூபா) |
| 1. | திருகோணமலை | 8.00 | - | 8.00 | 103 | 309 | 29 | 83 | | |
| 2. | மட்டக்களப்பு | 10.00 | - | 10.00 | 129 | 387 | 129 | 392 | | |
| 3. | அம்பாறை | 10.00 | - | 10.00 | 129 | 387 | 96 | 288 | | |
| 4. | பொலன்னறுவை | 5.00 | - | 5.00 | 64 | 192 | 8 | 24 | | |
| 5. | வவுனியா | 13.00 | 0.64 | 11.36 | 159 | 477 | 50 | 117 | | |
| 6. | முல்லைத்தீவு | 13.00 | - | 13.00 | 168 | 504 | 168 | 504 | | |
| 7. | கிளிநொச்சி | 5.00 | - | 5.00 | 64 | 192 | 42 | 126 | | |
| 8. | மன்னார் | 10.00 | - | 10.00 | 129 | 387 | - | - | | |
| 9. | யாழ்ப்பாணம் | 6.00 | - | 6.00 | 77 | 231 | 77 | 231 | | |
| 10. | புத்தளம் | 6.00 | - | 6.00 | 77 | 231 | - | - | | |
| 11. | குருநாகல் | 7.00 | - | 7.00 | 90 | 270 | 6 | 18 | | |
| 12. | களுத்துறை | 6.00 | - | 6.00 | 77 | 231 | 77 | 231 | | |
| 13. | ஹம்பாந்தோட்டை | 18.00 | - | 18.00 | 232 | 696 | 106 | 318 | | |
| 14. | மாத்தறை | 5.00 | - | 5.00 | 64 | 192 | 59 | 177 | | |
| 15. | காலி | 7.00 | - | 7.00 | 90 | 270 | 39 | 117 | | |
| 16. | மாத்தளை | 5.00 | - | 5.00 | 64 | 192 | - | - | | |
| 17. | கேகாலை | 5.00 | - | 5.00 | 64 | 192 | - | - | | |
| 18. | இரத்தினபுரி | 5.00 | - | 5.00 | 64 | 192 | 34 | 102 | | |
| 19. | மொனராகலை | 6.00 | - | 6.00 | 77 | 231 | - | - | | |
| | மொத்தம் | 150.00 | 0.6419 | 149.36 | 1,921 | 5,763 | 920 | 2,728 | 46.23 | 18.01 |

*08.* தேசிய உர முகாமைத்துவ தகவல் தொகுதி - செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-075-2506*

| தொ/இ | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | *2023* ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | *30.09.2023* ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் |
|---|---|---|---|---|
| | தேசிய உர முகாமைத்துவ தகவல் தொகுதி | *20.00* | *7.90* | *39.5* |

- பௌதீக முன்னேற்றம்

மேற்படி செயற்திட்டத்திற்கு *2023* ஆம் ஆண்டின் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் *20.00* மில். ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் விவசாயத் துறைக்கு தரமான உர விநியோகத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் உரப் பிரிவின் சிறந்த முகாமைத்துவத்தை உறுதி செய்வதற்காக இந்த முகாமைத்துவ தகவல் அமைப்பு உருவாக்கப்படுகிறது. *1988* ஆம் ஆண்டின் *68* ஆம் இலக்க உர ஒழுங்குறுத்துகைச் சட்டத்தால் நிறுவப்பட்ட தேசிய உரச் செயலகத்தால் இந்த முகாமைத்துவத் அமைப்பை உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்த தகவல் முகாமைத்துவ அமைப்பு *04* பிரதான தொகுதிகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு,

*i.)* உரத் தேவை மதிப்பீட்டுத் தொகுதி

*ii.)* உர உற்பத்தி மற்றும் இறக்குமதித் தொகுதி

*iii.)* உர விநியோகம் மற்றும் இருப்பு கட்டுப்பாட்டுத் தொகுதி

*iv.)* நிதிசார் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்யும் தொகுதி

இந்த அமைப்பின் மூலம், விவசாயத்திற்குத் தேவையான உரத்தின் தேவையை மதிப்பிடுவது முதல் விவசாயிக்கு உரம் விநியோகம் செய்வது வரையிலான அனைத்து செயற்பாடுகளையும், அதாவது.

*i.)* உரங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமங்களை வழங்குதல்

*ii.)* தரக் கட்டுப்பாடு

*iii.)* ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகளைப் பெறல்

ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் அமைப்பின் பணிகள் பூரணமாக நிறைவுற்றதன் பின் *National Dash Board of Fertilizer* தயாரிக்கப்பட்டு தானியக்க இற்றைப்படுத்தலுக்குச் சமர்ப்பிக்கப்படும். இதுவரை தகவல் அமைப்பின் நிரலாக்கும் பணிகளில் சுமார் *80%* நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டு இறுதிக்குள் அதன் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*09.* பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் - செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-026-2507 (SLCARP)*

இது நிறுவனங்களின் கீழ் தரப்பட்டுள்ளது.

*10.* இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை - செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-065-2201*

இது நிறுவனங்களின் கீழ் தரப்பட்டுள்ளது.

*11.* இலங்கை உரக் கம்பனியின் உர ஆய்வுகூடத்தை விருத்தி செய்தல் - செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-076-2506*

*2023* வரவுசெலவு மதிப்பீட்டின் மூலம் செலவுத் தலைப்பு இலக்கம் *118-02-03-076-2506* இன் கீழ் இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை *9.0* மில். ரூபாய் ஆகும். வத்தளை, ஹுனுப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள இலங்கை உரக் கம்பனியின் ஆய்வுகூடத்திற்குத் தேவையான நவீன ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் மனித வளங்களை வழங்குவதன் மூலம் அதன் பரிசோதனை வசதிகள் உள்ளிட்ட அதன் றனை விருத்தி செய்வதே இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

| தொ/இ | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | *2023* ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | *30.09.2023* ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் |
|---|---|---|---|---|
| | இலங்கை உரக் கம்பனியின் உர ஆய்வுகூடத்தை விருத்தி செய்தல் | *9.00* | *5.29* | *58.78%* |

<u>பௌதீக முன்னேற்றம்</u>

இந்த செயற்திட்டத்திற்குத் தேவையான உபகரணங்கள் அனைத்தும் கொள்வனவு செய்யப்பட்டு இந்த செயற்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

*12.* அறுவடைக்குப் பிந்தைய சேதத்தைக் குறைத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலை விருத்தி செய்தல் - செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-083-2506 ****

இது நிறுவனங்களின் கீழ் தரப்பட்டுள்ளது.

*13.* விவசாயிகளுக்கான பங்களிப்புக் காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தல் - செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-043-2202*

இது நிறுவனங்களின் கீழ் தரப்பட்டுள்ளது.

# செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் மீண்டுவரும் செலவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

## *1. உர மானிய நிகழ்ச்சித் திட்டம்*

*இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2023 ஆம் ஆண்டிற்கு 118-2-03-021-1504 ஆம் செலவுத் தலைப்பின் கீழ் 56,263 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் கீழ், 2022/ 2023 பெரும் போகத்தில், நெற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மானிய விலையில் யூரியா உரம் வழங்கப்பட்டதுடன், மாவட்ட செயலகங்களுக்கு அதிகபட்சமாக 02 ஹெக்டயருக்கு உட்பட்ட நிலங்களுக்கு சூழல் நட்பு உரமும் வழங்கப்பட்டது. இந்தப் போகத்தில் நெற் செய்கை மேற்கொண்ட மொத்த நிலப்பரப்பு 804,171.80 ஹெக்டயர் ஆகக் காணப்பட்டதுடன் வழங்கபட்ட யூரியா உரத்தின் அளவு 95,692.27 மெற்றிக் தொன் ஆகும். இதன் மூலம் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 1,035,518 ஆகும்.*

*2023 சிறு போகம்*

*மேலும், 2023 சிறு போகத்தில் நெற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஹெக்டயர் ஒன்றுக்கு 20,000 ரூபாய் வீதம் அதிகபட்ச செய்கை நிலப்பரப்பான இரண்டு ஹெக்டயருக்கு உர வகைகளைக் கொள்வனவு செய்வதற்காக 40,000 ரூபாய் பெறுமதியான உறுதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன.*

*நெற் செய்கை மேற்கொள்வதற்குத் தேவையான யூரியா, எம்ஓபி அல்லது சேதன உர வகைகளைக் கொள்வனவு செய்வதற்காக இந்த உறுதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன. இது தவிர, உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிதியுதவியின் கீழ் வழங்கப்பட்ட டிஎஸ்பி உரம் அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக வழங்கப்பட்டது.*

*அதன்படி, இந்தப் போகத்தில் 506,354.58 ஹெக்டயர் நிலப் பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன், வழங்கப்பட்ட யூரியா உரத்தின் அளவு 48,572.40 மெற்றிக் தொன் ஆகும். இதன் மூலம் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 778,907 ஆகும்.*

# கமத்தொழில் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட செயற்திட்டங்கள்

## 1. " தேசிய விவசாயக் கொள்கையை" உருவாக்குதல்

*சுபீட்சத்தின் நோக்கு அரச கொள்கை பிரகடனத்தின் நோக்கங்களுக்கு இணங்க, தங்கி வாழும் பொருளாதாரத்திற்குப் பதிலாக உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்கும் பொருட்டு விவசாயத் துறையின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் தேசிய விவசாய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. மேலும், உணவுத் தொகுதிகளை நிலைபேறான விதத்தில் பாதுகாத்தல், பசுமை விவசாயத்தை ஊக்குவித்தல், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல், பயிர்கள் மற்றும் விளைச்சலைப் பாதுகாத்தல் மற்றும் உள்நாட்டில் தன்னிறைவடைந்து ஏற்றுமதியைப் பிரதானமாகக் கொண்ட விவசாய தொழில்முனைவோரை கட்டியெழுப்புவதற்காக இளைஞர் சமூகத்தை விவசாயத்தின் பல்வேறு துறைகளை நோக்கி ஈர்ப்பத்தல் உளிட்ட துறைகளில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.*

- *பௌதீக முன்னேற்றம் (30.09.2023 ஆம் திகதி வரையில்)*

*10 தலைப்புகளின் கீழ் 13 இலக்குகளை பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்ட "தேசிய விவசாய கொள்கை" 30.09.2023 ஆம் திகதியளவில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

## 2. சீன மக்கள் குடியரசின் அவசரகால மானியங்களின் கீழ் விவசாயத்திற்கான டீசல் மானிய நிகழ்ச்சித் திட்டம்

*சீன அரசாங்கம் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைக்கு அவசரகால மானியத்தின் கீழ் 9,000 மெற்றிக் தொன் (10.6 மில்லியன் லீட்டர்) டீசலை வழங்கியது. அதில், விவசாய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 6,840,000 லீற்றர் டீசல் 2022/2023 ஆம் ஆண்டின் சிறு போகம் மற்றும் பெரும் போகத்தின் போது விவசாயிகளுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.*

*இதன்படி, நெற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளில் ½ ஏக்கரை விடக் கூடிய 2½ ஏக்கரை விடக் குறைந்த வயற் காணிகளைக் கொண்டவர்களுக்கு அதிகபட்சமாக 15 லிட்டர் டீசல் வரை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்படும் பெயர்ப் பட்டியலை அடிப்படையாகக்கொண்டு, இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தின் பங்கேற்புடன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ஊடாக இதற்குத் தகுதியான விவசாயிகளுக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

*இதுவரை 4,708,308.00 லீட்டர் டீசல் விவசாயிகளுக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் மேற்கொண்ட நெற் செய்கை நிலப் பரப்பு 509,478 ஹெக்டயர் ஆகும். இதன் மூலம் பயனடைந்த விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 676,244 ஆகும்.*

*இந்த எரிபொருளை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு விநியோகஸ்தர்களுக்கு வழங்கிய தள்ளுபடி மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள் என்பவற்றுக்கு அரசாங்கத்தால் செலவிடப்பட்ட தொகை 83,58 மில். ரூபாய் ஆகும்.*

*சீன அரசாங்கம் அவசரகால மானியத்தின் கீழ் இலவசமாக வழங்கிய எரிபொருளை விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதன் மூலம் தேசிய உற்பத்திக்குப் பங்களிப்பதற்கும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவுவதற்கும் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.*

## 3. இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி என்பவற்றை ஒன்றிணைத்தல்

அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக, நிதி அமைச்சு, கமத்தொழில் அமைச்சு மற்றும் உர நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் ஊடாக அரச உர நிறுவனங்களை ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இந்த ஆண்டு இறுதிக்குள் அதன் பணிகள் முடிவடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் கீழ் நிறைவு செய்யப்படுள்ள அடிப்பட செயற்பாடுகளாவன, நிறுவனங்களை ஒன்றிணைக்கும் பணிகள், பணியாளர் ஆளணி, கடமைகள் மற்றும் பொறுப்புகள், சொத்துக்கள், எதிர்கால நிலைகளின் சாத்தியக்கூறு பற்றிய ஆய்வுகள், புதிய நிறுவனத்திற்கு ஒரு பெயரை முன்மொழிதல் மற்றும் கம்பனிப் பதிவாளரால் தெரிவு செய்த பெயரைப் பயன்படுத்த முடியும் என்பதை உறுதி செய்தல், புதிய நிறுவனத்திற்கு கூட்டுத் திட்டமொன்றைத் தயாரிக்க ஒரு ஆலோசனை நிறுவனத்தை தெரிவு செய்தல் என்பனவாகும்.

## 4. விஷேட பொருளாதார மையங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள்

இலங்கையில் விசேட பொருளாதார நிலையங்களை நிறுவுவதற்கான நிகழ்ச்சித் திட்டம் 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், கிராமப்புறங்களில் உள்ள விவசாய உற்பத்தியாளர்களின் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கும் உத்தியாக அவர்களது உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலையை உறுதி செய்தல் மற்றும் நாட்டின் நுகர்வோருக்கு எளிதாகவும் நியாயமான விலைகளில் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பை உருவாக்கும் நோக்கத்துடனும் நாடு முழுவதும் பரந்த விநியோக வலையமைப்பை உருவாக்குவதே இதன் பிரதான நோக்கமாகும். இதுவரை, 18 பொருளாதார மையங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், 13 பொருளாதார மையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. விஷேட பொருளாதார மையங்களின் முறையான செயற்பாட்டை உறுதி செய்வதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், அதன் முறையான செயல்பாட்டைப் பேணுவதற்குத் தேவையான தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல் என்பன இதன் கீழ் மேற்கொள்ளப்படும் முக்கியப் பணிகளாகும்.

அதன்படி, 2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் பின்வருமாறு.

- முகாமைத்துவ நம்பிக்கை நிதியத்துக்கான அங்கத்தவர்களை நியமித்தல் மற்றும் புதுப்பித்தல் (நாரஹேன்பிட்டி, இரத்மலானை, நுவரெலியா, கப்பிட்டிபொல, வெலிசர, வெயங்கொட, பிலியந்தலை, அம்பாறை, குருந்துவத்தை, தம்புள்ளை, தம்புத்தேகம மற்றும் எம்பிலிபிட்டிய)
- பொருளாதார மைய முகாமைத்துவ நம்பிக்கை நிதியத்தை (நம்பிக்கை நிதியப் பத்திரம்) நிறுவுதல் (அம்பாறை, குருந்துவத்தை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா)
- வணிக வளாகங்களை குத்தகைக்கு விடுவது தொடர்பாக அனைத்து பொருளாதார மையங்களுக்கும் பொதுவான குத்தகை ஒப்பந்தங்களைத் தயாரித்தல்
- பொருளாதார மையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் (நுவரெலியா, இரத்மலானை, மீகொட மற்றும் நாரஹேன்பிட்டி) காணி உரிமை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.
- பொருளாதார மைய முகாமைத்துவ அறக்கட்டளையின் கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ளல்.

பொருளாதார மையங்களை அபிவிருத்தி செய்வதற்கு 2023 ஆம் ஆண்டின் திறைசேரி மதிப்பீடுகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு 25.00 மில். ரூபாய் ஆகும். இந்த செயற்திட்டம் இதற்கு முன்னர் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு 116-2-05-009-2506 எனும் செலவுத் தலைப்பின் கீழ்

அங்கீகரிக்கப்பட்டிருந்தது. பின்னர் அந்த ஒதுக்கீடு 2311/42 ஆம் இலக்க மற்றும் 22.12.2022 தேதியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக, கமத்தொழில் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன் மூலம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் விசேட பொருளாதார நிலையங்கள் திறக்கப்படுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய அபிவிருத்திப் பணிகள் மற்றும் மின்சாரம், நீர் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்களை செலுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

*30.09.2023 ஆம் திகதி வரையில் முன்னேற்றம்*

| # | பொருளாதார மையங்கள்/ செயற்பாடுகள் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவுகள் (மில். ரூபாய்) | செலுத்த வேண்டிய விலைப் பட்டியல்கள் மில். ரூபாய் | பௌதீக % |
|---|---|---|---|---|---|
| 1 | மட்டக்களப்பு | 7.613 | 1.779 | 5.519 | |
| | மின்சாரம், நீர் மற்றும் பாதுகாப்பு சேவைக் கட்டணம் செலுத்துதல் | 2.793 | 1.779 | 1.014 | 100 |
| | அத்தியாவசிய திருத்தப் பணிகள் | 4.820 | - | 4.505 | 100 |
| 2 | வவுனியா | 7.617 | 3.126 | 0.791 | |
| | மின்சாரம், நீர் மற்றும் பாதுகாப்பு சேவைக் கட்டணம் செலுத்துதல் | 3.917 | 3.126 | 0.791 | 100 |
| | அத்தியாவசிய திருத்தப் பணிகள் | 3.700 | - | - | 25 |
| 3 | யாழப்பாணம் | 8.797 | 1.414 | 0.901 | |
| | மின்சாரம், நீர் மற்றும் பாதுகாப்பு சேவைக் கட்டணம் செலுத்துதல் | 1.813 | 0.867 | 0.901 | 100 |
| | அத்தியாவசிய திருத்தப் பணிகள் | 5.427 | 0.547 | - | 25 |
| | வேலி அமைத்தல் | 1.557 | - | - | 25 |
| மொத்தம் | | 24.027 | 6.319 | 7.211 | |

தற்போது இயங்கி வரும் விஷேட பொருளாதார மையங்களின் மீண்டுவரும் செலவுகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவைப்படும் மூலதனச் செலவுகள் உரிய முகாமைத்துவ நம்பிக்கை நிதியத்தின் நிதியைப் பயன்படுத்தி முறையான அங்கீகாரங்களுடன் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதன்படி 30.09.2023 வரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு.

| தொ / இ | விஷேட பொருளாதார மையங்கள் | செயற்திட்டம் | எதிர்பார்க்கப் படும் செலவு (மில். ரூபாய் | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் % | பௌதீக % |
| 1 | கெப்பிட்டிப் பொல | வாகனங்கள் வெளியேறும் பாதையை நிர்மாணம் செய்தல் - கட்டம் II | 5.448 | 2.985 | 50 | 100 |
| | | வர்த்தக வளாகத்தை உள்ளடக்கிய வகையில் கூரை யொன்றை அமைத்தல் | 0.500 | - | 0 | 20 |
| 2 | நுவரெலியா | எல்லை வேலி அமைக்கப்பட்டுள்ள கல் சுவரை சரிசெய்தல், வர்ணம் பூசுதல் மற்றும் பூச்சாடிகளுக்கு வர்ணம் பூசுதல் | 2.500 | 1.946 | 100 | 100 |
| 3 | மீகொடை | R- 18, R- 19 வணிக வளாகத்தின் முன் காணப்படும் பக்கச்சுவரை நிர்மாணம் | 0.239 | 0.238 | 100 | 100 |

| தொ / இ | விஷேட பொருளாதார மையங்கள் | செயற்திட்டம் | எதிர்பார்க்கப் படும் செலவு (மில். ரூபாய் | செலவு செய்த தொ கை (மில். ரூபாய்) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் % | பௌதீ க % |
| | | செய்தல். | | | | |
| | | நிர்வாக அலுவலகத்தை திருத்தியமைத்தல். | 0.346 | 0.345 | 100 | 100 |
| | | சிற்றுண்டிச்சாலையின் நுழைவில் உள்ள இரும்புப் படிக்கட்டுகளை திருத்தியமைத்தல் | 0.096 | 0.096 | 100 | 100 |
| | | செலான் வங்கி கழிவறையில் கழிவுநீர்த் தொகுதியை மேம்படுத்துதல் | 0.077 | 0.066 | 100 | 100 |
| | | பொருளாதார மையத்தின் கழிப்பறை தொகுதியை திருத்தியமைத்தல் | 0.627 | 0.536 | 100 | 100 |
| | | பாதுகாப்புப் பணியாளர்களின் உடை மாற்றும் அறையை திருத்தியமைத்தல் | 0.457 | 0.431 | 100 | 100 |
| | | மழைநீர் வடிகால்த் தொகுதிகளை திருத்தியமைத்தல் | 0.530 | - | 0 | 20 |
| | | உப கூட்டுத்தொகை | 10.82 | 6.643 | | |
| 4 | தம்புள்ள | பழைய கழிப்பறை தொகுதிகளை திருத்தியமைத்தல் | 9.011 | 9.685 | 100 | 100 |
| | | கழிப்பறை தொகுதிகளை சூழ பாதுகாப்புச் சுவர் ஒன்றை நிர்மாணித்தல், குளியலறை மற்றும் மேலதிக பழுதுபார்ப்பு நடவைக்கைகள் | 5.451 | 5.700 | 90 | 100 |
| | | மின் பிறப்பாக்கியொன்றைக் கொள்வனவு செய்தல். | 6.940 | - | 0 | 20 |
| 5 | வெலிசர | 1 ஆவது கட்டிடத்திற்கும் கருணாரத்ன பாடசாலைக்கும் இடையில் உள்ள சுவரை திருத்தியமைத்து சுவரின் மேல் மூடு வலையைப் பொருத்தும் செயற்திட்டம் | 1.700 | - | 0 | 80 |
| | | கீர கட்டிடத்திற்கும் கருணாரத்ன பாடசாலைக்கும் இடையில் உள்ள சுவர் இடிந்த நிலையில் காணப்படுவதால் புதிய மதில் சுவர் ஒன்றை அமைக்கும் செயற்திட்டம் | 0.600 | - | 0 | 100 |
| | | சி - வரத்தக கட்டிடத்தை இடித்து அதே நிலத்தில் புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டுதல் | 18.474 | - | 0 | 0 |
| 6 | குறுந்துவத்த | பொருளாதார மையத்தை திருத்தியமைக்கும் பணிகள் | 0.364 | 0.364 | 100 | 100 |
| 7 | இரத்மலானை | A/14 மற்றும் A/15 வர்த்தக வளாகத்தின் தீயில் சேதமடைந்த கூரை மற்றும் மின் தொகுதியை அமைப்பை திருத்தியமைக்கும் பணிகள் | 2.562 | 2.459 | 100 | 100 |
| | | A/14 மற்றும் A/15 வர்த்தக வளாகத்தின் தீயில் சேதமடைந்த CCTV கமெராத் தொகுதியைத் திருத்தியமைக்கும் பணிகள் | 2.163 | - | 0 | 100 |
| | | காவல் நிலையத்திலிருந்து புதிய அலுவலகத்திற்குள்ள பாதையில் கல் பதித்தல் | 1.054 | - | 0 | 100 |
| | | கூரையின் நீர்வடிகால்த் தொகுதியைத் திருத்தியமைக்கும் பணிகள் | 25.390 | - | 0 | 20 |
| | | மழைநீர் தேங்கும் பகுதிகளில் நிலத்தை சரிசெய்தல். | 0.940 | - | 0 | 20 |
| 8 | நாரஹேன்பிட்டி | A,G,H வளாகங்களின் கூரைகளை திருத்தியமைத்தல் | 0.628 | 0.588 | 100 | 100 |
| | | காய்கறி வளாகத்தில் கழிப்பறை தொகுதியை திருத்தியமைத்தல் | 1.733 | 1.445 | 100 | 100 |
| | | தினசரி கழிவுகளை இடும் பகுதியில் | 0.507 | 0.419 | 95 | 100 |

| தொ / இ | விஷேட பொருளாதார மையங்கள் | செயற்திட்டம் | எதிர்பார்க்கப் படும் செலவு (மில். ரூபாய் | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிசார் % | பௌதீக % |
| | | இருந்து இறைச்சி மற்றும் மீன் கழிவுகளை காகங்கள் கொண்டு செல்வதால் அந்த அறையை சுற்றி வலை விரிப்பு ஒன்றை அமைத்தல் | | | | |
| | | இறைச்சி விற்பனை வளாகத்தின் முன் படிக்கட்டு ஒன்றை அமைத்தல் | 0.591 | 0.563 | 95 | 100 |
| | | B-07/08 மற்றும் G-01 இலிருந்து G-09 வரியிலான வளாகங்களின் கூரைகளை பழுதுபார்த்தல். | 0.347 | 0.327 | 95 | 100 |
| | | காய்கறி வளாகத்தின் வடிகால்த் தொகுதியை திருத்தியமைத்தல் | 15.00 | - | 0 | 20 |
| | | கூரை நீர் வடிகால்த் தொகுதிகளை திருத்தியமைத்தல் | 0.360 | - | 0 | 20 |
| | | உள்ளக பாதை அமைப்பை திருத்தியமைத்தல் | 1.140 | - | 0 | 20 |
| 9 | வெயங்கொடை | பொருளாதார மையத்தின் பிரதான மேற்கூரையை திருத்தியமைத்தல் மற்றும் இருபுறமும் மழைக் காப்புக் கூரைகளை அமைத்தல் | 69.147 | 66.147 | 95 | 100 |
| | | டிஜிட்டல் விலைக் காட்டி யொன்றை அமைத்தல் | 3.600 | 0.828 | 10 | 20 |
| | | மின்சுற்றுத் தொகுதியை திருத்தியமைத்தல் | 12.860 | - | 0 | 50 |
| 10 | அம்பிலிபிட்டிய | பொருளாதார மையத்தின் நுழைவாயில் கதவுகள், இரும்பு வேலி மற்றும் கழிப்பறைத் தொகுதிகளின் கதவுகளை பழுது பார்த்தல். | 2.37 | - | 0 | 20 |
| 11 | அம்பாறை | பொருளாதார மையத்தின் மேற்கூரை, மழைநீர் வடிகால்த் தொகுதிகளை சுத்தம் செய்தல், மரக்கிளைகளை அகற்றுதல், பொது மின் அமைப்புகளை பழுது பார்த்தல் மற்றும் கழிப்பறை தொகுதிகளை பழுது பார்த்தல் | 0.285 | 0.233 | 82 | 100 |
| மொத்தக் கூட்டுத்தொகை | | | 194.037 | 95.401 | | |

## *2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற் திட்டங்களின் முன்னேற்றம்*

*01. விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம் (ASMP)*

*1.1. செயற்திட்டம் தொடர்பான சுருக்கமான அறிமுகம் :*

- *நடைமுறையில் உள்ள சிக்கல்கள்/ தேவைகள் என்ன?*

*விவசாய பல்வகைப்படுத்தல் காட்சிப்படுத்தல் (பெண்கள் உட்பட ஏழை விவசாயிகளுக்கு பெறுமதி சேர்த்தல், புதிய திறன்கள் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகள், நிலைபேறான பயிர் முகாமைத்துவம் மற்றும் புதிய நிதி மற்றும் சந்தைப்படுத்தல் வழிமுறைகளிற்கு மேற்கொள்ளும் முதலீடுகலிருந்து பயனடைய முடியும்.) மற்றும் தொழில்நுட்பம் விருத்தி, அதிக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்கான பெறுமதி சங்கிலி மேம்பாடு மற்றும் சந்தை இணைப்புகள் மற்றும் விவசாயத்திலிருந்து வருமானம் ஈட்டுதல்*

- *செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சிக்கலுக்கு பங்களிக்கும் விதம் செயற்திட்டம்*
  - *i. 300 - 500 பயனாளிகளை உள்ளடக்கிய ஒரு சர்வதேச சேவை வழங்குநரால் (ISP) பயிர் கொத்தணியாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெறுமதி கூடிய பயிர்களைத் தெரிவு செய்து பயிரிடுதல்.*
  - *ii. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சந்தை வாய்ப்புகளுடனான தொடர்பு*
  - *iii. விவசாய உற்பத்தியாளர் சங்கங்களை கம்பனிப் பதிவாளரின் கீழ் பதிவு செய்து, அவற்றை விவசாய நிறுவனங்களாகப் பலப்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் அவற்றின் ஆற்றல்களை விருத்தி செய்தல்.*
  - *iv. உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு உதவுதல், ஒவ்வொரு விவசாய சங்கங்களுக்கு சேகரிக்கும் மற்றும் பதனிடும் நிலையங்களைத் திட்டமிடல் மற்றும் வற்றை செயற்படுத்தல் ஆகியவற்றிற்கு உதவுதல்.*
  - *v. நீர்ப்பாசனத் திட்ட நீர் கட்டமைப்புகள், பண்ணை மற்றும் சந்தைகளை இணைக்கும் பாதைகள், களஞ்சியசாலைகள், உலர்த்தும் கொட்டகைகள் மற்றும் கூட்டுப்பசளை தயாரிக்கும் வசதிகள் போன்ற பயிர்க் கொத்தணிகளின் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்குத் தேவையான புதிய உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நடவடிக்கைகளை மறுசீரமைத்தல் / உருவாக்குதல்.*
  - *vi. சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள், சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகள், அரசாங்கத்தின் பல்வேறு துரைகளிலிருந்து வெளியிடப்படும் கொள்கைத் தீர்மானங்களுடன் அவ்வப்போது எழக்கூடிய அறிவு இடைவெளிகள் மற்றும் கொள்கை மற்றும் ஒழுங்குமுறை முரண்பாடுகளை நிவர்த்தி செய்தல், நிலைபேறான மற்றும் போட்டித்தன்மை கொண்ட நவீன விவசாயத் துறையை மற்றும் உணவு உற்பத்தித் தொகுதிக்குப் பொருத்தமான சூழலை உருவாக்கும் பொருட்டு பிரிவு ரீதியானதும் உப-பிரிவுகளுக்குமான துறைசார் உத்திகளை தயாரித்தல்.*

- *தேசிய கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களுடனான செயற்திட்டத்தின் தொடர்பு*

  *நாட்டின் கூட்டு மூலோபாயங்கள் (CPS), 13 நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் தேசிய உணவு உற்பத்தித் நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து காணப்படுகிறது.*

  *i. நடைமுறைப்படுத்தப்படும் இடங்கள் எவை?*

  *யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, அனுராதபுரம், பொலன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, பதுளை, மாத்தளை, கண்டி ஆகிய மாவட்டங்களில்*

*ii பங்குதாரர்கள் யார்?*
*மகாவலி அதிகாரசபை, கமநல சேவைகள் திணைக்களம், ஐந்து மாகாணங்களின் உள்ளூராட்சி சபைகள், நீர்ப்பாசன திணைக்களம், மாவட்ட செயலகங்கள் மற்றும் ஐந்து மாகாணங்களின் பிரதேச செயலகங்கள்*

*iii பயனாளிகள்*
*விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள், சிறு பண்ணை குடும்ப உரிமையாளர்கள் மற்றும் ஏனைய விவசாயக் குடும்பங்கள், விவசாய அமைச்சு (MOA) சம்பந்தப்பட்ட மாகாண விவசாய அமைச்சுகள்.*

*iv. நேரடி மற்றும் மறைமுக பயனாளிகள் யார்?*
*சிறு பண்ணை குடும்ப உரிமையாளர்கள், 2023 ஆகஸ்ட் மாத இறுதியில் (நேரடி செயற்திட்டங்களின் பயனாளிகள்) 15662 , வணிக வங்கிகள்*

*1.2. ஒதுக்கீடுகள்*

| | | |
|---|---|---|
| *நிதி மூலாதாரம்* | | *சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனம் (IDA) + ஐரோப்பிய ஒன்றியம்* |
| *மதிப்பிடப்பட்ட மொத்த வரவுசெலவுக்கு அமைவாக செயற்திட்டப் பெறுமதி* | : | *63.64 மிலியன் அமெரிக்க டாலர் + 23.13 மில்லியன் யூரோ* |
| *2023 இற்கான ஒதுக்கீடு* | : | *IDA – 4765 மில். ரூபாய், EU – 3000 மில். ரூபாய், GOSL - 60 மில். ரூபாய்* |
| *கால எல்லை* | | |
| *ஆரம்பித்த திகதி* | : | *2021.01.17 (நிதிசார் ஒப்பந்தம் கையெழுத்திடும் திகதி)* |
| *நிறைவு செய்யும் திகதி* | : | *2024.12.31* |

*1.3. 2024 ஆம் ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்*

| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | |
|---|---|---|---|
| | | உலக வங்கி | ஐரோப்பிய ஒன்றியம் |
| 1 | மூலதன செலவுகள் | 4,235.00 | 3,015.00 |

*1.4. 2024 ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்குகள்*

| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு (மில். ரூபாய்) | மொத்த செலவு (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 1 | உலக வங்கி | % | 25 | | 4,235.00 |
| 2 | ஐரோப்பிய ஒன்றியம் | % | 39 | | 3,015.00 |

*1.5. நிதிசார் முன்னேற்றம் (30.09.2023 வரை)*

| | நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கானஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | உலக வங்கி | 4,795.00 | 2,791.55 | 58.21 |
| 2 | ஐரோப்பிய ஒன்றியம் | 3,030.00 | 1,142.08 | 36.69 |

*1.6. பௌதீக முன்னேற்றம் (30.09.2023 வரை)*

*2023 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு 7,825 மில். ரூபாய் ஆகும். இதில் 2023 செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதியளவில் 3,933.63 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*இந்த நிதி முன்னேற்றத்துடன், செயற்திட்டத்தின் ஊடாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மொனராகலை, மட்டக்களப்பு, அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மாத்தளை ஆகிய பிரதேசங்களில் 19 பயிர்க் கொத்தணிகள் நிறுவப்பட்டுள்ளதுடன், வவுனியா, கிளிநொச்சி, அம்பாறை, பதுளை மற்றும் கண்டி ஆகிய இடங்களில் ஏனைய களப்பயிர் வகைகளின் 19 பயிர்க் கொத்தணிகள் நிறுவப்படும். 2018 முதல் 2020 வரையிலான காலப்பகுதியில், செயற்திட்டங்கள் (41) ஊடாக நடத்தப்பட்ட இந்த முன்னோடி கொத்தணிகளை கருத்திற்கொள்கையில், கம்பனிகள் பதிவாளர் சட்டத்தின் கீழ் பொது பட்டியலிடப்படாத நிறுவனமாக (PUC) பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளின் எண்ணிக்கை 41 ஆகும்.*

*PUC க்கான வியாபாரத் திட்டங்களைத் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருவதுடன் 18 வியாபாரத் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 6 வியாபாரத் திட்டங்கள் மீளாய்வுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. உற்பத்தி மற்றும் சந்தை உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் கீழ் 12 செயற்திட்ட மாவட்டங்களில் 105 செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 39 செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. செயல்படுத்தப்பட்ட பயிர்க் கொத்தணிகளின் பயனாளிகள் தங்கள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். சர்வதேச சேவை வழங்குநரின் (ISP) ஆலோசனையின் பேரில் யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் இயங்கி வரும் புளி வாழைக் கொத்தணிகளின் ஏற்றுமதி நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மொனராகலை புளி வாழைப்பழ மற்றும் கவன்டிஷ் வாழைப்பழக் கொத்தணிகள், யாழ்ப்பாணம், மொனராகலை மற்றும் மாத்தளை ஆகிய TJC மாம்பழக் கொத்தணிகளில் விரைவில் தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான தயாரிப்புகளை மேற்கொண்டு வருகின்றன. PUCகளின் வருமானத்தை வலுப்படுத்த 18 சேகரிப்பு/ பதப்படுத்தும் நிலையங்கள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அந்த அலகுகளை அமைப்பதற்கான ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பகுப்பாய்வு ரீதியான மற்றும் கொள்கை ஆலோசனை உதவியின் கீழ் 9 கொள்கை ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் ஒரு ஆய்வை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆர்வத்தை வெளிப்படுதத்தல்கள் (EOI) தொடர்பான மதிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் - 12 -16*

## *02.* காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (ஊளுஐயூ)

### 2.1 திட்டத்தின் சுருக்க அறிமுகம்:

கமத்தொழில் அமைச்சு, உலக வங்கியுடன் இணைந்து காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தை வடிவமைத்து, 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்து காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட இடங்கள் என அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வாழும் சிறிய விவசாய சமுதாயங்கள் காலநிலை மாற்றத்திற்கு தாக்குப்பிடிக்கக்கூடிய விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டுதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதையும் வினைத்திறனான நீர்ப்பாசன உற்பத்தியை அதிகரிப்பதையும் திட்டத்தின் பிரதானமான அபிவிருத்தி நோக்கமாகக் கொண்டு இத் திட்டம் 2019 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. காலநிலை மாற்றத்திற்கு தாக்குப்பிடிக்கக்கூடிய விவசாய நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களைத் தழுவுதல், விவசாய உற்பத்தியை அதிகரித்தல், மற்றும் இலக்கு வைக்கப்பட்டுள்ள சிறிய விவசாயக் குடும்பங்களின் விவசாய உற்பத்திக்கான சந்தைப்படுத்தல் வசதிகளை மேம்படுத்துவதனூடாக இந்த நோக்கத்தை அடையக்கூடியதாக உள்ளது. இந்தத் திட்டமானது நாட்டில் வட மாகாணம் (கிளிநொச்சி, முல்லைத்தீவு), கிழக்கு மாகாணம் (திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை), வடமத்திய மாகாணம் (அனுராதபுரம், பொலன்னறுவை), வட மேல் மாகாணம் (குருணாகல், புத்தளம்), தென் மாகாணம் (அம்பாந்தோட்டை) மற்றும் ஊவா மாகாணம் (மொனராகலை) ஆகிய 06 மாகாணங்களில் 11 நிர்வாக மாவட்டங்களில் கிட்டத்தட்ட 375,000 கெக்டாயர் பயிர் நிலங்களை உள்ளடக்கி காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட மேற் கூறப்பட்ட பிரதேசங்களில் வாழும் 350,000 க்கும் மேற்பட்ட சிறு விவசாயிகளும், நேரடியாகப் பயன்பெறும் 60,000 சிறிய விவசாயக் குடும்பங்களும் பயன்பெறுவார்கள் என்று இத்திட்டம் உறுதிப்படுத்துகின்றது. உலக உணவுத் திட்டம் (டபிள்யூ. எப். பி), சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் (ஐ. டபிள்யூ. எம். ஐ), மற்றும் கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம் (டி. ஏ. டி) முதலானவற்றில் இருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடன் ஒன்றிணைந்து நடாத்திய பயிற்சியின் அடிப்படையில் அத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து காலநிலை மாற்றத்தால் தீவிரமாகப் அடிக்கடி பாதிக்கப்பட்ட இடங்கள் தரவுகளின் தர்க்க ரீதியான அணுகுமுறையின் அடிப்படையில் இத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டிய பிரதேசங்கள் திட்டப் பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டன. சியாப்பின் தொலைநோக்கானது, நம்பகரமான விவசாய நீர்ப்பாசன நீர் விநியோகத்திற்கான மேம்படுத்தப்பட்ட வசதிகள், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடைமுறைகளைத் தழுவிப் பின்பற்றப்படுவதனூடக மேம்படுத்தப்பட்ட நீர் உற்பத்தித் திறனிற்கான சிறந்த நீர் முகாமைத்துவத் தொழில்நுட்பத்தை பின்பற்றுவதாகும்.

### 2.2. 2024 ஆம் ஆண்டிற்கான நிதி இலக்கு

| இல | வகை | மதிப்பிடப்பட்ட தொகை (மில்லியன் ருபா) |
|---|---|---|
| 1 | மூலதனச் செலவு (Capital Expenditure) | **11,800** |

2.3. 2024 ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்கு

| இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகிற்கான செலவு (மில்லியன் ரூபா) | மொத்தச் செலவு (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | திட்டத்தின் கூறு - 1:<br><br>விவசாய உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் | | | | **1,676** |
| 1.1 | காலநிலைக்கு சீரமைவான விவசாயம் மற்றும் நீரத் தொழில்நுட்பம் | | | | 900 |
| 1.2 | காலநிலைக்கு சீரமைவான விவசாய சந்தைப்படுத்தல் | | | | 776 |
| 2 | திட்டத்தின் கூறு - 2:<br><br>விவசாயத்திற்கான நீர் | | | | **9,524** |
| 2.1 | நீர்ப்பாசன அமைப்புக்களின் மறுசீரமைப்பு | | | | 9,000 |
| 2.2 | நீர்ப்பாசன அமைப்புக்களின் நடைமுறைச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு | | | | 524 |
| 3 | திட்டத்தின் கூறு - 3:<br><br>திட்ட முகாமைத்துவம் | | | | **600** |
| | | | | மொத்தம் | **11,800** |

**2.4 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரையான நிதி முன்னேற்றம் (2023 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ஆம் திகதி வரைக்குமான)**

| இல | நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு (மில்லியன் ரூபா) | 30. 09. 2023 இன் செலவு (மில்லியன் ரூபா) | நிதி முன்னேற்றத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| 1 | காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் | **6380.00** | **5307.74** | **83%** |

**2.5 2023 ஆம் ஆண்டின் காலாண்டின் இறுதி வரை (30.09.2023 வரை) அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்**

- ஆடி மாதம் 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் வருடாந்த ஒதுக்கீடு 3380 மில்லியன் ருபா செலவிடப்பட்டுள்ளது. மேலும், திட்டத்திற்கு வருடாந்த ஒதுக்கீடாக மேலதிக நிதியாக 3000 மில்லியன் ருபா அதிகரிக்கப்பட்டு மொத்தமாக 6380 மில்லியன் ருபா வருடாந்த ஒதுக்கீடாக விடுவிக்கப்பட்டது.
- புரட்டாதி மாத இறுதியில் வருடாந்த செலவு 5307.44 மில்லியன் ருபாவாக இருந்தது. இது 83% நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளது. அதன்படி, மொத்த ஒதுக்கீடான 18,000 மில்லியன் ருபாவில் முழுக் காலத்திற்குமான ஒட்டுமொத்தச் செலவு 14,210 மில்லியன் ருபா ஆகும்.
- ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் சராசரியாக 62% ஆகும்.
- 53,000 விவசாயிகள் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடைமுறைகள் குறித்த பயிற்சிகளின் மூலம் பயனடைந்துள்ளனர். வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களைப் பெற்ற மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை 66,039 ஆகும். 5,936 கெக்டாயர்களில் சிறு போகம் மற்றும் 15,285 கெக்டாயர்களில் பெரும் போகப் பயிர்ச்செய்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் உற்பத்தியாக முறையே 16,182 மெற்றிக் தொன்களும் 53,592 மெற்றிக் தொன்களும் ஆகும். விவசாயிகள் இடைப்பட்ட காலத்திற்கான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வழிகாட்டப்பட்டதுடன் ஆவர்கள் ஏனைய களப் பயிர்களை சுமார் 4,390 கெக்டாயர்களில் பயிரிட்டுள்ளனர்.
- மூன்றாம் காலான்டின் முடிவில் 815 முன்னனி விவசாயிகளிற்கு திறப்பனையில் அமைந்துள்ள விவசாய கள பயிற்சிப் பாடசாலையில் 35 பயிற்சி வகுப்புக்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தக் களப் பாடசாலையில் பயிற்சி பெற்ற விவசாயிகள் மீண்டும் தமது கிராமங்களிற்கச் சென்று தாம் பயிற்சியின் மூலம் பெற்ற அறிவை சக விவசாயிகளுடன் பகிந்துகொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- 12 தொகுதிகளை உள்ளடக்கிய விவசாய வியாபார அல்லது வணிகப் பாடசாலைத் திட்டத்தை விருத்தி செய்து பின்னர் அந்த 12 தொகுதிகளை உள்ளடக்கி 113 விவசாயப் போதனாசிரியர்களிற்கும் சியாப் திட்டத்தின் 46 விவசாய உதவியாளர்களிற்கும் பயிற்சி வழங்கப்பட்டுப் பயிற்றுவிப்பாளர்காளாக பயிற்றுவிக்கப்பட்டார்கள். பயிற்றுவிப்பாளர்காளாக பயிற்றுவிக்கப்பட்ட விவசாயப் போதனாசிரியர்கள் தற்போது ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட விவசாயக்குழுக்களிற்கு பயிற்சியை வழங்கத் தொடங்கியுள்ளனர். பயிற்சியளிக்க திட்டமிடப்பட்ட 22600 விவசாயிகளில், 2445 விவசாயிகள் பாடத் தொகுதியின் பல்வேறு மட்டங்களில் தற்போது பயிற்சியில் உள்ளனர். மற்றும் 253 விவசாயிகள் ஏற்கனவே 12 தொகுதிகளை உள்ளடக்கிய பயிற்சி நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.
- 572 உற்பத்தியாளர் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் இணைந்து 45 உற்பத்தியாளர் அமைப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த சங்கங்கள் மற்றும் அமைப்புக்களில் உள்ளவர்களிற்கு பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. பேரம் பேசும் சக்தியை அதிகரிக்கவும், அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யவும் உருவாக்கப்பட்ட உற்பத்தியாளர் அமைப்புகள் புகழ்பெற்ற சந்தைத் தொழில் முனைவோருடன் சந்தைத் தொடர்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இரு குழுவினரும் இணைக்கப்படுகின்றார்கள்.
- திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற ஆறு மாகாணங்களில் உள்ள 47 கமநல சேவை நிலையங்கள் அனைத்தும் திட்டத்தின் ஆரம்ப காலப்பகுதியில் நவீனமயமயமாக்கப்பட்ட பின்னர் அந் நிலையங்களிற்கு விவசாய தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் ஏனைய தேவையான உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.
- விவசாய உள்ளீடுகளை சந்தைப்படுத்தல் நோக்கங்களிற்காக திட்டப் பயனாளிகள் பிரதான வீதிகளை இலகுவாக அணுகுவதை வசதியாக்குவதற்காக இது வரை 28 கிலோ மீட்டர்கள் வரையான விவசாய வீதிகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. 642 விவசாயக் கிணறுகள்

புணரமைக்கப்பட்டு விவசாயக் கிணறுகளின் கீழ் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பயனாளிக் குடும்பங்கள் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை வன விலங்குகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக 1000 கிலோ மீட்டர்கள் கொண்ட பருவகால நெற் பயிர்ச் செய்கை நிலங்களிற்கான மின்சார வேலிகள் அமைக்கப்படுவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் வட மேல் மாகாணத்தில் 10 கிலோ மீட்டர்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டு வேலைகள் நிறைவடைந்து விட்டன. தற்போது ஏனைய மாகாணங்களில் பருவகால நெற் பயிர்ச் செய்கை நிலங்களிற்கான மின்சார வேலிகள் அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- திட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கட்டுமான வேலைகளை மேற்பார்வை செய்வதற்காக 509 சமூக கண்காணிப்பு அல்லது சமூக விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- நீர்ப்பாசன விவசாயத்தை *அபிவிருத்தி செய்யும்* நோக்கத்துடன் 71 குள அடுக்குத் தொடர் அமைப்புக்களல் *புனரமைக்கப்பட்டவுள்ள* 487 *குளங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள குலங்களின் எண்ணிக்கை* 477 *ஆகும். அந்தக் குளங்களில்* 125 குளங்களின் புணரமைப்பு வேலைகள் நிறைவடைந்துள்ளன. 163 குளங்களில் 75% முன்னேற்றத்தில் புணரமைப்பு வேலைகள் உள்ளன. 94 குளங்களில் 50% - 75% முன்னேற்றத்தில் புணரமைப்பு வேலைகளும், 93 குளங்களின் 50% விட குறைவான முன்னேற்றத்தில் புணரமைப்பு வேலைகள் உள்ள அதே வேளை 6 குளங்களிற்கான புணரமைப்பு வேலைகள் தற்போது ஆரம்ப நிலையில் உள்ளன.
- செயற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் நிலைத்திருப்புத் தன்மையின் நோக்கத்துடன், 54 குள அடுக்குத் தொடர் அமைப்பு முகாமைத்துவக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அனைத்துப் பங்குதாரர்களின் பங்கேற்புடன் நடத்தப்படும் குள அடுக்குத் தொடர்களிடையே குறுக்கு நடைகள், மற்றம் பங்குபற்றுதல் அவதானங்கள் மூலம் குள அடுக்குத்தொடர் அமைப்புக்கான விபரக் குறிப்புகள் உருவாக்கப்பட்டு, 06 குள அடுக்குத் தொடர் அமைப்பு முகாமைத்துவத் திட்டங்கள் ஏற்கனவே விருத்தி செய்யப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன.
- சுற்றுச் சூழல் மற்றும் சமூக பாதுகாப்பின் கீழ், நடைமுறையில் உள்ள அனைத்து உப திட்டங்களிற்கும் 160 ற்கும் மேற்பட்ட சுற்றுச் சூழல் மற்றம் சமூக பாதுகாப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நீர் ஏந்துபகுதி முகாமைத்துவத்தை இலக்காகக் கொண்டு, மரம் நடும் வேலைத் திட்டம் நடாத்தப்பட்டு மீள் காடு வளர்ப்பு, விவசாயக் காடுகளை அமைத்தல், காற்றுத் தடைகளை நிறுவுதல், கால்வாய்களின் இரு புறங்களிலும் மரங்களை நாட்டுதல் மற்றும் வெட்டப்பட்ட மரங்களிற்கான நட்ட ஈட்டு மர நடுகை என இதுவரை 40,000 மரங்கள் திட்டப் பிரதேசங்களில் நாட்டப்பட்டுள்ளன.
- பால்நிலை சமத்துவ மேம்பாட்டு அபிவிருத்தி, பால்நிலைக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழித்தல் செயற்பாடுகளும் திட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மற்றும் 44% பெண்கள் திட்டசெயற்பாடுகளில் பங்கேற்றுள்ளதாகப் பதிவாகியுள்ளது.
- பயனாளிகளிற்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்காக மனக்குறைகளை தீர்க்கும் பொறிமுறையானது திட்டப் பிரதேசங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 167 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன் அதில் 147 முறைப்பாடுகளிற்கு ஏற்கவே தீர்க்கப்பட்டுள்ளன.

*புகைப்பட இலக்கம் - 17 – 18*

03. சிறிய அளவிலான விவசாய வியாபர கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)

3.1. அறிமுகம்

இது நாடு முழுவதும் உள்ள 57,500 சிறிய அளவிலான விவசாயப் பயனாளிகளின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் நிலைபேறான வகையில் உயர்த்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படும் சிறிய அளவிலான விவசாய கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்திற்கு (SAPP) இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) என்பன இணைந்து நிதியுதவி வழங்குகின்றன. அரச, தனியார், உற்பத்தியாளர் மற்றும் கூட்டாண்மை ஆகிய 4P அணுகுமுறையின் மூலம் சிறிய அளவிலான விவசாயப் பயனாளிகளுக்கு சலுகை வட்டி விகிதத்தில் மானியங்கள் மற்றும் கடன்கள் வழங்கப்படுகின்றன. SAPP பிரதான செயற்பாடுகளாக, சிறு அளவிலான விவசாயிகளுக்கு அவர்களின் விவசாய அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்கல் மற்றும் விவசாயப பாதைகள், அணைக்கட்டுகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் சாதகமான கொள்கை சூழலை உருவாக்கப் பங்களிப்பு செலுத்தல் என்பன காணப்படுகின்றன.

3.2 நிதிசார் இலக்குகள் 2024

| தொ/இ | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை - (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 7,024 |

3.3. 2024 ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்):

| தொ/இ | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு (மில். ரூபாய்) | மொத்த செலவு (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 1 | வரத்தக கூட்டாண்மைகளுக்கான அணுகல் (4P செயற்திட்டங்கள் மூலம்) | பயனாளர்களின் எண்ணிக்கை | 9,568 | 0.41 | 3,898 |
| 2 | கிராமப்புற நிதி மூலங்களுக்கான அணுகல் (4P செயற்திட்டங்கள், இளைஞர்கள் மற்றும் வருமானம் ஈட்டும் கடன்கள் மூலம்) | பயனாளர்களின் எண்ணிக்கை | 6,980 | 0.29 | 2,000 |
| 3 | பண்ணைக்கு வெளியே உள்ள வசதிகளை அபிவிருத்தி செய்தல். | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 20 | 4.85 | 97 |
| 4 | இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி | பயனாளர்களின் எண்ணிக்கை | 1,434 | 0.28 | 400 |

*3.4 .2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம் (30.09.2023 ஆம் திகதி வரை)*

| தொ/இ | நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை – (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை - (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் |
|---|---|---|---|---|
| *1* | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | *4,355* | *1,085* | *25%* |
| *2* | நுண் நிதி நிகழ்ச்சித் திட்டங்கள் | *2,037* | *1,346* | *66%* |
| | மொத்தம் | *6,392* | *2,431* | *38%* |

*3.5 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*சிறிய அளவிலான விவசாய வியாபர கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) 105 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவில் 2017 ஆம் ஆண்டில் ஆறு ஆண்டு செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும், கொவிட் தொற்றுநோய் மற்றும் சமீபத்திய பொருளாதார நெருக்கடியின் தாக்கம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திட்ட கால எல்லை மேலும் இரண்டு ஆண்டுகளால் நீடிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் (GOSL), விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD), தனியார் துறையினர் (விவசாய வணிக நிறுவனங்கள்), சிறு காணி உடமையாளர்கள் மற்றும் பங்கேற்பு நிதி நிறுவனங்கள் (PFIs) என்பன கூட்டாக இணைந்து நடைமுறைப்படுத்தும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக 57,500 சிறு விவசாய தொழில் முனைவோரை சந்தை வாய்ப்புகளுடன் இணைப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரிக்க உதவுதல் மற்றும் மற்றும் அதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் என்பன காணப்படுகின்றன. இந்த நோக்கங்களை அடைய, SAPP பிரதானமாக அரச மற்றும் தனியார் இணைப்புகளுடன் விவசாய தொழில்முனைவோருக்கு வழங்கும் தொடர்ச்சியான பயிற்சிகள் மூலம் விவசாய இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதன் ஊடாக சிறந்த சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க கவனம் செலுத்துகிறது.*

*இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் தொடக்கத்தில் இருந்து, தனியார் விவசாய நிறுவனங்கள் மற்றும் விவசாய உற்பத்தியாளர் சங்கங்களுடன் இணைந்து பால் உற்பத்தி , வாசனைப்பொருட்கள், தானியங்கள் மற்றும் அவரையினப் பயிர் வகைகள், தேயிலை, மலர் வளர்ப்பு மற்றும் காய்கறி வகைகள் போன்ற பிரதான விவசாயத் துறைகளை உள்ளடக்கியதாக 36 4P செயற்திட்டங்களை (பொது, தனியார், உற்பத்தியாளர். கூட்டாண்மை) நிறுவுவதில் SAPP வெற்றி கண்டுள்ளது.*

*சமீபத்திய பொருளாதார நெருக்கடியை அடுத்து, SAPP ஆனது கிராமிய விவசாய தொழில் முனைவோருக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான விஷேட சோள செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்த செயற்திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சோள செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு உயர்தர கலப்பின விதைகள், இரசாயன உர வகைகள், நிலப் பண்படுத்தலுக்குத் தேவையான வசதிகள் மற்றும் நிதி வசதிகள் என்பன வழங்கப்படுகின்றன. அவற்றுக்கான பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.*

*சிறிய அளவிலான விவசாய வியாபர கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்தின் (SAPP) கீழ் 2023 செப்டம்பர் 30 ஆம் திகதியளவில், 4P, இளைஞர்கள் மற்றும் வருமானம் ஈட்டும் கடன் திட்டத்தின் கீழ் (SAPP) 37,400 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இது மொத்த செயற்திட்ட இலக்கில் 60.5% ஆகும்.*

*2023 செப்டம்பர் 30 ஆம் திகதியளவில், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தற்போது 4P மாதிரி இலக்காகக் கொண்ட 43,000 பயனாளர்களில் 30,616 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இளைஞர் தொழில் முனைவோர் அபிவிருத்தி (YED) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2,481 SAPP இளைஞர் பயனாளிகளும் வருமான பிறப்பாக்கக் கடன் திட்டம் (IG) மூலம் 4,303 பயனாளிகளும் பயனடைந்துள்ளனர்.*

மேலும், *SAPP* செயற்திட்டத்தின் மூலம் அதனுடன் தொடர்புபட்ட நிறுவனங்களின் பங்களிப்புடன் கால்வாய்கள் மற்றும் விவசாய பாதைகளை புனரமைத்தல் போன்ற பண்ணைக்கு அப்பாற்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக *69* செயற்பாடுகள் திட்டமிட்டுள்ளதுடன் அவ்வாறான செயற்பாடுகளுக்கு *82* மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக, விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளை மிகவும் நிலைபேறான வணிக நிறுவனங்களாக மாற்றுவதற்கு *SAPP* செயற்திட்டம் மூலம் வழங்கப்பட்ட நிறுவன வலுவூட்டல் *(IS)* சேவைகளின் கீழ் இதுவரை *07* செயற்பாடுகள் தேவையான வெளியீடுகளுடன் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் *2023* ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன இது போன்ற மேலும் *13 IS* சேவைகள் *2024* ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்குள் நிறைவு செய்யப்படவுள்ளன.

புகைப்பட இலக்கம் *- 19 - 20*

## *04. சிறிய அளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் செயற்திட்டம் (SARP)*

### *4.1 அறிமுகம்*

*தற்போது காலநிலை மாற்றம் இலங்கைக்கு ஒரு பாரிய சவாலாக மாறியுள்ளது. மேலும் அதிக மற்றும் குறுகிய கால மழை வீழ்ச்சிகள், இடையிடையே காணப்படும் அதிக வெப்பமான காலங்கள் மற்றும் நீண்ட வறட்சியான காலங்கள் போன்ற நிலைமைகள் உருவாகும் தன்மை படிப்படியாக அதிகரித்துள்ளது. நிலைபேறாற்ற நிலப் பயன்பாட்டு வழிமுறைகள் காரணமாக ஏற்பட்டுள்ள சூழல் மற்றும் விவசாய நில அழிவுகள், காலநிலை மாற்றங்களின் தாக்கங்கள் காரணமாக காலநிலை மாற்றத்தின் விளைவுகளால் ஏற்படும் அதிக மழைவீழ்ச்சி, வெள்ளப் பெருக்கு மற்றும் வறட்சி ஆகியவற்றால் மேலும் தீவிரமடைந்துள்ளது. இந்த நிலை உலர் வலயத்தில் பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளை விட, கிராமப்புற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் மற்றும் மானாவாரி பயிர்ச் செய்கை முறையில் பிரதானமாக தங்கியிருக்கும் சிறிய அளவிலான விவசாயிகளை அதிகளவில் பாதித்துள்ளது. மேலும், தீவிர நிகழ்வுகளின் விளைவாக உற்பத்தித்திறன் மற்றும் பயிர் விளைச்சல் என்பவற்றில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் சிறிய அளவிலான விவசாயிகள் உணவுப் பற்றாக்குறையையும் எதிர்கொண்டுள்ளனர். இவை அவர்களை கடன் சுமையில் சிக்கவைத்து விடுகிறது. இது அவர்களை வறுமையின் ஆழத்திற்குக் கொண்டுசெல்ல வழிவகுப்பதுடன் காலநிலை அபாய நேர்வுகளுக்கு வெற்றிகரமாக முகங் கொடுக்கும் அவர்களின் ஆற்றலை அது மேலும் குறைத்து விடுகிறது*

*எனவே, இலங்கையின் புத்தளம், குருநாகல், மத்தளை, அனுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய ஆறு உலர் வலய மாவட்டங்களில் விவசாய வணிகமயமாக்கலை ஊக்குவிக்கும் அதே வேளையில், 40,000 சிறிய அளவிலான விவசாயக் குடும்பங்கள் அல்லது 180,000 தனிநபர்களுக்கு காலநிலை மாற்றத்தின் பதிப்புகளால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதே இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். இலங்கை அரசு, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) மற்றும் ஏனைய அபிவிருத்தி முகவர் நிறுவனங்களால் நிதியளிக்கப்பட்ட இந்த செயற்திட்டத்திற்கு சுமார் 30,000 மில்லியன் ரூபாவை முதலீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதன் செயற்திட்ட காலஎல்லை 2021 முதல் 2026 வரை ஆகும்.*

### *4.2. தொலைநோக்கு*

*இலங்கையின் உலர் வலய சிறிய அளவிலான காணி உரிமையாளர்களின் வறுமை ஒழிப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிப்பு செலுத்தல்.*

### *4.3. செயற்பணி*

*காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள பாதகமான விளைவுகளை குறைக்கும் பொருட்டு, உலர் வலய சிறிய அளவிலான விவசாய காணி உரிமையாளர்கள், பெறுமதிச் சங்கிலியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் அவர்களுக்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் என்பவற்றின் திறன் விருத்தி மற்றும் செயற்திட்ட பயனாளிகளின் காலநிலை மாற்றத்தை எதிர்க்கும் தன்மையை அதிகரித்தல் மற்றும் பெறுமதிச் சங்கிலிக்கு உதவி வழங்கல் என்பவற்றுக்கு முதலீடு செய்தல்.*

### *4.4. நோக்கங்கள்*

*40,000 உலர் வலய சிறிய காணி உரிமையாளர் குடும்பங்களுக்கு (180,000 பேருக்கு) காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள பாதகமான விளைவுகளை எதிர்கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தல் மற்றும் பெறுமதி சங்கிலி அபிவிருத்தி என்பவற்றின் ஊடாக சந்தைப் பங்கேற்பைக் மேம்படுத்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சுமார் 28,000 குடும்பங்களின் வருமானத்தை 30% உயர்த்துதல்.*

*4.5. செயற்திட்டத்தின் விபரங்கள்*

| விடயங்கள் | செயற்திட்டத்தின் விபரங்கள் | |
|---|---|---|
| செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த தினம் | *2021 ஜூன் 10* | |
| உத்தேச செயற்திட்ட காலஎல்லை | *2021-2026* | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த தினம் | *2022* செப்டம்பர் *30* ஆம் திகதி செயற்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. | |
| செயற்திட்ட காலஎல்லை நீடிப்பு | பொருந்தாது | |
| நிநிதி வழங்கல் மூலங்கள் | மூலம் | மில்லியம் அமெரிக்க டொலர் |
| | விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் *(IFAD)* | *42.7* |
| | இலங்கை அரசாங்கம் | *12.7* |
| | பயனாளர்கள் | *13.2* |
| | தனியார் துறை | *1.7* |
| | *UNDP, UNOPS, WFP* | *11.7* |
| | மொத்தம் | *82.0* |
| சம்பந்தப்பட்ட துறை | விவசாயப் பிரிவு | |
| பொறுப்புக் கூறும் நிறுவனங்கள் | செயற்திட்ட முகாமைத்துவ அலகு, கமத்தொழில் அமைச்சு | |

*4.6 2024 ஆம் ஆண்டுக்கான நிதிசார் இலக்குகள்*

| தொடர்/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை *(மில். ரூபா)* |
|---|---|---|
| *1* | மூலதன செலவுகள் | *2,536.00* |
| *2* | மீண்டுவரும் செலவுகள் *(நிருவாகம் மற்றும் ஒருங்கிணைப்பு)* | *300.00* |

**4.7** *2024 ஆம் ஆண்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக இலக்குகள்*

| தொ/ இ | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு *(ரூபா)* | மொத்த செலவு *(மில். ரூபா)* |
|---|---|---|---|---|---|
| *1.1* | காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப விவசாயிகள் மற்றும் சேவை வழங்குநர்களின் இசைவடையும் திறனை மேலும் விருத்தி செய்தல். | பயனாளர்கள் | *3,825* | *70,588.00* | *205.00* |
| *1.2* | உரிய பெறுமதி சங்கிலியின் அபிவிருத்தி தொடர்பாகக் காணப்படும் சாத்தியப்பாடுகளை வலுப்படுத்துதல் *(சந்தைக்கான எளிதான அணுகல், இலாபத்தை அதிகரித்தல்)* | | | | *65.00* |
| *2.1* | காலநிலை மாற்றங்களுக்கு தாங்கு திறன் கொண்ட | | *5,967* | *337,188.00* | *1,678.00* |

| தொ/இ | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு (ரூபா) | மொத்த செலவு (மில். ரூபா) |
|---|---|---|---|---|---|
| | உற்பத்திகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றின் மீது முதலீடு செய்தல் | | | | |
| 2.2 | பெறுமதிச் சங்கிலி அபிவிருத்திக்கு முதலீடு செய்தல் | | | | 334.00 |
| 3 | செயற்திட்ட முகாமைத்துவ அலகை நிறுவுதல் மற்றும் நிருவாகம் | | | | 554.00 |
| | மொத்த செலவு | | | | 2,836.00 |

*4.8. 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் (30.09.2023 ஆம் திகதி வரையில்)*

| தொ/இ | நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| 1 | கூறு 1 | 313.12 | 5.27 | 1.68 |
| 2 | கூறு 2 | 219.78 | 0.91 | 0.41 |
| 3 | கூறு 3 | 167.51 | 71.81 | 42.87 |

*4.9. 2023 ஆம் ஆண்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் – அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களின் சுருக்கம்*

*2022 செப்டம்பர் மாதம் இந்த செயற்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.*

*அந்த வருடத்திலும் 2023 ஆம் ஆண்டின் முதல் மாதங்களிலும் செயற்திட்டத்தை நிறுவுவதற்குத் தேவையான செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவை ஸ்தாபித்தல், செயற்திட்டப பணியாளர்களின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள், செயற்திட்டப் பிரதேசத்தை உள்ளடக்கிய 02 துணை அலுவலகங்களை ஸ்தாபித்தல் மற்றும் களப்பணியாளர் ஆட்சேர்ப்பு போன்ற செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்தப் பணிகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*மேலும், 2023ம் ஆண்டுக்கான வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன் கீழ், முதலாவது மற்றும் இரண்டாவது செயற்திட்டங்களின் கூறுகள் தொடர்பான செயற்பாடுகளை களத்தில் ஆரம்பிக்கத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டன. மேலும், கூறு 1 இன் கீழ், அரசு அதிகாரிகள் மற்றும் சாத்தியமான பயனர்களுக்கு செயற்திட்டம் தொடர்பான 50 விளக்கங்கள் நிறைவு செய்யப்பட்டன. மேலும் செயற்திட்டத்தின் மூலம்*

*மேற்கொள்ளப்பட வேண்டிய பயிற்சிகளுக்குத் தேவையான அடிப்படை ஏற்பாட்டு நடவடிக்கைகளும் தற்போது நிறைவடைந்துள்ளன.*

*வறுமை நிலை மற்றும் போஷாக்கு மட்டம் போன்ற பொருளாதார அளவுகோல்கள், சமூக அளவுகோல்கள் மற்றும் பௌதீக அளவுகோல்களைப் பயன்படுத்தி 06 மாவட்டங்களில் உள்ள பல நீர்ப்பாசனத் தொகுதிகளை முறையாக மதிப்பீடு செய்ததன் மூலம் செயற்திட்டத்திற்குப் பொருத்தமான அளவுகோல்களுக்கு ஏற்ற 260 குள அடுக்கைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்ட மக்கள் குழுக்களை தெரிவு செய்தது இந்த செயற்திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு விஷேட பணியாகும். கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமையில் இந்த செயற்திட்டத்தின் பங்குதாரர்களுடன் கையெழுத்திடுவதற்கான ஒப்பந்தங்களைத் தயாரித்தல், பங்குதாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துதல் மற்றும் கையெழுத்திடுதல் போன்ற துணைச் செயற்பாடுகளும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*இந்த செயற்திட்டத்திற்குத் தேவையான அடிப்படை கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு கேள்வி மனுக்கோரல் நடைமுறைகளைப் பின்பற்றி பொருத்தமான ஆலோசனை நிறுவனமொன்றை தெரிவு செய்து அதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல், தூண்டல் அமைப்புக்கான பணிப் பகுதிகளைக் கண்டறிந்து கேள்வி மனுப்பத்திரங்களைத் தயாரித்தல், செயற்திட்ட இணையதளத்தைத் தயாரிக்கும் இறுதிக் கட்டப் பணிகளை மேற்கொள்ளல், கண்காணிப்புத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் IFAD நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும், செயற்திட்டத்துடன் தொடர்பான குறைகள் மற்றும் பிரச்சினைகளை முறையிடல் மற்றும் அவற்றுக்கு தீர்வுகளை வழங்கல் என்பவற்றுக்கான பொறிமுறையை நிறுவும் பணியும் நிறைவடைந்துள்ளது.*

*புகைப்பட இலக்கம் 21 – 22*

*05. சிறிய அளவிலான பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்*

இலங்கையில் பால் உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்குடன் அமுல்படுத்தப்படும் இச்செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக பெறுமதி சேர் பால் உற்பத்திப் பொருட்களினை உரிய பிரதேசங்களிலே உற்பத்தி செய்து பால் நுகர்வினை பிரபல்யப்படுத்துவதன் மூலம் சமூகத்தின் ஊட்டச்சத்து மட்டத்தினை அதிகரிப்பதாகும். இதன் கீழ், தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் சிறிய அளவிலான 06 பால் பதனிடும் நிலையங்களை நிறுவி அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.இதற்காக 13.90 மில்லியன் யூரோவினை முதலீடு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த செயற்திட்டத்துடன் தொடர்பான திட்டமிடப்பட்ட உடன்படிக்கையானது 2019.02.27 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது. அதன் பிரகாரம், தெரிவு செய்யப்பட்டு 05 பயனாளிப் பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களில் நாளாந்த 5000 லீட்டர் பால் உற்பத்திக் கொள்ளளவைக் கொண்ட சிறிய அளவிலான 06 பால் பதப்படுத்தும் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதுவரை இத்தொழிற்சாலைகளின் முழுமையான பரிசோதனை பணிகள் (commissioning) நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், வாரியபொல சிறிய அளவிலான பால் பண்ணை அபிவிருத்தி அமைப்புக்கு சொந்தமான தொழிற்சாலையின் உற்பத்திப் பணிகள் 2023.07.04 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. செயற்திட்ட ஒப்பந்தப்படி, அரசு தரப்பில் தலையிட்டு நிறைவு செய்யப்பட வேண்டிய பணிகள் அனைத்தும் தற்போது முடிவடைந்துள்ளன. மீதமுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தியை ஆரம்பிக்க பயனாளிகள் தரப்பில் பூர்த்தி செய்ய வேண்டிய பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

- நிதிசார் முன்னேற்றம்

| அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| சிறிய அளவிலான பால் பதனிடும் நிலையங்களை நிறுவுதல் (இலங்கை / பிரான்சு) | 835.34 | 8.36 |
| மொத்தம் | 835.34 | 8.36 |

- பௌதீக முன்னேற்றம்

| பால் பதனிடும் நிலையம் | | பௌதீக முன்னேற்றம் (%) | விஷேட குறிப்புகள் |
|---|---|---|---|
| 01. | சிறிய அளவிலான பால் பண்ணை அபிவிருத்தி சங்கம், வாரியபொல | 100 | 04.07.2023 அன்று உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. |
| 02. | சக்சீட் இண்டர்நஷனல் (தனி) நிறுவனம், வென்னப்புவ | 100 | 2023 அக்டோபர் மாதத்தில் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. |
| 03. | வரையறுக்கப்பட்ட பொலன்னறுவை மாவட்ட பால் வழங்குநர்களின் கூட்டுறவுச் சங்கம் | 100 | 2023 நவம்பர் மாதத்தில் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. |
| 04. | வரையறுக்கப்பட்ட நாவலப்பிட்டி பல்நோக்கு கூட்டுறவு சங்கம், நாவலப்பிட்டி | 100 | |
| 05. | ஹெரிடேஜ் ஹெல விவசாய அபிவிருத்தி சங்கம், கெப்பிட்டிப்பொல | 100 | 2023 டிசம்பர் மாதம் பால் உற்பத்தி நடவடிக்கைள் ஆரம்பிக்கப்படவுள்ளன. |
| 06. | அத்தனகல்ல பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 100 | |
| செயற்திட்டம்த்துடன் தொடர்பான இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கான செலவுகள் | | | 12.56 மில். யூரோ |

புகைப்பட இலக்கம் 23

## **06.** கட்டுநாயக்க தாவர தனிமைப்படுத்தல் சேவையை வலுப்படுத்துதல் *(NPQS) (JICA)* – செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-041-2507****

*சர்வதேச தாவர பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள ஒரு பங்காளராக இலங்கை காணப்படுவதன் காரணமாக, குறித்த உடன்படிக்கையின் பிரகாரம், நிர்ணயித்த தரநிலைகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்வது இலங்கை அரசின் பொறுப்பாகும்.*

*நிலையான அபிவிருத்தி குறிகாட்டிகளின்படி, விவசாயிகளின் வறுமையை குறைத்தல், வெளிநாட்டு நாணயமாற்றை ஈட்டுதல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் ஏற்றுமதித் தாவரங்கள், தாவர உற்பத்திகள் மற்றும் விவசாய உற்பத்திகளை சர்வதேச தரத்திற்கு ஏற்ப பேணுதல், இலங்கையின் விவசாய ஏற்றுமதிகளுக்கு போட்டி விலையை பெற்றுக்கொடுத்தல், சர்வதேச சந்தையில் நுழைவதற்கு இறக்குமதி செய்யும் நாடுகளுக்குத் தேவையான புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல், தாவரப் பொருட்கள் மற்றும் விவசாயப் பொருட்களின் இறக்குமதியில் இலங்கையின் தரத்திற்கு இணங்காத தாவரங்கள், தாவரப் பொருட்கள் மற்றும் விவசாயப் பொருட்களை இறக்குமதி செய்வதைத் தடுப்பதை உறுதி செய்தல் ஆகிய நோக்கங்களை அடைவதற்கு தாவர தனிமைப்படுத்தல் சேவைக்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, தாவர தனிமைப்படுத்தல் சேவையில் பயன்படுத்தப்படும் தற்போதைய தொழில்நுட்ப உபகரணங்களை பழுதுபார்ப்பதற்கும் மாற்றுவதற்கும் 259.6 மில். ரூபாய் செலவில் உபகரணங்களை நிறுவுவதற்கான செயற்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.*

*JICA நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் விவசாயத் திணைக்களத்தின் தாவரத் தனிமைப்படுத்தல் சேவையின் மூலம் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் 2023 ஜனவரி மாத இறுதியில் செலவு செய்த தொகை 225.45 மில். ரூபாய் ஆகும். தற்போது இந்த செயற்திட்டம் அதன் இறுதிக் கட்டத்தில் உள்ளது.*

| தொடர் இல | நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1. | தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் மாற்றுதல் (JICA) | 20.00 | 2.09 | 10 |

## **07.** இலங்கையில் தாவர தனிமைப்படுத்தல் சேவையை நவீனமயமாக்கல் *(KOICA)* – செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-046-2509*

*இதற்கு, கொரிய அரசின் நிதியுதவி கிடைத்துள்ளதுடன், KOICA நிறுவனத்தின் ஊடாக இதன் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கை அரசாங்கத்தினால் இதற்காக செலவிடப்பட்ட தொகை 50.00 மில். ரூபாய் ஆகும். இதுவரை செலவிட்ட மொத்தத் தொகை 16.3 மில். ரூபாய் ஆகும். கொழும்புத் துறைமுகம் மற்றும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத் தனிமைப்படுத்தல் நிலையம் என்பவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கொரிய அரசாங்கத்திடமிருந்து 6,000,000 அமெரிக்க டொலர்கள் நிதியுதவியாகப் பெறப்பட்டுள்ளதுடன், இத்திட்டத்தை 03 வருடங்களில் ஆரம்பித்து நிறைவு செய்வதற்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தாவரத் தனிமைப்படுத்தலின் திறனை அதிகரிப்பதை நோக்கமாகக்கொண்டு கொழும்பு துறைமுக வளாகத்தில் தாவரத் தனிமைப்படுத்தல் நிலையத்திற்குத் தேவையான கட்டிடம் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும்*

தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கல் ஆகிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவுள்ளன. தற்போது கட்டிடத்தின் 95% நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

| தொடர் இல | நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1. | தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் பரிசோதனை வசதிகளை விருத்தி செய்தல் (KOICA) | 50.00 | 16.30 | 33 |

## **08.** இலங்கையில் வர்த்தக ரீதியான ஈரப்பலா உற்பத்தி தொடர்பான முன்னோடி செயற்திட்டம் - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-042-2509

இலங்கையில் ஈரப்பலா செய்கையை மேலும் விரிவுபடுத்துதல் மற்றும் பெறுமதி சேர்க்கும் முறைகள் மூலம் ஈரப்பலா செய்கையை வர்த்தக ரீதியாக விரிவுபடுத்துதல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட ஒரு முன்னோடிச் செயற்திட்டமாக இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

30.09.2023 வரையிலான இந்த செயற்திட்டத்தின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு.

- நிதிசார் முன்னேற்றம்

| தொடர் இல | நிகழ்ச்சித் திட்ட | 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 30.09.2023 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1. | இலங்கையில் வர்த்தக ரீதியான ஈரப்பலா உற்பத்தி தொடர்பான முன்னோடி செயற்திட்டம் | 1.89 | 0.14 | 5.29 |

- பௌதீக முன்னேற்றம்

இந்த செயற்திட்டத்தின் ஊடாக குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களில் 2,000 ஈரப்பலா கன்றுகளை நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதுவரை 350 ஈரப்பலா கன்றுகள் ஓட்டுவதற்காக பழ ஆராய்ச்சி நிறுவனத்தினால் தயார் செய்யப்பட்டுள்ளன. பரிந்துரைக்கப்பட்ட ஈரப்பலா வர்க்கங்களுக்கு பெறுமதி சேர்க்கும் நோக்கில் பல்வேறு சிகிச்சைக் கலவைகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

# கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

## 01. விவசாயத் திணைக்களம் (DOA)

1.1. தொலைநோக்கு

"தேசிய சுபீட்சத்திற்காக விவசாயத்தில் மேன்மையினை அடைந்து கொள்ளல்."

1.2. செயற்பணி

"சமமான தன்மையின் ஊடாக நிலையான விவசாய அபிவிருத்தியை அடைந்து கொள்ளல், விருத்தி செய்யப்பட்ட விவசாய தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல் என்பவற்றின் ஊடாக நாட்டு மக்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் விவசாயிகள் மீது அதிக கவனம் செலுத்தி அனைத்துத் தரப்பினர்களுக்கும் உரிய சேவைகளை வழங்குதல்"

1.3. குறிக்கோள்கள்

விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரம் என்பவற்றினை விருத்தி செய்தல் மற்றும் நுகர்வோர் ஏற்கக் கூடிய விலை ஒன்றிற்கு உணவுப் பொருட்களை வழங்குவதற்காக உணவுப் பயிர்கள் பிரிவின் பயனுறுதி மற்றும் உற்பத்தி என்பவற்றினைப் பேணி வருதல் மற்றும் விருத்தி செய்தல்.

1.4 பிரதான செயற்பாடுகள்

- விவசாய ஆராய்ச்சி
- தொழிநுட்ப விரிவாக்கல்
- விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல்
- ஒழுங்குபடுத்தும் சேவைகள்

1.5 2024 ஆம் ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு (ரூபா. மி) |
|---|---|---|
| 1 | மூலதனம் செலவு | 6,473.00 |
| 2 | மீண்டுவரும் செலவு | 3,760.50 |

1.6. 2024 ஆம் ஆண்டிற்கான பௌதீகரீதியான இலக்குகள் (நிகழ்ச்சித் திட்டங்கள் /விவசாய திணைக்கள வாக்குப்பணத்தின் கீழான கருத்திட்டங்கள்)***

| இ ல. | நிகழ்ச்சித் திட்டம் | அலகு | இலக்கு (மில். ரூபா) |
|---|---|---|---|
| 1 | தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் (NARP) | ரூபா. | 75.00 |
| 2 | மண் வள பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை செயற்படுத்தல். | ரூபா. | 2.00 |
| 3 | மிளகாய்,சோளம் மற்றும் வெங்காய வகைகளின் புதிய கலப்பின மற்றும் இயற்கையாக இனவிருத்திம் செய்யப்பட்ட வர்க்கங்களை விருத்தி செய்தல் மற்றும் விதை உற்பத்தி. | ரூபா. | 85.00 |
| 4 | இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உணவுப் பயிர் உற்பத்திக்கான காலநிலையை எதிர்கொள்ளும் பசுமை தொழில்நுட்ப மேம்பாடு. | ரூபா. | 38.00 |
| 5 | ஊடக நிகழ்ச்சிகள் | ரூபா. | 6.00 |
| 6 | விவசாய திணைக்களத்தின் வருடாந்த ஆய்வரங்கு (ASDA) | | 7.00 |

| இ ல. | நிகழ்ச்சித் திட்டம் | அலகு | இலக்கு (மில். ரூபா) |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| 7 | விவசாய தொழில்நுட்பப் பூங்கா பராமரிப்பு | ரூபா. | 8.00 |
| 8 | விவசாயக் கல்லூரி அபிவிருத்தித் திட்டம் | ரூபா. | 36.00 |
| 9 | மண் வள செழிப்பை பரீட்சிக்கும் வசதிகளை அபிவிருத்தி செய்தல் | ரூபா. | 20.00 |
| 10 | சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் தொழில்முனைவு மேம்பாடு மூலம் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்திக்கு உதவுதல். | ரூபா. | 33.00 |
| 11 | விதைகள் உற்பத்தி மற்றும் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டங்கள் | ரூபா. | 1,100.00 |
| 12 | விதைகள் கட்டளைச்சட்டத்தை செயற்படுத்தல். | ரூபா. | 25.00 |
| 13 | விரைவுபடுத்தப்பட்ட விதை பண்ணைகள் மேம்பாட்டுத் திட்டம் | ரூபா. | 500.00 |
| 14 | விதைகளை அத்தாட்சிப்படுத்தும் செயற்பாடுகளை வலுப்படுத்தல் | ரூபா. | 100.00 |
| 15 | விவசாய இரசாயனங்களினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை குறைத்தல் | ரூபா. | 25.00 |
| 16 | உள்ளூர் விதை உருளைக்கிழங்கு உற்பத்தியினை ஊக்குவித்தல் | ரூபா. | 15.00 |
| 17 | விதைகள் அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தாவர பாதுகாப்பு (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) | ரூபா. | 235.00 |

*1.7. 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம் (30.09.2023 வரை)****

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு (ரூபா. மி) | 2023.09.30 வரையான செலவினம் (ரூபா. மி) | செலவினம் சதவீதமாக |
|---|---|---|---|---|
| 1 | மூலதனம் | 574.00 | 164.90 | 29 |
| 2 | மீண்டுவரும் செலவு | 6,319.01 | 3,971.80 | 62 |
| 3 | விசேட கருத்திட்டங்கள் | | | |
| 3.1 | விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 115.43 | 51.41 | 44 |
| | விரிவாக்கம் மற்றும் பயிற்சி | 316.00 | 107.36 | 34 |
| | விதைகள் அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தாவர பாதுகாப்பு | 1,716.66 | 823.55 | 48 |
| 3.2 | தேசிய விவசாய ஆராய்ச்சித்திட்டங்கள் | 43.92 | 19.09 | 43 |
| 3.3 | சிறிய அளவிலான திட்டங்கள் | 70.00 | 40.95 | 59 |
| | மூலதன கூட்டுத்தொகை | 2,836.01 | 1,207.26 | 42 |
| | | | | |
| | மொத்த கூட்டுத்தொகை*** | 9155.01 | 5179.06 | 57 |

*1.8. 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி*

1. *மிளகாய்,சோளம், வெங்காயம், காய்கறிகள், பழங்கள் என்பற்றின் புதிய கலப்பின மற்றும் இயற்கையாக இனப்பெருக்கம் செய்யப்பட்ட வர்க்கங்களை விருத்தி செய்தல் மற்றும் நாற்று விதைகளை உற்பத்தி செய்தல்.*

*நெல்*

- *தரத்தில் கூடிய அதிக விளைச்சல் தரக்கூடிய மற்றும் குறிப்பிட்ட விசேட சூழல்களுக்கு ஏற்புடைய நெல் வர்க்கங்களை மேம்படுத்தவதற்கான முன்னோட்டங்கள் நிறுவப்பட்டுள்ளன.*
- *தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கத்தை பரீட்சிக்கும் திட்டத்தின் (NCRVT) கீழ் பயிர் மேலாண்மை பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.*
- *பிரதான நோய்கள் மற்றும் பீடைகளை கண்டறிவதற்காக நெல் வர்க்க பரிசோதனைகள் தொடரப்படுவதோடு, உயிரியல் மற்றும் உயிரியல் சூழல் சாராத அழுத்தங்களுக்கு தகவமையும் உயர் தரத்திலான நெல் வரிசைகளை மதிப்பீடு செய்வதன் கீழ் பக்டீரியா இலை கருகலை கண்டறியும் (BLB) பரிசோதனைக்கான களங்களை நிறுவும் பணி பூர்த்தியடைந்துள்ளது.*
- *புதிய நெல் இன வரிசைகளின் தானிய பண்புசார் தரத்தை மதிப்பிடுவதற்கான பிரதான விளைச்சல் பரிசோதனை (MYT) மற்றும், பூர்வாங்க விளைச்சல் பரிசோதனைக்கான (PYT) மாதிரிகள் பரிசீலிக்கப்படுகின்றன.*
- *பயிற்சியளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் மூலம் தொழில்நுட்ப பரவலாக்கைளை இலக்காகக் கொண்டு நெல் அருங்காட்சியகம் ஒன்றினை நிறுவுவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*வயற்பயிர்கள்*

- *மிளகாய் கலப்பினங்களை மேம்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டிற்கான சிறுபோக கலப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*
- *இயற்கையாக இனப்பெருக்கம் செய்யப்பட்ட மிளகாய் இனமொன்று தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனையிற்கு (NCVT) பரிந்துரைக்கப்பட்டது.*
- *தேசிய பயிர் வர்க்க வெளியீட்டுக் குழுவிடம் (VRC) சமர்ப்பிப்பதற்கு பயிர்கள் தயாராகவுள்ளதோடு, கார மிளகாயின் (Hot Pepper) (Capsicum chinense) மரபணு விருத்தி மற்றும் வர்க்கங்களின் மேம்பாட்டிற்கான கருமூலவிதை உற்பத்தியானது நிறைவடைந்துள்ளது.*
- *106 புதிய கலப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தற்போது கையிருப்பில் உள்ள CIMMYT கலப்பினங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியான உள்ளகவிருத்தி வழி வர்க்கங்களை பயன்படுத்தி புதிய கலப்பின சோள வகைகளை மேம்படுத்துவதற்கான புதிய கலப்புக் களங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.*
- *வெங்காய வரிசைகளின் களப் பரிசோதனைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது,மேலும் கொத்து வெங்காய விருத்திக்காக பிரதான விளைச்சல் பரிசோதனையினால் தெரிவு செய்யப்பட்ட வரிகள் பயிர் பெருக்கம் செய்யப்பட்டன.*
- *மிளகாய் விதைகளை பிரித்தெடுப்பதற்காக வடிவமைக்கப்படும் இயந்திரமானது 85% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பாரிய அளவிலான சோளப் பயிர்ச்செய்கைக்கான இயந்திரமானது 70% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஆரம்பகட்ட முன்னோட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.*

*மரக்கறிப் பயிர்கள்*

- *வெள்ளரி,காளான்,கலப்பின கத்தரிக்காய் என்பவற்றின் தளா 1 வர்க்கம் மேனியும், 4 வகை வெண்டிக்காய் வர்க்கங்களும் தேசிய பயிர் வர்க்க வெளியீட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.*
- *4 வெள்ளரி, 1 பீர்க்கங்காய் மற்றும் 2 பாகற்காய் வரிகள் தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனையில் உள்ளன. இரண்டு காளான் வர்க்கங்கள் வர்க்க தகவமைப்புத் திறன்*

*பரிசோதனையிலும் (VAT), 16 புதிய கத்தரிக்காய் வளர்ப்பு வர்க்கங்கள் பூர்வாங்க விளைச்சல் பரிசோதனையிலும் உள்ளன.*

- *பாகற்காய் மாத்தளை பச்சையின் 1 கிலோ நாற்று விதைகளும், திண்ணவெளி வெள்ளை 1.2 கிலோ, Ly 58 2 கிலோ அளவு நாற்று மற்றும், கருமூலவிதைகளும் உற்பத்தி செய்யப்பட்டன.*
- *கலப்பின உருவாக்கத்திற்காக பூசணிக்காயின் 20 விருத்தி வரிசைகளின் தலைமுறை விருத்தி நடவடிக்கையானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.*

<u>*பழப்பயிர்கள்*</u>

- *பல்வேறுபட்ட விவசாய சூழலியல் வலயங்களுக்கு தகவமைப்புத் திறன் கொண்ட நல்ல தரமான உயர் விளைச்சல் தரும் வர்க்கங்களை விருத்தி செய்யும் நோக்கில் விளைச்சல் தொடர்பில் நம்பகமான மாம்பழ சேர்க்கைகளாவன மூன்று இடங்களில் தெரிவு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன.*
- *விளைச்சல் தொடர்பில் நம்பகமான பத்து பப்பாளிப்பழ வரிசைகளாவன இரண்டு இனத் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டு விருத்தி செய்யப்பட்டன.*
- *பன்னிறப்படல் (Mottle) வைரசு நோயெதிர்ப்புத் தன்மை கொண்ட உயர்ந்த குலங்களை தெரிவு செய்யும் விதமாக அதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக ஏழு பாதி தலைமுறை கொடித்தோடை குலங்கள் தெரிவு செய்யப்பட்டன.*
- *பீப்பாய் வடிவ , முற்கள் குறைந்த இலைகள் கொண்ட, அகன்ற கண்களுடைய, 16 Brix அலகுகளுக்கு மேற்பட்ட, விளைச்சல் தொடர்பில் நம்பகமான ஐந்து அன்னாசி வரிசைகள் மேலதிக மதிப்பீட்டிற்கு தேரந்தெடுக்கப்பட்டன.*
- *407 கலப்பின தூரியன் வர்க்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு விளைச்சல் தொடர்பில் நம்பகமானதாக 3 கலப்பின தூரியன் வர்க்கங்கள் அடையாளங்காணப்பட்டன. நடவுப் பொருள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.*
- *ஈரப்பலாவிற்கான நடவுப் பொருள் உற்பத்தியில் வேர் துவக்க நிலை வரையான இழைய வளர்ப்பு நெறிமுறையானது உருவாக்கப்பட்டது.*
- *21 வாழைப்பழ மூதாதைச் சந்ததிகள் சேகரிக்கப்பட்டதுடன், அவற்றின் மதிப்பீடு மற்றும் பயிர் பெருக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.*
- *2023 ஆம் ஆண்டில் தரமான பழப் பண்புகளைக் கொண்ட மூன்று புதிய மாதுளை வகைகள் தேசிய பயிர் வர்க்க வெளியீட்டுக் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.*
- *ஏற்றுமதித் தரத்துடன் பொருந்தக்கூடிய சிறந்த பழப் பண்புகளைக் கொண்ட (HR - Rose) புதிய பலாப்பழ சேர்வானது 2024ம் ஆண்டில் தேசிய பயிர் வர்க்க வெளியீட்டுக் குழுவிற்கு பரிந்துரைக்கப்படும்.*
- *1 கிலோ Rathna, 390 கிராம் Cp-13 பப்பாளி விருத்தி விதைகளும், Horana Gold கொடித்தோடையின் 2 கிலோ விருத்தி விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டன.*
- *பரிந்துரைக்கப்பட்ட பழ வகைகளிலிருந்து 5500 நடவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டதுடன், அவற்றில் 2700 வகைகள் விற்பனைக்குண்டு.*
- *இழைய வளர்ப்பு முறையில் (8,000) வாழை மற்றும் (2,000) அன்னாசிச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டன.*
- *பின்வருமாறு ஒட்டு கட்டிய செடிகள் உற்பத்தி செய்யப்பட்டன : சாத்துக்குடி -500, மண்டரின்-300, கொய்யா-100, மா-200, விளாம்பழம்-600, அன்னமுன்னா-200*
- *மாதுளை நடவுப் பொருள் உற்பத்திக்காக வேண்டி தாய்த் தாவரங்களை பராமரிக்கும் நோக்கில் பதிவைத்தல் முறை மூலம் 2000-கல்பிடிய கலப்பினங்கள் மற்றும் 2000- Nimali செடிகள் உற்பத்தி செய்யப்பட்டன.*
- *33 வகை பழப்பயிர்களிலிருந்து 165 வர்க்கங்கள் உற்பத்தி செய்யப்பட்டதுடன்,ஹொரனயில் உள்ள பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் 55 வகையான (அதிகம் பயன்படுத்தப்படாத பழங்களின்) பழ முளைமக்கூழ்களை அவை உள்ள இடத்தில் வைத்தே பாதுகாப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டது. 6 ஏக்கர் கொண்ட மரபணு வங்கி நிலமானது படுக்கைச் சரிவாக்கம் மற்றும் பாதுகாப்பு வேலியிடப்பட்டு மேம்படுத்தப்பட்டது.*

*2. இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உணவுப் பயிர் உற்பத்திக்கான காலநிலையை எதிர்கொள்ளும் பசுமை தொழில்நுட்ப மேம்பாடு.*

*வயற் பயிர்கள்*

- *15 கௌபி, 10 சோயா அவரை வரிசைகள் ஈரப்பதன் அழுத்தத்திற்காகவும், 15 சோயா அவரை சேர்வினங்களாவன வறட்சியை தாங்கும் திறனுக்காகவும் மதிப்பிடப்பட்டன.*
- *பயிர் அறுவடை செய்யப்பட்டதுடன், சோளத்தின் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் ஈரப்பத அழுத்தத்தின் தாக்கத்தினை குறைக்கும் வகையில் தாவர ஆவியுயிர்ப்பு எதிர்ப்பு ஊடகங்களை பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக தரவு செயலாக்கம் மற்றும் பகுப்பாய்வானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.*

*காய்கறிகள்*

- *பாதகமான காலநிலையில் தக்காளி, கறி மிளகாய், அவரை,வெள்ளரி, குடை மிளகு மற்றும் கிழங்கு வகை பயிர்களின் பயிர் மற்றும் விதை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் ஒரு நாற்றுமேடை முகாமை முறை, 4 பயிர் முகாமை முறைகள், 2 வினைதிறன் மிக்க நீர் மற்றும் உர முகாமை முறைகள் மற்றும் வளி மற்றும் நீர்ப்பாசன முறைகளுடன் ஒரு பூச்சி பீடை மேலாண்மை நுட்பமும் அடையாளங்காணப்பட்டன.*

*பழப்பயிர்கள்*

- *விளைச்சல் தொடர்பில் நம்பகமான 19 அன்னமுன்னா (Sour sop) சேர்க்கைகள் ஒவ்வொரு விவசாய சூழலியல் மண்டலத்திலும் இரண்டு நிலையங்களில் மதிப்பீடு செய்யப்படுவதோடு அதிகம் பயன்படுத்தப்படாத ஆறு பழப்பயிர் வர்க்கங்களுக்கான கள முன்னோட்டங்கள் நிறுவப்பட்டன.மேலும் பல்வேறு விவசாய சூழலியல் வலயங்களுக்கு ஏற்ற உயர் விளைச்சல் மற்றும் நல்ல தரம் வாய்ந்த வர்க்கங்களை உருவாக்கும் வகையில் Horana கலப்பு பப்பாளி வகைகள் விருத்தி செய்யப்படவுள்ளன.*

*3. விவசாய இரசாயனங்களின் குறைந்தபட்ச பயன்பாட்டின் மூலம் உணவுப் பயிர்களில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நிலையான தொழில்நுட்பத்தை உருவாக்குதல்.*

*நெல்*

- *நீரில் மூழ்கும் நிலைக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய Bg 360 வர்க்கத்தின் 10 வரிசைகள் தெரிவு செய்யப்பட்டதுடன்,ஒரு வரியானது பூர்வாங்க விளைச்சல் சோதனைக்காக அனுப்பப்பட்டது.*
- *தாழ் நாட்டு ஈர வலயத்தில் (LCWZ) பிரபலமான 10 நெல் வர்க்கங்களாவன இரசாயன , இரசாயன + சேதன மற்றும் சேதன உர பயன்பாட்டு நிலைமைகளில் அவற்றின் செயல்திறனை மதிப்பிடும் வகையில் பரீட்சிக்கப்படுகின்றன.*
- *நாற்று பராசூட் தட்டுகளுக்கான உள்ளீட்டு செலவினை குறைக்கும் வகையில் பராசூட் தட்டுகளை ஒத்த இரும்பு அச்சு ஒன்று தயாரிக்கப்பட்டது. விவசாயிகளுக்கான கள முன்னோட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.*
- *விவசாய வயல் நில மண்ணில் ஏற்படும் முக்கிய (N,P,K) ஊட்டச்சத்து குறைபாட்டினை கண்டறிவதற்காக பிலிபைன்ஸ் நாட்டின் Philrice என்பவர் அறிமுகப்படுத்திய மைனஸ் வன் எலிமன்ட் டெக்னிக் (MOET) நுட்பமானது பொம்புவலயில் உள்ள விவசாய வயல் நிலங்களில் பரீட்சிக்கப்படுகின்றன.*
- *Penicillium oxalicum ஆனது நெல் வயல்களில் பொசுபரசு இருப்பை அதிகரிக்கச் செய்யக்கூடிய ஒரு பூஞ்சையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த உற்பத்தியின் 6 கிலோ 300 ரூபாய்க்கு கிடைப்பதோடு இதனை ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் விளைச்சலில் குறைவேற்படுத்தாத செலவு குறைந்த ஒரு உயிரியல் உரமாக பயன்படுத்தலாம். குறித்த உற்பத்தியானது களத்தில்/வயல்களில் பரீட்சிக்கப்படுகின்றது.*
- *4 ஆராய்ச்சி மையங்களினால் தரமான 28,840 கிலோ விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.*

*காய்கறிகள்*

- *அடையாளம் காணல் மற்றும் பாரிய அளவிளான உற்பத்தி*
    - *அஃபிட் ஒட்டுண்ணி Aphidius ervi மற்றும் அஃபிட் ஒட்டுண்ணி கொல்லி அட்டைகளை உற்பத்தி செய்தல்*
    - *டயமன்ட் பெக் மொத் (DBM) அத்துப்பூச்சி ஒட்டுண்ணி, Cotesia plutelle (DBM Destructor)*
    - *வெள்ளை ஈ ஒட்டுண்ணிகள் Encarsia guadeloupea (Fly Hunter Cards) மற்றும் Eretmocerus eremicus (EMIC CHIPS)*
    - *இலையுதிர் புழு ஒட்டுண்ணி (Fall Armyworm) மற்றும் Telenomus remus அட்டைகள் தயாரிக்கப்பட்டு நாடுபூராகவுமுள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.*

- *மாத்தளை மாவட்டத்தில் கலப்பின கறிமிளகாய்க்கான மூன்று செயல்விளக்க மாதிரிகள் நிறுவப்பட்டன, கண்டி மாவட்டத்தில் இரண்டு விவசாயிகள் தங்கள் வயல்களில் கலப்பின கறிமிளகாய் மற்றும் தக்காளிக்கான செயல்விளக்க மாதிரிகளை அமைப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக இயற்கை சேதன காய்கறி உற்பத்திக்கான இரண்டு ஊட்டச்சத்து மேலாண்மை தொகுப்புகள் ஆராய்ச்சிக் களங்களில்/வயல்களில் சோதிக்கப்பட்டன, இது பிராந்தியத்தில் நிலையான விவசாய நடைமுறைகளை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்தது.*
- *FTIR கைரேகைகள் உட்பட ஐந்து அளவுருக்களின் பகுப்பாய்வு மூலம் உயிரியல் பூச்சிக்கொல்லிகளின் முழுமையான தரக் கட்டுப்பாடு உறுதி செய்யப்பட்டது.மேலும் ஆர்சனிக், காட்மியம், ஈயம் மற்றும் பாதரசம் போன்ற அசுத்தங்களை மதிப்பிடுவதற்கான ஒரு முறையும் உருவாக்கப்பட்டது.*
- *நச்சுத்தன்மை வாய்ந்த கன உலோகங்களை மதிப்பிடுவதற்காக, கன்னொருவையில் உள்ள பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தில் (HORDI) கீரை வகைகள் பரிசோதிக்கப்பட்டன. கீரை வகைகளில் மாசுப்பதார்த்தங்கள் காணப்படுவது பற்றி அதிகரித்து வரும் RASFF அறிவிப்புகளுக்கு பதிலளிக்கும் விதமாக புத்தளம் மாவட்டத்தில் 26 எழுமாறி மாதிரிகளாவன பெறப்பட்டு அவற்றில் காணப்படும் எச்சங்கள் மற்றும் கன உலோகங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் விரிவான பகுப்பாய்வானது நீர் மற்றும் மண் மாதிரிகள் தொடர்பிலும் மேற்கொள்ளப்பட்டது.*
- *தக்காளிப் பயிரில் ஏற்படும் ஆரம்பகால கருகல் நோயை கட்டுப்படுத்துவதற்காக உயிரியல் பூஞ்சைக் கொல்லியை உருவாக்குதல், வெண்டிக்காயில் ஏற்படும் Cercospora நோய்க்கான ஆய்வுகூட பரிசோதனயை வெற்றிகரமாக மேற்கொள்ளல் மற்றும் கத்தரிக்காயில் ஏற்படும் பக்டீரியா வாடல் நோயினை முகாமை செய்தல் என்பன இந்த பரிசோதனை முயற்சிகளில் உள்ளடங்கும். பசுமை வீட்டு நிலைமைகளின் கீழ் விளைச்சல் தொடர்பில் நம்பகமான கத்தரி வர்க்கத்தின் முளைமக்கூழ்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.மேலும் தக்காளிப் பயிரில் ஏற்படும் பாக்டீரியா வாடல் நோயைக் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பமும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அத்தோடு கள மாதிரிகளை சேகரிக்கும் நடவடிக்கைகளும், மேலதிக மதிப்பீடுகளுக்காக உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.*

- *நைதரசன் அளவை நிர்ணயித்தல் மற்றும் பொஸ்பேட் உப்பு மற்றும் பொட்டாசியம் ஆகியவற்றின் கரைதிறனை கணிப்பிடும் வகையில் மத்திய மாகாணம் மற்றும் மகாஇலுப்பள்ளம பகுதிகளில் உள்ள 24 காய்கறி விவசாய வயல்களில் உயிரியல் உர கலவைகள் சோதிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டன. இந்த சூத்திரங்களின் உய்தலை மதிப்பிடுவதற்கு ஆய்வக சோதனைகள் நடாத்தப்பட்டன.*

- *கோவா/முட்டைகோஸில் உள்ள சுற்றுச்சூழல் நட்பான பூச்சிகளை அடையாளம் காண்பதற்கான தரவு சேகரிப்புடன் கூடிய பரிசோதனையானது முன்னெடுக்கப்படுகின்றது. பசுமை இல்லங்களில் ஒன்பது தக்காளி வர்க்கங்களையும், வயல்களில் 11 வர்க்கங்களையும் மதிப்பிடும் பணியானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. டுடா அப்சொலூட்டா தொடர்பில் மேற்கொள்ளப்படும் விவசாய கள ஆய்வானது நடைபெற்று வருகிறது. மூன்று வயல்களில் பெரோமோன் பொறிகள் அமைக்கப்பட்டுள்ளன. சேதனப் பொருட்கள், ஓரளவு எரிக்கப்பட்ட பதர் (PBPH) மற்றும் பூஞ்சை கொல்லிகளை பயன்படுத்தி அவரை வேர் அழுகல், புசாரியம் வாடல் நோய் என்பவற்றை எதிர்க்கும் வகையில் தரவுசேகரிப்புடன் கூடிய அமைப்பில் 8 கள பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

- *டுட்டா அப்சொலூட்டாவை நிர்வகிப்பதற்கான சாத்தியமான உயிரியல் கட்டுப்பாட்டு முகவராக Diglyphus iseae ஐ அடையாளம் காண்பதை நோக்கமாகக் கொண்டு பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படன. இருப்பினும் கட்டுப்படுத்தப்பட்ட சூழிலில் வைத்து தக்காளி மற்றும்*

*உருளைக்கிழங்கு செடிகள் அவதானிக்கப்பட்ட போது Diglyphus iseae ஒட்டுண்ணித் தண்மையை வெளிப்படுத்தவில்லை.மேலதிக ஆய்வுகளுக்காக ஒட்டுண்ணிகளை அடையாளம் காணும் வகையில் பாதிக்கப்பட வயல் நிலங்கலிருந்து தொடர்ந்தும் மாதிரிகள் சேகரிக்கப்படுவதோடு, இரண்டு ஒட்டுண்ணிகள் மற்றும் ஒரு இரைகௌவி அடையாளங்காணப்பட்டுள்ளன.*

- *கரட் கிழங்கில் ஏற்படும் (ஓரளவு) அழுகல் பாக்டீரியாவுக்கு எதிராக செயற்கை குழாய் பரிசோதனை மூலம் நான்கு பாக்டீரியா தனிமைப்படுத்தல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. குறித்த அழுகல் நோய்க்கிருமிக்கு எதிராக அவற்றின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு இந்த தனிமைப்படுத்தல்கள் தற்போது நடுகை சாடிகளில் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இப்பரிசோதனைகள் தொடர்பான தரவு சேகரிப்பு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.*

- *கோவா / முட்டைக்கோஸ் வளைய புள்ளி நோய்க்கிருமிக்கு எதிரான ஆறு எதிர்ப்பு பூஞ்சைகள் கட்டுப்படுத்தப்பட்ட ஆய்வக நிலைமைகளின் கீழ் அடையாளம் காணப்பட்டன. தற்போது இந்த பூஞ்சைகளின் செயல்திறனானது வயல்/கள நிலைமைகளின் கீழ் மதிப்பிடப்படுகின்றன.*

*<u>பழப்பயிர்கள்</u>*

- *பழப்பயிர்களில் வாழை அந்துப்பூச்சி, வேர் முடிச்சு நூற்புழு, துளை துளைப்பான் மற்றும் சிட்ரஸ் பழத்தை உறிஞ்சும் பூச்சி என்பவற்றை கட்டுப்படுத்தும் வகையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த நான்கு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை தொகுப்புகள் உருவாக்கப்படுகின்றன.*

- *அறுவடைக்குப் பிந்தைய நோய்களைக் கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட சுற்றுச்சூழல் நட்பு நடைமுறைகள் – அன்னமுன்னா பழங்களுக்கு பூஞ்சை கொல்லியல்லாத சிகிச்சைகளை முன்னெடுத்தல், அகவுறைகளுடனான உயிரியல் கட்டுப்பாடு ஊக்கிகள் மற்றும் பொதுவாக பாதுகாப்பானதாக அங்கீகரிக்கப்பட்ட சேர்மங்களை (GRAS) பயன்படுத்தி மா, வாழை,கொய்யா, ஆனகொய்யா மற்றும் பப்பாளி போன்ற பெரிய பழங்களில் அறுவடைக்குப் பின்னரான நோய்களைக் கட்டுப்படுத்தல்.*

4. *மண் வள பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்*

- *மாகாண விவசாய திணைக்களங்களுடன் (மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ) இணைந்து விவசாயிகளின் பங்கேற்புடன் மண் வள பாதுகாப்பு நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.*
- *தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் மண் வள பாதுகாப்பு செயல்விளக்க மாதிரிகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *சாலையோர காட்சிப் பதாகைகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் சாலையோர விழிப்புணர்வு காட்சிப் பதாகைகளை புதுப்பிக்கும் பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.*
- *விற்பனைக்காக வடிவமைக்கப்பட்ட மண்வள பாதுகாப்பு தொடர்பான கையேடு அச்சிடப்பட்டுள்ளது.*

*<u>விவசாய விரிவாக்கம் மற்றும் பயிற்சிகள்</u>*

5. *விவசாயக் கல்லூரிகளை மேம்படுத்தல்*

- *பெல்வெஹெர, குண்டசாலை, வவுனியா, அங்குனகொலபெலஸ்ஸ, கரபிஞ்ச, அனுராதபுரம், பிபில, வாரியபொல, லபுதுவ, பாலமுனை மற்றும் பரந்தன் ஆகிய 11 விவசாயக் கல்லூரிகளின் கல்வி நடவடிக்கைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதோடு சில நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன.*

*6. விவசாயக் கல்லூரிகளின் பண்ணைகளை மேம்படுத்தல்*

- *டிப்ளோமா மாணவர்களுக்கான நடைமுறைப் பயிற்சித் திறனை மேம்படுத்துவதற்காக வேண்டி பெல்வெஹெர, குண்டசாலை, வவுனியா, அங்குனகொலபெலஸ்ஸ, கரபிஞ்ச, அனுராதபுரம், பிபில, வாரியபொல, லபுதுவ, பாலமுனை மற்றும் பரந்தன் ஆகிய 11 விவசாயக் கல்லூரிகளில் காணப்படும் பண்ணைகளின் வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதோடு சில நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன.*

*7. விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த ஆய்வரங்கு*

- *விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த ஆய்வரங்கானது 2023 செப்டம்பர் மாதம் 22ம் திகதி நடைபெற்றது.*

*8. ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்*

- *பண்ணை ஒலிபரப்பு சேவையினால் 1,431 வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன. (கொழும்பு - 379, ரஜரட்ட - 114, கந்துரட்டை - 325, ருஹுணு - 583, யாழ்ப்பாணம் - 30).*
- *தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டுள்ளன. (கொவிபிமட அருனளு-32, மிஹிகத தினுவோ-29, உயிரும் உழவும்-29)*
- *விவசாய பதிப்பக பிரிவினால் 19,696 புத்தகங்கள், 6,700 சுவரொட்டிகள், 71,400 துண்டுப் பிரசுரங்கள் மற்றும் 200,000 சுட்டிகள் அச்சிடப்பட்டுள்ளன.*

*9. விவசாய தொழில்நுட்பப் பூங்கா பராமரிப்பு*

- *ஒரு செயல்முறை விளக்க மாதிரியாக தொழிற்பட்டு முறையான விவசாய தொழில்நுட்பங்களை சமூகத்திற்கு பரப்பும் விதமாக விவசாய தொழில்நுட்ப பூங்காக்கள் தொடர்ந்தும் மேம்படுத்தப்படுகின்றன.*

*10. மண் வள செழிப்பை பரீட்சிக்கும் வசதிகளை அபிவிருத்தி செய்தல்*

- *நெற்பயிர்களுக்கு மண் பரிசோதனை அடிப்படையிலான உரப்பயன்பாட்டு பரிந்துரை முறையினை அறிமுகப்படுத்துவதற்கான மாதிரி சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.*
- *மண் பரிசோதனை கருவிகளை கையாளுதல் மற்றும் மண் மாதிரிகளை எடுப்பது குறித்து பயிற்சிகள் நடாத்தப்பட்டன.*

*11. சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் தொழில்முனைவு மேம்பாடு மூலம் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தியை வேண்டி விவசாயிகளுக்கு உதவுதல்.*

- *நாடளாவிய ரீதியில் GAP செயற்பாடுகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் கால/பெரும்போகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு சகல மாவட்டங்களுக்குமான இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன.*
- *7 மாகாணங்களில் சிறந்த விவசாய நடைமுறைகளுக்கான 7 உழவர் களப் பள்ளி (FFS) நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன், 20 உழவர் களப் பள்ளிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன.*
- *முகாமைத்துவ நிலை உத்தியோகத்தர்களுக்கான 18 GAP பயிற்சிகள் நடாத்தப்பட்டன.*
- *வடமேல் மாகணத்தைச்சேர்ந்த விவிசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஏற்றுமதி சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.*
- *மாத்தளை, நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் விவசாய பயிற்றுனர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு GAP, FFS தொடர்பில் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் (TOT) நடாத்தப்பட்டன.*

12. விவசாய விரிவாக்கல் மற்றும் பயிற்சிகளை மேம்படுத்தல் (விரிவாக்கல், பயிற்சி, மகளிர் விவசாயம், இளைஞர் விவசாயக் கழகம் (YFC), தேனி வளர்ப்பு)

- விரிவாக்க முகவர்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கிடையிலான உறவை வலுப்படுத்தும் வகையில் 2 ஆராய்ச்சி விரிவாக்க உரையாடல்களுக்கான நிதியளிப்பு செய்யப்பட்டதுடன், 3 கள நாட்களும் நடாத்தப்பட்டன.
- தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்நுட்ப விநியோக முறையை அறிமுகம் செய்யும் வகையில் தளத் தேர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, நடமாடும் விரிவாக்கப் பிரிவு நிறுவப்பட்டு வருகிறது.

13. உணவுப் பயிர்களின் விளைச்சல் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்

- மஞ்சள் நோய் தாக்கத்திற்கு உட்பட்ட பகுதிகளில் விளைச்சலை அதிகரிப்பதற்கான மாதிரி செயல்விளக்கமாக 150 ஏக்கர் நெல் விளைநிலங்களில் முறையான பயிர்ச்செய்கை தொகுப்பானது செயற்படுத்தப்பட்டது.

- சோளத்தின் விளைச்சல் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்யும் வகையில் 1,560 ஹெக்டயார் விளைநிலத்தில் அதிக அடர்த்தியான பயிர்ச்செய்கையானது ஊக்குவிக்கப்பட்டதுடன் 320 ஹெக்டயார் பரப்பில் உள்நாட்டு கலப்பின விதைகள் ஊக்குவிக்கப்பட்டன. 114.5 ஏக்கர் விளைநிலத்தில் பெற்றோர் /உட்கலப்பு தூய வரிசை உற்பத்தியானது மேற்கொள்ளப்பட்டதுடன், இலையுதிர் புழு ஒட்டுண்ணியைக் (FAW) கண்காணிப்பதற்காக 3,000 பெரோமோன் பொறிகள் மற்றும் பெரோமோன் கவரிகள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு 200 விழிப்புணர்வு, பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

- வீட்டுத் தோட்ட மட்டத்தில் மிளகாய் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் 286 கிலோ MICHHY1 கலப்பின மிளகாய் விதைகள் விநியோகிக்கப்பட்டதுடன் 100,000 வளர்ப்புப் பைகளும் விநியோகிக்கப்படுகின்றன. அதேபோன்று சொட்டு நீர் பாசன முறைகள், பூச்சிகளை தடுக்கும் வலைகள் மற்றும் பொலிதீன் தழைக்கூளம் என்பன வழங்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- சுய விதை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் விதமாக விவசாயிகளுக்கு $G_o$ மற்றும் $G_1$ ஆகிய அடிப்படை நாற்று விதை/தண்டடிக் கிழங்குகள் 500,000 வழங்கப்படுவதோடு (170,000 $G_o$ அடிப்படை நாற்று விதை/தண்டடிக் கிழங்குகள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளன) உருளைக்கிழங்கு உற்பத்தி மற்றும் அதன் உற்பத்தித்திறனை அதிகரிக்க விதைக் களஞ்சியங்கள் மற்றும் குளிர்சாதன அறைகளை உருவாக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாற்று விதை உருளைக்கிழங்கு உற்பத்திக் கிராமங்களை நிறுவும் நடவடிக்கைகளும், உற்பத்தித்திறனை மேம்படுத்தும் திட்டமும் நவம்பர் மாதம் நடைமுறைப்படுத்தப்படும்.

- சீதா எலியா ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள ஆய்வுகூடங்கள், வலை வீடுகள் மற்றும் குளிர்சாதன களஞ்சிய அறைகள் என்பவற்றை மேம்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெப்பத்தை தாங்கக்கூடிய 800 கிலோ நாற்று விதை உருளைக்கிழங்குகள் 2023/24 பெரும்போகத்தின் போது யாழ்ப்பான பிரதேசங்களில் விநியோகிக்கப்படவுள்ளன.

- வேர்க்கடலை விளைச்சல் மற்றும் அதன் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வகையில் அங்குனகொலபெலஸ்ஸவில் உள்ள தானிய பருப்பு,எண்ணெய்ப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட தங்குமிட வசதியுடன் கூடிய வேர்க்கடலை நாற்று விதைகளை பதப்படுத்தும் முற்றம் அமைக்கும் பணியானது நிறைவடைந்துள்ளது. சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்திக்காக 2023/24 பெரும்போகத்தில் 1.6 மெட்ரிக் டொன் ஜம்போ வகை வேர்க்கடலை நாற்று விதைகள் விநியோகிக்கப்படவுள்ளது.மேலும் தென்னையுடன் ஊடுபயிராக வேர்க்கடலை பயிரிடுவதற்காக 75 மெட்ரிக் டொன் வேர்க்கடலை விருத்தி விதைகள் விநியோகிக்கப்படும்.

- சோயா அவரை விளைச்சல் மற்றும் அதன் உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்யும் வகையில் புதிய பரப்புகளை அறிமுகம் செய்வதற்காக 700 ஹெக்டயாரிற்குத் தேவையான நாற்று விதைகள்,நுண்ணுயிர் மூலவித்துக்கள் விநியோகிக்கப்பட்டதுடன், 400 ஹெக்டயாரிற்குத் தேவையான பதிவு செய்யப்பட்ட விதைகளும் வழங்கப்பட்டன. மேலும் நாற்று விதை உற்பத்திக்காக வேண்டி 400 ஹெக்டயாரிற்குத் தேவையான 20,000 கிலோ பதிவு செய்யப்பட்ட சோயா அவரை விதைகள் விநியோகிக்கப்பட்டன.

- உழவர் சங்கங்களுக்கு கௌபி கதிரடிப்பு இயந்திரங்களை வழங்கும் வகையில் 30 இயந்திரங்களுக்கான ஒப்படைப்பு உத்தரவானது அரசு தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. 200 மெட்றிக் டொன் பதிவுசெய்யப்பட்ட மற்றும் சான்றளிப்பு செய்யப்பட்ட கௌபி நாற்று விதைகளை உற்பத்தி செய்வதற்காக 200 ஹெக்டயாரில் பயிரிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.

- புதிய பகுதிகளுக்கு பயிர்ச்செய்கையை விரிவுபடுத்தும் விதமாக 400 ஹெக்டயாருக்குத் தேவையான சான்றளிக்கப்பட்ட தினை விதைகள் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் சிறுபோகத்திற்கான விளைநிலங்கலில் நாற்று நடவு முறையிலான பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் விதமாக 200 ஹெக்டயாரில் பயிரிடப்பட்டுள்ள பயிர்ச்செய்கைக்குத் தேவையான அடிப்படை உள்ளீடுகள் (சான்றளிக்கப்பட்ட விதைகள் (இலவசம்), உரம், விவசாய இரசாயனங்கள் (50% அடிப்படையில்) விநியோகிக்கப்பட்டது.

- புதிய 173 ஹெக்டயார் நிலப்பகுதிகளில் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்துவதற்காக பாசிப்பயறு விதைகளை இலவசமாக வழங்குவதற்காக விவசாயிகளை தேர்வு செய்யும் நடவடிக்கையும், பாசிப்பயறு நாற்று விதை உற்பத்திக்கான 17 கொத்துக் கிராமங்களை உருவாக்கும் வகையில் நாற்று விதைகளை பயிருடும் உழவர் சங்கங்களுக்கு சான்றளிக்கப்பட்ட 6000 கிலோ விதைகளை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. விதை சேமிக்கக்கூடிய 3,000 கொள்கலன்களை இலவசமாக வழங்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

- சிவப்பு வெங்காய உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தும் விதமாக (0.5 ஏக்கர் பரப்பிற்கான) 30 தெளிப்பு நீர்ப்பாசன அமைப்பு அலகுகள் , நீர் பம்பிகளை வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. சிவப்பு வெங்காயக் குமிழ்களை களஞ்சியப்படுத்தும் 10 குடிசைகள், 20 பதப்படுத்தல் அலகுகளை நிர்மானிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 200 கிலோ தூய விதைகளை உற்பத்தி செய்வதற்காக தூய விதை உற்பத்தியானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

- பெரிய வெங்காய விளைச்சல் மற்றும் அதன் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் வகையில் உயர் விளைச்சல் தரும் தொழில்நுட் முறைகளுக்கான 60 செயல்விளக்க மாதிரி அலகுகள் பூரத்தி செய்யப்பட்டுள்ளதோடு, மழை நீர் பாதுகாப்பிற்கான பொலிதீன் விறிப்புகள் மற்றும் வெங்காயத் தொகை தாங்கும் வலைகள் என்பவற்றை வழங்குவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- உளுந்து விளைச்சல் மற்றும் அதன் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வகையில் செயல்விளக்க மாதிரி மூலம் சுய நாற்று விதை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 230 ஹெக்டயார் பயிரிடப்பட்டுள்ளது. மேலும் புதிய உயர் விளைச்சல் மற்றும் வைரஸ் எதிர்ப்புத் திறன் கொண்ட (MIBG 3, MIBG 4) வகைகளை பிரபல்யப்படுத்தும் அமைப்பில் 84 ஏக்கர் நிலம் பயிரிடப்பட்டுள்ள நிலையில் அதில் ¼ ஏக்கரானது செயல்விளக்க மாதிரியாக பயிரிடப்பட்டுள்ளது.

- சுய நாற்று விதை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பதிவு செய்யப்பட்ட விதைகளை வழங்குவதன் மூலம் புதிய மேம்படுத்தப்பட்ட ரகங்களின் விதை இருப்பை ஊக்குவிக்கும் வகையில் 1,550 கிலோ விதைகளுடன் நிறுவப்பட்டது. இஞ்சி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மதிப்பு சங்கிலி மேம்பாட்டுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- பழப்பயிர் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் 9 தெளிப்பு நீர்ப்பாசன தொகுதிகளை அமைப்பதற்காக (0.2 ஹெக்டயாருக்கு ரூபா 150,000) மானியம் வழங்குவதற்காக விவசாயிகளை தெரிவு செய்யும் பணியானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு விவசாயிகளுக்குத் தேவையான சீரமைப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன.

- பெண் விவசாயிகளின் தொழில்முனைவு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேசைகளுடன் கூடிய 60 தோட்டக் குடைகள் மற்றும் உணவு பதப்படுத்துதலுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

- நெற்பயிர் மஞ்சளாகும் நோய் மற்றும் நெற்பயிரில் இலையுதிர் புழுவினால் ஏற்படும் பாதிப்பு குறித்த கள ஆய்வுகள் நிறைவடைந்தன. விவசாயிகளின் விளைநிலங்களில் ஏற்படும் தொழில்நுட்ப சிக்கல்களை தீர்க்கும் வகையில் 30க்கு மேற்பட்ட பயிற்சிகளும், 100 வீட்டுக்கு

வீடு மேற்கொள்ளும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டதுடன் கள விஜயங்ககளும் நடாத்தப்படுகின்றன.

- சுற்றுச்சூழல் நட்பான விவசாயத்தை ஊக்குவிக்கும் விதமாக மண்புழு சேதன பசளை தயாரிப்பு தொடர்பில் 25 செயல்விளக்க மாதிரிகளும், திரவ உர தயாரிப்பு தொடர்பில் 202 செயல்விளக்க மாதிரிகளும் முன்னெடுக்கப்பட்டன.மேலும் பசுமை உரத் தயாரிப்பை ஊக்குவிக்கும் விதமாக 1000 விவசாயிகளுடன் 16 ஹெக்டயார் செயல்விளக்க மாதிரிகள் நிறுவப்பட்டன. அத்துடன் சிறிய அளவிளான சேதன பசளை தயாரிப்பை ஊக்குவிக்கும் வகையில் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டு 490 செயல்விளக்க மாதிரிகள் நிறுவப்பட்டன.

<u>விதைகள் அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தாவர தடுப்புக்காப்பு</u>

14. தேசிய விதைகள் உற்பத்தி மற்றும் கொள்முதல் திட்டம்

- ஒப்பந்த அடிப்படையில் பயிரிடப்பட்ட (பதிவு மற்றும் சான்றளிக்கப்பட்ட) 448.6 மெட்ரிக் டொன் ஏனைய வயற்பயிர் விதைகளும், ஒப்பந்த அடிப்படையில் பயிரிடப்பட்ட (பதிவு மற்றும் சான்றளிக்கப்பட்ட) 32,473 புஸல் விதை நெல்லும், ஒப்பந்த அடிப்படையில் பயிரிடப்பட்ட 18,474.9 கிலோ தரமான காய்கறி விதைகளும் கொள்வனவு செய்யப்பட்டன.

15. விரைவுபடுத்தப்பட்ட விதை பண்ணைகள் மேம்பாட்டுத் திட்டம்

- கந்தளாய் பண்ணையில் நீர் கால்வாயினதும், அம்பேபுஸ்ஸ பண்ணையில் நீர்ப்பாசன முறையினதும் திருத்தப்பணிகள் நிறைடைந்துள்ளன.
- நுவரெலியா பிராந்தியத்திற்கான பண்ணை இயந்திர கருவிகள் மற்றும் 7 உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான கேள்வி மணு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது..
- பொலன்னறுவை பண்ணையில் உள்ள பதப்படுத்தும் நிலையத்தை புனரமைப்பதற்காகவும், அம்பேபுஸ்ஸ பண்ணையில் மழை நீரிலிருந்து பயிர்களை பாதுகாக்கும் 05 கூடாரங்களை அமைப்பதற்கும், சீதாஎலியா பண்ணையில் அமுக்கி அறை கட்டுவற்கும், அம்பேபுஸ்ஸ பண்ணையில் சாடி பயிர் வளர்ப்பு கொட்டகை கட்டுவற்கும், பெல்வெஹெர பண்ணையில் 2 தொழிலாளர் கழிப்பறைகளையும், பொலன்னறுவை பண்ணையில் பண்ணை இயந்திரங்கள் மறுசீரமைப்பு நிலையம் ஒன்றினை கட்டுவதற்குமான கேள்வி மணுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.
- கிளிநொச்சி பண்ணையில் வேலி திருத்தும் பணிகள் நிறைவு பெற்றன.

16. உள்ளூர் விதை உருளைக்கிழங்கு உற்பத்தியை ஊக்குவித்தல்

- பழைய நடுகை வீடுகள் மற்றும் வலை வீடுகளை மறுசீரமைத்தல், நடவுப் பொருள் உற்பத்திக்கான ஆய்வக உபகரணங்கள் மற்றும் இரசாயனங்களை வாங்குதல், பழுது பார்த்தல் மற்றும் சீதாஎலியவில் ஒரு இழைய வளர்ப்பு ஆய்வகம், வலை வீடுகள் அமைத்தல் மற்றும் குளிர்சாதன அறையை மேம்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

17. விதைகள் அத்தாட்சிப்படுத்தும் செயற்பாடுகளை வலுப்படுத்தல்

- மஹாஇலுப்பல்லமவில் உள்ள விதை பரிசோதனை ஆய்வு கூட வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான பெறுகை நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு பத்தலகொடவில் அலுவலக வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

18. விதைகள் கட்டளைச்சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் விதை மற்றும் நடவுப் பொருட்களின் தரத்தை உறுதி செய்தல்.

- பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன (கள உத்தியோகத்தர்களுக்காக-1232, விதைகள் கையாளுபவர்களுக்கு -506, வேண்டுகோள்களுக்கு அமைவாக ஏனைய பயிற்சிகள் -291, செய்தித்தாள்/ வானொலி/தொலைக்காட்சி விளம்பரங்கள் – 3), 1,5950 விதைகள் கட்டளைச்சட்டப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் விதைகளை கையாளும்

*699 புதிய நபர்கள் பதிவு செய்யப்பட்டதுடன், 896 விதை கையாளர் பதிவுகள் புதுப்பிக்கப்பட்டன.*

*1,940 விதைகள் மற்றும் நடவுப் பொருள் சுட்டியிடுதல்களுக்கான ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.மேலும் 835 விதை கையாளுபவர் வளாகங்களாவன எழுமாறாக பரீட்சிக்கப்பட்டன.*

- *3,238 ஹெக்டயார் நெற்பயிர், 956 ஹெக்டயார் ஏனைய வயற்பயிர்கள், 134 ஹெக்டயார் காய்கறி, 87 ஹெக்டயார் உருளைக்கிழங்கிற்கான விதை வயல் சான்றளிப்பானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.*
- *8,012 ஆய்வக ஆய்வுகள் மற்றும் 1,171 பிந்தைய கட்டுப்பாட்டு கள சோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.*
- *பழப்பயிர் தாய்த் தாவரங்கள் மற்றும் நடுகைப்பொருட்களை சான்றுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (294-நாற்று மேடைகள், 351,801- சுட்டியிடுதல்கள்)*

*19. விவசாய இரசாயனங்களினால் மனித சுகாதாரம் மற்றும் சூழலுக்கு ஏற்பட சாத்தியமான பாதகமான விளைவுகளை குறைத்தல்.*

- *19 மாவட்டங்களில் இதற்கான பயிற்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, சட்டவிரோத பூச்சிக்கொல்லிகள் குறித்த பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி அறிவிப்புகள் தயாரிக்கப்படவுள்ளன.*
- *மஹாஇலுப்பல்லம பூச்சிக்கொல்லிகள் களஞ்சியத்திற்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை (EPL) சான்று படுத்தும் செயல்முறையை வலுப்படுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.*
- *2 உயிரியல்-பூச்சிக்கொல்லிகள் உட்பட 370 பூச்சிக்கொல்லிகள் தர உறுதிக்காக சோதிக்கப்பட்டதுடன் அங்கீகாரம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*20. உணவுத் தாவரங்களை பாதுகாத்தல்*

- *நாடளாவிய ரீதியில் நெற்பயிரை தாக்கும் பிரதானமான பூச்சி பீடைகள், இலையுதிர் புழு ஒட்டுண்ணி, பழ மற்றும் முலாம்பழ ஈ போன்றவற்றை தொடர்ந்தும் கண்காணிப்பு, முன்னறிவுப்பு செய்வதற்காக மட்டக்களப்பு, மகாவலி சி வலயம், அனுராதபுரம், வெலிகந்த, பொலன்னறுவை, மொனராகலை, அம்பாந்தோட்டை மற்றும் மன்னார் பகுதிகளில் நெல்லை பாதிக்கும் பீடை பூச்சி கண்காணிப்புத் தரவு சேகரிப்பிற்கான கையடக்க தொலைபேசி செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.*
- *ஏற்கனவே பதிவுசெய்யப்பட் ஆக்கிரமிக்கும் அன்னிய பூச்சி இனங்களை (IAS) அடையாளங் கண்டு, மேலாண்மை செய்வதோடு நாடளாவிய ரீதியில் விவசாய நிலங்களுக்குள் அவை நுழைவதை தடுப்பதற்காக நிலையான ஒரு பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*21. கன்னோருவையில் தற்போதுள்ள தாவர மரபணு வங்கியை திருத்தல்*

- *ஆய்வக உபகரணங்களை பழுது பார்க்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு ஆய்வக உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் கட்டிட கட்டமைப்புகளை புதுப்பிப்பதற்கான பெறுகை செயல்முறையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.*

*22. இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் போது தாவரநல பாதுகாப்பை மேம்படுத்தும் விதமாக விமான நிலைய தடுப்புக்காப்பு நுழைவுப் பகுதியினை சர்வதேச தரங்களுக்கு இணங்க மேம்படுத்தல்.*

- *முக்கிய பிரதான பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான ஏற்றுமதி சார்ந்த விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துவதற்காக வேண்டி 12 கள விஜயங்கள், 72 விவசாயிகளது பயிர்நில தணிக்கை ஆய்வுகள், 29 விவசாயிகளது பயிர் நில கள கண்காணிப்புகளும் முன்னெடுக்கப்பட்டன.*
- *சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு விபரங்கள், மாதிரி பரிசோதனைகள் மற்றும் Ceylon foliage (Pvt) Ltd. நிறுவனத்தின் உற்பத்தித் தளத்தில் தாவர நோயியல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட மாதிரி ஆய்வுகளின் மூலம் இலங்கையில் உள்ள இந்த தளமானது ஐரோப்பிய ஒன்றிய 2020/1201 ஒழுங்குவிதிகளின் கீழ் Xylella fastidiosa பூச்சி பீடையற்ற உற்பத்தித் தளமாக பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.*
- *Bactrocera kandiensi வின் வாழ்க்கைக் கட்டங்களை ஆய்வு செய்யும் வகையில் கொதி நீரில் அமிழ்த்திச் செய்யப்படும் பரிசோதனையானது பூர்த்தியடைந்துள்ளது.மேலும் மாம்பழ*

ஏற்றுமதியின் போது இலக்கு நாடுகளின் தாவரநல பாதுகாப்புத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக கட்டாய முன் ஏற்றுமதி சிகிச்சை என்றவகையில் ஏற்றுமதி மாம்பழங்களில் காணப்படும் பழ ஈக்களை முற்றாக அழிக்கும் விதமாக நீராவி வெப்ப சிகிச்சை தரங்களை உருவாக்க வெகுஜன வளர்ப்பிற்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கான பெறுகை செயல்முறை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

23. விநியோகச் சங்கிலி கட்டமைப்பை வலுப்படுத்துவதனூடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாய உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் (JICA)

- 37 கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 3 மாவட்டங்களில் 9 பயிற்சியாளர்களுக்கான (TOT) பயிற்றி நிகழ்ச்சிகளும், 3 மாவட்டங்களில் 32 விவசாயிகளுக்கான பயிற்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன.

1.9 உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களத்தினால் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்

- 30.09.2023 ஆம் திகதி வரையிலான நிதி முன்னேற்றம்

| தொ / இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா. மி) | 30.09.2023 வரை செலவிடப்பட்ட தொகை (ரூபா.மி) | நிதி முன்னேற்றம் (சதவீதமாக) |
|---|---|---|---|---|
| | கமத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 16 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. | 410.75 | 15.44 | 3.75 |

- 30.09.2023 ஆம் திகதி வரையிலான நிதி முன்னேற்றம்

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் | பயனாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2023 சிறுபோகத்தில் சோளப் பயிர்ச்செய்கையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல் | • 1775 ஹெக்டயாருக்கு சோள நாற்று விதைகள் பகிர்தளிக்கப்பட்டது.<br>• Drone விமானங்களை பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்வதற்காக கணினி ஒன்றினை கொள்வனவு செய்வதற்கான கேள்வி மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>புகைப்படம் 24 | • மாகாணங்களுக்கிடையே அனுராதபுரம்/ஹசலக<br>• மகாவளி B/G/H/H1/D/C/L/ரம்பகென் ஓயா/உடவளவ<br>• மாகாண அதிகார எல்லைகள் - கண்டி/மாத்தளை/அம்பாறை/திரகோணமலை/அநுராதபுரம்/குநுநாகல்/புத்தளம்/கிளிநொச்சி/ஹம்பந்தோட்டை/பதுள்ள/மொணராகலை | விவசாயிகள் 4000 |
| ஹெலபொஜுன் உணவக மேம்பாட்டுத் திட்டம் | • அநுராதபுரம் உடமலுவ ஹெல பொஜுன் உணவக நிர்மாணிப்புக்கான கேள்வி மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.<br>• பேராதனை ஹெல பொஜுன் உணவகத்தின் பாதுகாப்பு வேலி அமைத்தல், லபுதூவ ஹெல பொஜுன் உணவகத்தின் கட்டட புனர்நிர்மாணப்பணிக்கான பெறுகை | அநுராதபுரம், கன்னோருவ, பேராதனை, குண்டசாலை, பத்தரமுள்ள, கேகாலை, மாத்தறை, லபுதூவ, மஹியங்கனை, பெல்வெஹெர | • நேரடியாக 310 தொழில் முனைவோர் மற்றும் நுகர்வோர்<br>• உடமலுவையை தரிசிக்கும் யாத்திரிகர்க |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்தப் பட்ட பிரதேசங்கள் | பயனாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | நடைமுறை முன்னெடுக்கப்பட்டுள்ளது.<br>● ஹெல பொஜுன் உணவகங்களை மேம்படுத்தத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கான தொழில்நுட்ப மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.<br>● புதிதாக அமைக்கப்பட்ட பெயர்ப்பலகைகளை பொறுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.<br><br>புகைப்படம் 25 | | ள் மற்றும் அண்டியுள் ள மக்கள் |
| பாதுகாப்பான விவசாய தொழில்நுட்பத் தைப் பயன்படுத்தி தரமான விதை உற்பத்தியை அதிகரித்தல் | • 13 மழை நீர் பாதுகாப்பு கொட்டில்களை அமைப்பதற்கான கேள்வி மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது..<br>• குண்டசாலை பண்ணையில் 4 மழை நீர் பாதுகாப்பு கொட்டில்களின் நிர்மாணப்பணிகள் முடிவடைந்துள்ளதோடு ஒரு மழை நீர் பாதுகாப்புக் கொட்டில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.<br>• வல்பிட மற்றும் பஸ்யால பண்ணைகளில் தளா 2 மழை நீர் பாதுகாப்பு கொட்டில்களை அமைப்பதற்கான நிலம் தயார்படுத்தப்பட்டுள்ளதோடு, நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.<br>• வீரபான பண்ணையில் 2 மழை நீர் பாதுகாப்பு கொட்டில்களையும், தெளிஜ்ஜவில பண்ணையில் 1 கொட்டிலையும் நிர்மாணிப்பதற்கான கேள்வி மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது..<br>• நிகவெரட்டிய துணை விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் (விதைகள்) மழை நீர் பாதுகாப்பு கொட்டில் ஒன்றை அமைப்பதற்கான கேள்வி மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது..<br>• அம்பேபுஸ்ஸ பண்ணையில் உள்ள மழை நீர் பாதுகாப்பு கொட்டிலின் திருத்த வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.<br><br>புகைப்படம் 26 - 27 | அரச விதை உற்பத்திப் பண்ணை குண்டசாலை, வல்பிட, பஸ்யால, வீரபான, தெளிஜ்ஜவில, அம்பேபுஸ்ஸ மற்றும் துணை விவசாய பணிப்பாளர் அலுவலகம் (விதைகள்) – நிகவெரட்டிய. | சகல விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் |
| பேண்தகு விவசாயத்தை இலக்காக் கொண்டு ஆய்வக வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் உயிரியல் உர உற்பத்தி. | • மண் வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வகத்தின் மேல் தளத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>• தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்களுக்கு உயிரியல் சேதன உரங்களை உருவாக்கும் வகையில் பக்டீரியாக்களை பரப்பும்/பன்மடங்காக்கும் நட வடிக்கையானது தொடங்கப்பட்டுள்ளதோடு ஆராய்ச்சிப் | பேண்தகு விவசாய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம், மாகந்துர | இயற்கை எரு விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்தப் பட்ட பிரதேசங்கள் | பயனாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.<br><br>புகைப்படம் 28 | | |
| விதைகள் மற்றும் நடவுப் பொருட்களிற்கு தர உத்தரவாதமளித்தல் | • பழச் செடிகளுக்கான 750,000 சுட்டிகளை அச்சிடுவதற்காக அரச அச்சகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.<br>• விவசாயத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட கலப்பின ரகங்களின் 200 மாதிரிகளின் மரபணு தூய்மையை பரிசோதிப்பதற்குத் தேவையான இரசாயனங்களை கொள்வனவு செய்வதற்கான கேள்வி மணு கோரப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நாடுபூராகவும் | சகல விவசாயிகளும் |
| தாவர மரபணு வளங்களின் பன்முகத்தன்மை பகுப்பாய்வு மற்றும் ஆய்வுகூட ரீதியான பாதுகாப்பு | • பாரம்பரிய நெல் வகைகளின் 70 வரிகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் பன்முகத்தன்மையை அடையாளம் காணுதல்.<br>• குக்குர்பிடேசி குடும்பத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்களின் 50 பரம்பரைகளை ஆய்வு செய்வதன் மூலம் அவற்றின் பன்முகத்தன்மையை பகுப்பாய்வு செய்தல்.<br>• தாவர பகுதிகளைக் கொண்டு செயற்கையாக இனப்பெருக்கம் செய்யப்பட்ட மரபணு பிளாசுமாக்களின் ஆய்வுகூடரீதியான பாதுகாப்பிற்காக 390 வரிகளை பகுப்பாய்வு செய்தல்.<br><br>புகைப்படம் 29 | தாவர மரபணு வள நிலையம், கன்னோருவ | சகல விவசாயிகளும் |
| கள சான்றுறுதிப்படுத்தல் மூலம் புதிய பழங்கள் மற்றும் காய்கறிகளின் ஏற்றுமதியை ஊக்குவித்தல் | • 25 களங்கள் பரீட்சிக்கப்பட்டு சான்றுறுதிப்படுத்தப்பட்டுள்ளன.<br>• 125 பொதியிடும் நிலையங்கள் பரீட்சிக்கப்பட்டன. | கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டம் | கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு பழங்கள் மற்றும் காய்கறிகளை உற்பத்தி செய்யும் விவசாயிகள். |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்தப் பட்ட பிரதேசங்கள் | பயனாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பல்வேறு நெல் வர்க்கங்களில் ஈயம் (கன உலோகங்கள்) காணப்படுதல் மற்றும் அதற்கமைவாக நெற்களின் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்தல் | • மொத்தத்தில் நம் நாட்டில் உற்பத்தியாகும் அரிசியில் காணப்படும் ஈய கழிவுப்பொருளின் அளவானது மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் அளவில் இல்லை என்பதனை உறுதிப்படுத்தல்.<br>• இந்த ஈய கன உலோகங்களை கழிவுப் பொருளாக உரிஞ்சிகொள்வதானது நெல் வர்க்கங்களுக்கு ஏற்ப எவ்வாறு மாறுபடுகிறது என்பதனைக் கண்டறிதல்<br><br>புகைப்படம் 30 | • பரிசோதனைக்காக அம்பாரை மற்றும் குருநாகல் போன்ற பிரதேசங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.<br>• கன்னோருவ மற்றும் போம்புவல ஆகிய ஆராய்ச்சி நிலையங்களில் ஆய்வுகூட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. | சுமார் 833 அரிசி மற்றும் நீர் மாதிரிகள் பரிசோதிக்கப் பட்டுள்ளன. |
| கொழும்பு,மாத்தளை மற்றும் புத்தளம் ஆகிய தெரிவு செய்யப்பட்ட 3 மாவட்டங்களில் தாவர வகைசார் தோற்றம் கொண்ட விவசாய உற்பத்திகளில் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிசெய்தல் | • உள்ளூர் சந்தை மற்றும் கள/வயல் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அவற்றில் பூச்சிக்கொல்லி எச்சங்கள் இருப்பது குறித்து சம்பந்தப்பட்ட கள அலுவலர்கள் மற்றும் விவசாயிகளும் அறிவுருத்தப்பட்டதுடன், இந்தப் பிரச்சினைகளைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.<br>• உணவு மாசுபாடுகளை அடையாளம் காண மொத்தம் 56 காய்கறி மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன<br>• மூன்று மாவட்டங்களில் கள/வயல் பாவனை குறித்த தகவல்களைப் பெற 20 விவசாயிகளிடம் ஆய்வு நடத்தப்பட்டது.<br><br>புகைப்படம் 31 | • கொழும்பு<br>• மாத்தளை<br>• புத்தளம் | பழங்கள் மற்றும் காய்கறி ஏற்றுமதியாளர்கள் மற்றும் நுகர்வோர் |
| மங்கனீஸ் (Mn) உள்ளடக்க அளவைத் தீர்மானிப்பதன் மூலம் கீரை வகை காய்கறிகளில் காணப்படும் மென்கொசெப் சுவடுகளை நிர்ணயம் செய்தல் | • கீரை வகை பயிர்களில் பரவலாக பாவிக்கப்படுகின்ற மென்கொசெப் பூஞ்சைக் கொல்லியின் 20 மாதிரிகள் ஆய்வுசெய்யப்பட்டதுடன், இந்த பூஞ்சைக் கொல்லியை களத்தில்/வயலில் பயன்படுத்திய பிறகு அதன் எச்சங்கள் காணப்படும் விதமானது வெவ்வேறு காலகட்டங்களிற்கு ஏற்ப தீர்மானிக்கப்படது.<br>• கீரை வகை பயிர்களில் போன்றே இந்தப் பூஞ்சைக் கொல்லி பரிந்துரைக்கப்படுள்ள ஏனைய பயிர்களிலும் இந்தப் பரிசோதனையானது செய்யப்படவுள்ளது.<br>புகைப்படம் 32 | கன்னோருவ மற்றும் தெலிஜ்ஜவில ஆராய்ச்சி நிறுவனங்கள் | |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்தப் பட்ட பிரதேசங்கள் | பயனாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உள்ளீடுகளின் பயன்பாட்டு செயல்திறன் மற்றும் சுற்றுச்சூழல் பேண்தகைமையை இலக்காகக் கொண்டு இடம்சார் உர மேலாண்மையை மேம்படுத்த மத்திய மற்றும் பிராந்திய ஆய்வக வசதிகளை மேம்படுத்துதல் | • 250 மண் மாதிரிகளும், 25 சேதன உர மாதிரிகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.<br>• விவசாயிகளிடமிருந்து 1350 மண் மாதிரிகள் பரிசோதனைக்காக பெறப்பட்டன.<br>• ஆய்வக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான தொழில்நுட்ப மதிப்பீடுகள் நடந்து வருகின்றன<br>• ஆய்வக வளாகத்தை சீரமைக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன.<br>• மண் பரிசோதனை திட்டத்திற்கான மென்பொருள் மற்றும் ஆய்வக வலையமைப்பொன்றை உருவாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.<br>புகைப்படம் 33 - 34 | கண்டி, சீதாஎலிய, பண்டாரவளை | அனைத்து விவசாயிகள், அனைத்து கூட்டுப்பசளை உற்பத்தியாளர்கள், அனைத்து கூட்டுப்பசளை பாவனையாளர்கள் |
| குண்டசாலை தேசிய பழ வகைகள் பாதுகாப்பு மையத்தில் நிலையான நீர்ப்பாசன அமைப்பை நிறுவுதல். | • சூரிய மின்வலு நீர்பம்பி கொள்வனவுக்கான பெறுகை நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.<br>• களத்திற்கு/வயல்களிற்கு நீரைக் கொண்டு செல்லும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.<br>• தற்போதுள்ள மரபணு வங்கியானது பராமரிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது. | குண்டசாலை | *. 0.5 ஹெக்டயாருக்கு சூரிய மின்வலு நீர்பம்பி அமைப்புடன் நிலையான புதிய நீர்ப்பாசன அமைப்பை நிறுவுதல்.<br><br>*பரிந்துரைக்கப்பட்ட 75 பழ வகைகளின் தாய் செடிகளை பயிரிடுதல் மற்றும் 125 பரிந்துரைக்கப்பட்ட பழ பயிர் வகைகளைக் கொண்ட தற்போதைய மரபணு வங்கியை பராமரித்தல். |
| புதுப்பிக்கவல்ல எரிசக்தி அமைப்பை அறிமுகப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் தரமான விதைகள் மற்றும் நடவுப் பொருட்களை உற்பத்தி | • 6 சூரிய மின் உற்பத்தித் தொகுதிகளை அறிமுகம் செய்தல்.<br>• 5 ஹெக்டயாருக்கு நுண்ணீர் பாசன அமைப்புகளை நிறுவுவதற்கான பொருட்களை கொள்வனவு செய்தல்.<br>• 4 உயர் திறன் கொண்ட நீர் இறைக்கும் பம்பிகளை வாங்குதல்<br>• ஹெக்டயாருக்கு நிலத்தடி நீர் குழாய் அமைப்புகளை அமைப்பதற்கான பொருட்களை கொள்வனவு செய்தல். | • அரசாங்க விதை உற்பத்தி பண்ணை அழுத்தரம, பொலன்னறுவை, மஹாஇலுப்பல்லம, பரந்தன் மற்றும் பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகம் மற்றும் விதை விற்பனை நிலையம்- கிளிநொச்சி.<br>• நுவரெலியா | சகல விதை உற்பத்தியாளர்களும், விவசாயிகளும் |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்தப் பட்ட பிரதேசங்கள் | பயனாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| செய்தல். | | பிரதேசத்தில் உள்ள அனைத்து நாற்று விதை உருளைக்கிழங்கு பண்ணைகள் - சீதா எலியா, கந்தபொல, பிதுருதலாகல, உடரதெல்ல மற்றும் மீபிலிமான. | |
| தரமான விதைகள் மற்றும் நடவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான நுண்ணீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல் | • பொலன்னறுவை பண்ணைக்கு தெளிப்பு நீர்ப்பாசன முறைமைகளை நிறுவுவதற்கான கேள்வி மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.<br>• மல்வத்த பண்ணைக்கு தெளிப்பு நீர்ப்பாசன முறைமைகளை நிறுவுவதற்கான கேள்வி மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.<br>• வல்பிட பண்ணைக்கு தெளிப்பு நீர்ப்பாசன முறைமைகளை நிறுவுவதற்கான கேள்வி மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.<br>• வல்பிட பண்ணைக்கு சூரிய மின் வலுவில் இயங்கும் நீர்பம்பி ஒன்றினை கொள்வனவு செய்வதற்கான கேள்வி மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.<br>• மித்தெனிய பண்ணையின் நீர் விநியோக முறையை புனரமைப்பதற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | அரசாங்க விதை உற்பத்திப் பண்ணை மல்வத்த, வல்பிட பொலொன்னறுவை மற்றும் மித்தெனிய | சகல விதை உற்பத்தியாளர்களும், விவசாயிகளும் |
| முகூர்த்தத்திற்கு ஒரு செடி" தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் | 1,004 கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன (தோடை, எலுமிச்சை, மா, ரம்புட்டான், அனோதா, நெல்லி, வெரலு, ஜம்பு, உகுரஸ்ஸ) | • கமநல சேவைகள் நிலையம் – அங்குனகொலபெலெஸ்ஸ, காலி, கோவில் குலம், வவுனியா, வாரியபொல<br>• கமநல அமைச்சு | 1,004 |
| வருடாந்த பயிர் உற்பத்தித் திட்டம் – கால/பெரும் போகம் 2023/24 மற்றும் சிறுபோகம் 2024 | 2023.07.13 மற்றும் 14 ஆகிய இரு தினங்களில் 2023/24 கால/பெரும்போக மற்றும் 2024 சிறுபோக வருடாந்த பயிர் உற்பத்தித் திட்டம் மற்றும் பருவ முன்னேற்ற ஆய்வுத் திட்டம் என்பவற்றை தயாரித்தல் மற்றும் பருவ முன்னேற்ற மீளாய்வினை நடாத்திமுடித்திருத்தல். | தேசிய விவசாய தகவல் மற்றும் தொடர்பு மையம் | |

## *02. விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை (AAIB)*

*2.1 தொலை நோக்கு*

*உள்ளூர் கமத்தொழிலின் சிறப்பினைப் பாதுகாப்பதன் மூலம் தெற்காசியாவின் மிகச் சிறந்த கமத்தொழில் காப்புறுதி நிறுவனமாகவிருத்தல்.*

*2.2 பணிகள்*

*கமத்தொழில் இடர் முகாமைத்துவம் மற்றும் பொருளாதார, சமூக ரீதியான திருப்திகரமான கமத்தொழில் மற்றும் கடற்றொழில் சமூகத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு உள்ளூரிலும் மற்றும் சர்வதேச ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சிறப்பான கமத்தொழில் காப்புறுதி மற்றும் சமூகப் பாதுகாப்புச் சேவையை வழங்குதல்.*

*2.3 நோக்கங்கள்*

- *i.) கமத்தொழில் பயிர்ச்செய்கைகள் தொடர்பான இடர் முகாமைத்துவம்*
- *ii.) கமக்காரர்களுக்குச் சொந்தமான ஏனைய அசையாத மற்றும் அசையும் சொத்துகளுக்களின் பொருட்டான இடர் முகாமைத்துவம்*
- *iii.) கமக்காரர்களுக்குச் சொந்தமான கால்நடைகள் தொடர்பான இடர் முகாமைத்துவம்*
- *iv.) சமூகப் பாதுகாப்பு மற்றும் ஆயுள் காப்புறுதி முறைகள் மூலம் கமத்தொழில் மற்றும் கடற்றொழில் சமூகத்தைப் பாதுகாத்தல்*
- *v.) நிறுவனத்திற்கு உரியதான உள்ளூர் மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளல்*
- *vi.) அபிவிருத்தி, செயற்பாடுகள் மற்றும் விற்பனை மேம்பாடு*
- *vii.) மாவட்ட நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் வெளி நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு*
- *viii.) நிறுவன மனித மற்றும் பௌதீக வளங்களைத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி*
- *ix.) பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் முகாமைத்துவம்*
- *x.) சட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பான சட்ட உதவிகளை வழங்குதல்*
- *xi.) நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு திட்டமிடல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்*
- *xii.) முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றைக் கட்டியெழுப்புதல் மற்றும் நிர்வாகச் செயற்பாட்டில் உள்ள பலவீனங்களைக் குறைத்தல்*
- *xiii.) இலாபகரமான முன்னேற்றத்தின் மூலம் நிலையான நிதி ஆற்றலை உறுதி செய்தல்*
- *xiv.) நிறுவனத்தின் செயற்பாடுகளை முறையாகச் செயற்படுத்தும் பொருட்டு தகவல் தொழில் நுட்ப விதிமுறைகள் மற்றும் GIS நுட்பங்களின் பாவனை*

*<u>2.4 சட்டத்திற்கமைய நிறுவனம்;-</u>*

*திடீர் இடர் நிலைமையில் உள்ளூர் கமத்தொழில் மற்றும் கமத்தொழிலாளரைப் பாதுகாக்கும் பொருட்டு அரசிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு, 1973 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க விவசாயக் காப்புறுதிச் சட்டத்தின் மூலம் கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் பொருட்டான ஒரே அரசக் காப்புறுதி நிறுவனமாக விவசாயக் காப்புறுதிச் சபை நிறுவப்பட்டது. 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் மூலம் விவசாயக் காப்புறுதிச் சபையானது, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை என மீண்டும் தாபிக்கப்பட்டது.*

*<u>2.5 செயற்பாடுகள் :</u> -*

*2.5.1 கமத்தொழில் இடர் முகாமைத்துவம்*

*இடர் முகாமைத்துவ முறையாக, இலங்கையில் கமத்தொழில் துறையின் பொருட்டு பயிர், கால்நடை மற்றும் பொதுவான காப்புறுதி ஆகிய பிரிவுகளின் கீழ் விவசாயக் காப்புறுதி முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் கமத்தொழில் இடர் முகாமைத்துவத்திற்குப் பங்களிப்பு செய்தல், திடீர் இடரின் போது கமக்காரர் சமூகத்திருக்கு ஏற்படும் பொருளாதாரத் தாக்கங்களைக் குறைப்பதற்கு உதவுதல் மற்றும் கமத்தொழில் கடன்களை வழங்கும் நிதி நிறுவனங்களுக்கு அவர்களது நிதிசார் ஸ்திரத்தன்மையை அதிகரிக்க உதவுதல். இதன் கீழ் பயிர்க் காப்புறுதி முன்மொழிவுத் திட்டங்கள் ( நெல்*

*மற்றும் ஏனைய பயிர்கள்), கால்நடை வளங்கள் காப்புறுதி முன்மொழிவுத் திட்டங்கள், ஆயுள் காப்புறுதி முன்மொழிவுத் திட்டங்கள், விவசாய உபகரணங்கள் காப்புறுதி முன்மொழிவுத் திட்டம், களஞ்சியக் காப்புறுதி முன்மொழிவுத் திட்டம், 02 சில்லு, 04 சில்லு உழவு இயந்திரங்கள் மற்றும் மூன்றாம் தரப்புக் காப்புறுதித் திட்டம் ஆகிய திட்டங்கள் காணப்படுகின்றன.*

*2.5.2 சமூக நலன்புரி*

*சமூகப் பாதுகாப்பு முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், இலங்கையில் கமத்தொழில் துறையுடன் தொடர்புடைய கமக்காரர்களின் ஓய்வு நிலை வாழ்க்கையைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்பு செய்தல் மற்றும் மருத்துவ உதவி முன்மொழிவுத் திட்டங்கள் ஊடாக மருத்துவமனையில் சிகிச்சை பெறும் போது கமக்காரர்களுக்கு நிதி ரீதியான நிவாரணம் வழங்குதல்.*

- *கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் முன்மொழிவுத் திட்டம்*
- *கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் முன்மொழிவுத் திட்டம்*
- *சுவசெத சுகாதாரக் காப்புறுதி முன்மொழிவுத் திட்டம்*
- *திடீர் விபத்துக் காப்புறுதி முன்மொழிவுத் திட்டம்*

*2.6. 2024 ஆம் ஆண்டிற்கான நிதி இலக்கு*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| | மீண்டுவரும் | |
| 01. | கமக்காரர் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதியங்களை வழங்க (118-02-03-049-1509) | 5,386.05 |
| | மூலதன | |
| 02. | மூலதன செலவுக்கள் (118-02-03-049-2201) | 10.00 |

*2.7. 2023 ஆம் வருடத்தின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம் - (30.09.2023 ஆம் திகதி வரை)*

| தொ. இல. | நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ( மி.ரூபா) | 30.09.2023 வரை செலவிடப்பட்டுள்ள தொகை ( மி.ரூபா) | நிதி முன்னேற்றம் சதவீதமாக |
|---|---|---|---|---|
| 1 | மூலதனம் | | | |
| | மூலதனச் செலவு (118-02-03-049- 2201) | 10.00 | - | - |
| | கட்டாயக் காப்புறுதி (118-02-03-43-2202) | 1,000.00 | 165.58 | 100% |
| 2 | மீண்டெழும் செலவு | | | |
| | கமக்காரர் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதியம் வழங்கும் பொருட்டு ( 118-02-03-049- 150 9) | 4,750.00 | 3,369.48 | 100% |
| | வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் | | | |
| 1 | ERP அமைப்பு | 66.52* | 66.52 | 100% |

** மொத்தக் கருத்திட்டங்களின் பொருட்டு ஒதுக்கப்பட்ட தொகை காட்டப்பட்டுள்ளது.*

*2.8 2023 ஆம் வருடத்தின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் நடைமுறையில் உள்ள அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்.*

*i. கமக்காரர்கள்/கடற்றொழிலாளர்கள் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.*

*பொருளாதார, சமூக ரீதியான திருப்திகரமான கமத்தொழில் மற்றும் கடற்றொழில் சமூகத்தைக் கட்டியெழுப்புதலை நோக்கமாகக் கொண்டு, கமக்காரர் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு முன்மொழிவு முறை செயல்படுத்தப்படுகிறது. அதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் செப்டம்பர் 30 ஆந் திகதியாகும் போது, கடற்றொழில் மற்றும் கமத்தொழில் 179,139 ஓய்வூதியதாரர் பயனாளிகளின் பொருட்டு 3,369.48 மி.ரூபா ஓய்வூதியமாகச் செலுத்தப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 35*

*ii. பயிர்களின் பொருட்டு கமக்காரர்களுக்கு இலவசமாக நடைமுறைப்படுத்தப்படும் கட்டாயப் பயிர்க் காப்புறுதி முறையைச் செயற்படுத்தல்*

*அரசாங்கத்தின் பங்களிப்பின் கீழ் 06 பயிர்களின் பொருட்டுக் கமக்காரர்களுக்கு இலவசமாக நடைமுறைப்படுத்தப்படும் கட்டாயப் பயிர்க் காப்புறுதி முறையைச் செயற்படுத்தல் என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமானது, இலங்கையினுள் சிறந்த கமத்தொழில் இடர் முகாமைத்துவ முறையொன்றை நடைமுறைப்படுத்துவதேயாகும். அதற்கமைய, 2023 ஆம் வருடத்தின் செப்டம்பர் 30 ஆந் திகதிக்கு, நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில், 2020 சிறு போகம், 2020/21 பெரும்போகம், 2021 சிறுபோகம், 2021/22 பெரும் போகம், 2022 சிறு போகம் மற்றும் 2022/23 பெரும் போகங்களுக்கு உரிய மேல்முறையீடுகளின் பொருட்டு 8,021 கமக்காரர்களின் 8,332 ஏக்கர்களின் பொருட்டு 165.58 மில்லியன் ரூபா இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 36*

## *03. நெல் சந்தைப்படுத்தல் சபை (PMB)*

*3.1தொலைநோக்கு:*

*நெல் மற்றும் அரிசியை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கான பிரதான அரச மத்தியஸ்தராக செயற்படுதல்*

*3.2 செயற்பணி :*

*உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு சாராரும் திருப்திப்படும் விதத்தில் நெல் மற்றும் அரிசியைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தும் செயற்பாடுகளை அறிவும், திறமையும் உள்ள பதவியணி ஒன்றினூடாக சிறப்பாக மேற்கொள்ளுதல்.*

*3.3. சுருக்கமான அறிமுகம்:*
*உறுதி செய்யப்பட்ட விலையில் நெல் கொள்வனவு செய்தல், நெல் கொள்வனவு செய்தல் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்புகளை பாதுகாப்பாக சேமித்து வைத்தல் ஆகியவற்றுக்குத தேவையான களஞ்சிய வசதிகளை உருவாக்குதல்.*

*3.4 விதிமுறைகளின்படி, பணிகள்:*
*நெல் விவசாயிகளின் விற்பனை விலையை உறுதி செய்தல், உத்தரவாத விலையில் நெல்லை கொள்வனவு செய்தல், நிலையான நெல் மற்றும் அரிசி சந்தை விலைகளை பேணுதல், இலங்கையர்களுக்கு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல், நெல் மற்றும் அரிசி இருப்புக்களை பேணுதல்.*

*3.5 நோக்கங்கள்:*
*சந்தையில் அரிசிக்கு நிலையான உயர் விலையைப் பெற்றுக் கொடுத்தல், நியாயமான விலையில் அரிசி வழங்குதல், அரிசி இடித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலை முறைப்படுத்துதல், களஞ்சியப்படுத்தல் கொள்ளளவை அதிகரித்தல், பயன்படுத்தப்படாத களஞ்சியங்களை புனர்நிர்மாணம் செய்தல், அறிவியல் ரீதியாக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய களஞ்சியங்களை அமைத்தல், தாங்கிருப்புத் தொகுதிகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பொருத்தமான களஞ்சியசாலைகளை உருவாக்குதல்.*

*3.6. 2024 ஆம் ஆண்டின் நிதிசார் இலக்குகள்*

| *தொ/ இ* | *பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்* | *மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)* |
|---|---|---|
| *i.* | *மூலதன செலவுகள்* | *380.00* |
| *ii.* | *மீண்டுவரும் செலவுகள்* | *271.90* |
| *iii.* | *உரிமை பங்களிப்பு* | *2,813.70* |
| *iv.* | *நெல் கொள்வனவு* | ** 10,000.00* |

** அரச கொள்கைகளிற்கு அமைவாக, அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் நெல் கொள்வனவு செய்வதற்காக இந்த தொகையை திறைசேரியின் வைப்பின் அடிப்படையில் வர்த்தக வங்கிகளினால் கடன் தொகையாக பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது*

*3.7. 2024 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ/இ | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு (மில். ரூபா) | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் களஞ்சியசாலைகள் மற்றும் கட்டிடங்களை நவீனமயப்படுத்தல் | நவீனமயப்படுத்திய களஞ்சியசாலைகள் மற்றும் கட்டிடங்களின் எண்ணிக்கை | நெல் கொள்வனவுக்காக களஞ்சியக் கொள்ளளவை அதிகரித்தல் | 2.50 | 300.00 |
| 2 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் புதுப்பித்தல் | புதுப்பிக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் எண்ணிக்கை | நெல் கொள்வனவு செய்வதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 0.50 | 5.00 |
| 3 | வாகனங்களைத் திருத்தியமைத்தல் | திருத்தியமைத்த வாகனங்களின் எண்ணிக்கை | செலவு மற்றும் நேரத்தை குறைக்கும் வகையில் போக்குவரத்து வசதிகளை வழங்குதல் | 3.00 | 3.00 |
| 4 | நிலையான சொத்துக்களை கையகப்படுத்தல் | கையகப்படுத்திய நிலையான சொத்துக்களின் எண்ணிக்கை | நெல் கொள்வனவு செய்வதற்கு தேவையான ஏனைய உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல் | 3.00 | * 72.00 |
| 5 | உரிமை பங்களிப்பு 2012 முதல் 2019 வரை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியினால் வழங்கப்பட்ட விஷேட கடன் தொகை மற்றும் வட்டித் தொகை என்பவற்றை குறுகியகாலக் கடனாக தவணை அடிப்படையில் செலுத்துதல். | செலுத்தப்பட்ட தவணைகளின் எண்ணிக்கை | நெல் கொள்வனவு செய்வதற்கு பெற்ற கடன் தொகையை ஈடுகட்டுதல் | 234.50 | 2,813.70 |
| 6 | நெல் கொள்வனவு செய்தல் 100,000 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்தல் - 2023/24 பெரும் போகம் மற்றும் சிறு போகம் | கொள்வனவு செய்த நெல் இருப்பின் அளவு | நெல் விவசாயிகளுக்கு விற்பனை விலையை உறுதி செய்யும் வகையில் உத்தரவாத விலையில் நெல்லை கொள்வனவு செய்தல் | 100.00 | 10,000.00 |

| * நிலையான சொத்துக்களை கையகப்படுத்துதல் | மில். ரூபா |
|---|---|
| (1) தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 10.00 |
| (2) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 5.00 |
| (3) 10 அரிசி விற்பனை நிலையங்களை நிர்மாணித்தல் கட்டம் - 1 | 25.00 |
| (4) 05 அரிசி களஞ்சிய நிலையங்களை நிர்மாணித்தல் கட்டம் - 1 | 15.00 |
| (5) களஞ்சியங்களைச் சூழ யானைத் தடுப்பு வேலிகளை அமைத்தல் | 10.00 |
| 13 | வனவிலங்கு நோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் | 02 | 0.84 | 42.21 |
| 14 | கால்நடை தீவனம் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களின் தரத்தை உறுதி செய்தல். | 20 | 0.172 | 0.86 |
| 15 | கால்நடை வளர்ப்பு டிப்ளோமாதாரிகளை உருவாக்கும் திறனை வலுப்படுத்துதல் | 10 | 1.32 | 13.22 |
| 16 | தரப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம், சமூக பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், கால்நடை வளங்களை பிரபல்யப்படுத்தல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டம், நூல்கள் மற்றும் வெளியீடுகள் தொடர்பான செயற்திட்டங்கள். | 16 | 2.45 | 15.33 |
| 17 | குண்டசாலை செயற்கை கருவூட்டல் நிலையத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் உயர்தர பசு விந்து உற்பத்தி மற்றும் விநியோகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | 100 | 0.026 | 0.03 |
| | | | | |
| | வெளிநாட்டுச் செயற்திட்டங்கள் | | | |
| 1 | FAO/TCP/SRI/3903 - தரத்தில் சிறந்த புல் மற்றும் அவரையினத் தாவர வர்க்கங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் அவற்றின் ஊட்டச்சத்து நிலையை முகாமைத்துவம் செய்தல் என்பவற்றின் மூலம் சிறிய அளவிலான பால் பண்ணையாளர்களை மேம்படுத்தும் திட்டம் | 4.9 | - | - |

## 7.5. 2023.09.30 ஆம் திகதியாகின்ற போது அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

### 7.5.1. கால்நடை இனவிருத்தி அலகு

#### 7.5.1.1 கால்நடை இனவிருத்தி கருத்திட்டம்

#### 7.5.1.1.1 செயற்கை முறை சினைப்படுத்தல் வேலைத்திட்டம்.

செயற்கைமுறை சினைப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் 2023.09.30 ஆம் திகதி ஆகின்ற போது செயற்கைமுறை சினைப்படுத்தல்கள் 138,890 உம், கர்ப்ப பரிசோதனை 48,994 உம், கன்றீனல் 43,083 உம் மேற்கொள்ளப்பட்டன. குண்டசாலை செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மாட்டு விந்துகளின் எண்ணிக்கை 121,863 ஆக காணப்படுவதுடன் பொலன்னறுவை செயற்கை முறை சினைப்படுத்;தல் நிலையத்தில் மாட்டு விந்து 26,630 சொட்டுக்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அதி குளிரூட்டிய மாட்டு விந்து இறக்குமதி செய்வதன் கீழ் சஹிவால் மாட்டு விந்து சொட்டுக்கள் 5,000 உம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இனவிருத்தி ஹோர்மோன் இறக்குமதி செய்வதன் கீழ் PGF2∝-2,000 GnRH- 1,000, Progesterone Releasing Intra Vaginal devices-450,PMSG-450 இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. செயற்கைமுறை சினைப்படுத்தல் உபகரணங்கள் ஏனைய

உபகரணங்கள் மற்றும் இரசாயன பொருள் கொள்வனவின் கீழ் 18 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. செயற்கைமுறை சினைப்படுத்தல் வல்லுனர்கள் பொருட்டு பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்துவதன் கீழ் தனியார் சினைப்படுத்தல் வல்லுனர்கள் 20 பேர் சந்தையில் ஈடுபடுத்தி பால் உற்பத்தி கருத்திட்டம் (MOD) இன் ஒதுக்கீடு மற்றும் மாகாண ஒதுக்கீடுகளினால் செயற்கைமுறை சினைப்படுத்தல் நுட்பவியலாளர்கள் 485 பேர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

செயற்கைமுறை சினைப்படுத்தல் வேலைத்திட்டத்தின் பொருட்டு ரூபா 180.12 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ரூபா 101.36 மில்லியன் நிதி மூன்றாவது காலாண்டு இறுதியின் போது செலவிடப்பட்டுள்ளன.

### 7.5.1.1.2. விலங்கு இனத்தை மேம்பாடு செய்தல்

தெரிவு செய்யப்பட்ட பால் மாடு மந்தையின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்தில் மிருக வைத்திய பிரிவுகள் 4 இல் 22 பண்ணைகளும் வடமேல் மாகாண மிருக வைத்திய பிரிவுகள 05 இல் 30 பண்ணைகளும் உட்பட மொத்த பண்ணைகள் 52 பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த பண்ணைகளில் செயலாற்றுகை அறிக்கை தொடராக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இனவிருத்தி மற்றும் பால் உற்பத்தி செயலாற்றுகை அறிக்கை நாம் வைத்துள்ளோம். (விலங்குகளின் பிறப்பு நிறை, வயது, பால் உற்பத்தி, புரதம் மற்றும் கொழுப்பு) மேலும் கால்நடைகளின் இனவிருத்தி பெறுமானத்தை கணக்கிடுவதற்கு உயர் இனவிருத்தியுடன் கூடிய விலங்குகள் (உயர் இனவிருத்தி கொண்ட மாடுகள்) அடுத்து வரும் பெற்றோர் பரம்பரையின் பொருட்டு தெரிவு செய்யப்படுகின்றன. இயற்கை இனவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் இயற்கை இனவிருத்தியின் பொருட்டு இளம் மாடுகள் 10 சான்றுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த வேலைத் திட்டத்தின் பொருட்டு ரூபா 0.50 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதுடன் ரூபா 0.193 நிதி தொகை மூன்றாவது காலாண்டு முடிவடைகின்ற போது செலவு செய்யப்பட்டுள்ளன.

புகைப்பட எண் - 40

### 7.5.1.1.3. கால்நடை தீவன வள மேம்பாடு

இந்த வேலைத்திட்டத்தின் பொருட்டு ரூபா 2.90 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்ததுடன் ரூபா 0.222 நிதி தொகையானது மூன்றாவது காலாண்டு முடிவடைகின்ற போது செலவு செய்யப்பட்டு இருந்தன. விலங்கு தீவன வள அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் குண்டசாலை செயற்கைமுறை சினைப்படுத்தல் நிலையத்தில் விந்து வழங்கும் காளை மாடுகள் பொருட்டு மூன்று ஏக்கர் நிலத்தில் புற்செய்கை மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பில் பொருட் கொள்வனவு முறை பின்பற்றப்பட்டு ஒப்பந்தகாரர்கள் தெரிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட 3 ஏக்கர் நிலத்தில் சுத்தம் செய்து நில தயாரிப்பு நடவடிக்கைகள் முடிவுருத்தப்பட்டு இருந்தன.

- பொருட் கொள்வனவு சபையின் அனுமதிக்கப்பட்ட பொலன்னறுவை செயற்கைமுறை சினைப்படுத்தல் நிலையத்தில் யானை வேளி புணர்நிர்மானம் செய்வதற்கு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- பிற அரச நிறுவனங்களுடன் ஒன்று சேர்ந்து மேம்படுத்தப்பட்ட புல் இனங்களை விரிவாக்கும் கருத்திட்டத்தின் கீழ் செய்கை சபையுடன் ஒன்று சேர்ந்து கீழ் செய்கையாக நேப்பியர் புல் ஸ்தாபிப்பதற்கு உரிய பயிற்சி வேலைத் திட்டங்கள் மற்றும் மாதிரிச் செய்கை ஒன்று மாவத்தகம டெசிவெலி தென்னை நாற்று மேடையில் மேற்கொள்ளப்பட்டன.
- மேம்படுத்தப்பட்ட புல் இனங்களின் நடுகை பொருள் 2,650 உம் திணைக்கள புல் நாற்று மேடையின் ஊடாக வினியோகித்தல் மற்றும் நடுகை பொருள் 81,000 அளவு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள தனியார் புல் முயற்சியான்மையாளர்கள் ஊடாக களத்திற்கு வினியோகிப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இருந்தன.
- FAO கருத்திட்டத்திற்கு உரிய பரீட்சிப்பு நாற்றுப்பாத்தி (Experimental Nursery) ஸ்தாபிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 7.5.1.1.4. ஆடு இனத்தை மேம்படுத்ததல்

ஆடு இனத்தை அபிவிருத்தி செய்வதன் கீழ் தெலஹர ஆடு இனவிருத்தி நிலையத்தில் 2023.09.30 ஆம் திகதி அன்று மொத்தமாக பிறந்த ஆட்டு குட்டிகளின் எண்ணிக்கை 37 மற்றும் பண்ணையில் இருந்து இனவிருத்திக்கு பொருத்தமான ஆடுகள் வினியோகிப்பதற்கு உரியதான பட்டி ஆடுகள் 15 களத்திற்கு வினியோகிக்கப்பட்டுள்ளன. இம்புலன்தண்ட ஆடு இனவிருத்தி நிலையத்தில் Caprine Arthritis Encephalitis (CAE) நோய் பரவியதன் காரணமாக விலங்குகள வினியோகிப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டள்ளன. மேலும் அவரை உணவு தேவைப்பாட்டை பூரணப்படுத்தும் பொருட்டு மேம்படுத்தப்பட்ட நேப்பியர் புல் ஒரு ஏக்கரில் செய்கைப் பண்ணப்பட்டுள்ளன.

இதன் பொருட்டு ரூபா 15.45 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 9.30 மில்லியன் மூன்றாம் காலாண்டு இறுதியாகின்ற போது செலவிடப்பட்டுள்ளன.

### 7.5.1.2. இளம் கன்றுகளை உருவாக்கும் வேலைத்திட்டம்

இதன் கீழ் 2023.09.30 ஆம் திகதி ஆகின்ற போது பதிவு செய்யப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை 344 ஆக காணப்படுவதுடன் கன்றுணவு 1,032 கிலோ கிராம் வினியோகிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் தவணை கொடுப்பனவு 113 உம், மூன்றாவது காலாண்டுக்கான செலுத்துகை 59 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நான்காவது தவனை செலுத்துகை 27 உம் பண்ணையாளர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த கருத்திட்டம் பொருட்டு நிதி ரூபா 39.36 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டன அத்துடன் ஒரு மில்லியன் நிதி தொகை மூன்றாவது காலண்டு இறுதியின் போது செலவு செய்யப்பட்டுள்ளன.

### 7.5.1.3. குண்டசாலை செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்தில் மேம்படுத்துவதன் ஊடாக உயர்தரமான மாட்டு விந்து சொட்டுக்கள் உற்பத்தி மற்றும் வினியோகிக்கும் வேலைத்திட்டம்

குண்டசாலை செயற்கைமுறை சினைப்படுத்தல் நிலையத்தில் மேம்படுத்துவதன் ஊடாக தரத்தில் கூடிய மாட்டு விந்துகளை உற்பத்தி செய்து வினியோகித்தலை மேம்படுத்தும் கருத்திட்டம் பொருட்டு ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படடுள்ளன. இந்த கருத்திட்டத்தின் கீழ் இரசாயன உகபகரணங்கள் கொள்வனவு செய்யும் பொருட்டு பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூபா 72.34 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மாட்டுத் தொழுவங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 7.5.2. கால்நடை சட்ட ஒழுங்கு அலகு

இந்த கருத்திட்டத்தின் கீழ் கள விரிவாக்கள் உத்தியோகத்தர்களால் பதிவு செய்யப்படுகின்ற பண்ணைகள் அவதானிக்கப்படுவதுடன் அவற்றில் உள்ள கால்நடைகள் காதடையாளம் இடப்படுகின்றன. மீளாய்வு கால இறுதியின் போது 78,272 விலங்குகள் காதடையாளமிடப்பட்டு மீதமான விலங்குகள் மற்றும் அவற்றின் கன்றுகளுக்கு அடுத்து வரும் வருடங்களில் இனங்காணப்படும். இது கால்நடைகளது எண்ணிக்கை தொடர்பாக சரியான தரவுகளை பேனுதல், சட்டவிரோதமான விலங்குகள் கொண்டு செல்லல் மற்றும் அறுத்தல் போன்றவற்றை தடுத்தல் எதிர்கால பால் உற்பத்தியை குறைவாக காணப்படும் மற்றும் திறனற்ற விலங்குகளை நீக்குதல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன. 2023.09.30 ஆம் திகதி ஆகின்ற போது இவ்வேலைத்திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுள் உள்ளீடுகள் கொள்வனவு செய்வதன் பொருட்டு பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் பூரணப்படுத்தி உள்ளதுடன் அதில் (VAT) குத்தகை இன்றிய மொத்த பெறுமதி ரூபா 16.89 மில்லியன்களாகும்.

மீளாய்வு காலம் முடிவடைகின்ற போது கால்நடை தனிமைப்படுத்தல் நிலையங்கள் நவீனமயப்படுத்தி விஸ்தரிப்பு செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட இலக்குகளுள் கட்டுநாயக்க கால்நடைத் தனிமைப்படுத்தல் நிலையத்தின் திருத்த வேலைகள் பொருட்டு பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. அதற்காக ரூபா 3.3 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதோடு கொழும்பு கால்நடை தடுப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகள் பொருட்டு விலைமனு கோரப்பட்டுள்ளன.

தர பாதுகாப்பு மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கை வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுள் 2023 ஆம் ஆண்டின் பொருட்டு இனங்காணப்பட்ட இலக்குகளாக கால்நடை தீவனம் தொடர்பாக நடவடிக்கைகள், கால்நடை மருந்து அதிகார சபையின் நடவடிக்கைகள், கால்நடை மற்றும் கால்நடை உற்பத்திகளது ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகள் பொருட்டு முன் அனுமதி கடிதங்களை வெளியிடுதல் மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் பொருட்டு மொத்தமாக 67% அளவு முன்னேற்றம் அடையப் பெற்றள்ளன.

### 7.5.3. கால்நடை சுகாதார அலகு

#### 7.5.3.1. கால்நடைகளில் தொற்று நோய்களை தடுக்கும் வேலைத்திட்டம்

*இந்த வேலைத் திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் உள்ள விலங்கு நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கால்நடைப் புலனாய்வு நிலையங்களில் நோய் பரீட்சிப்பு செய்யப்படுகின்றன. மேலும் தொற்று நோய் தடுப்பூசி உட்பட கால்நடை நோய் கட்டுப்பாட்டிற்கு உரிய சகல செயற்பாடுகளும் இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றன.*

*இந்த கருத்திட்டத்தின் கீழ் கால்வாய் நோய் தடுப்பூசி சொட்டுக்கள் 119,760 உம், கருங்காலி நோய் தடுப்பூசி சொட்டுக்கள் 118,866 உம் மற்றும் தொண்டையடைப்பான் தடுப்பூசி சொட்டுக்கள் 148,386 உம் களத்திற்கு வினியோகம் செய்யப்பட்டன. அத்துடன் கால்வாய் நோய்க்கான தடுப்பூசி ஏற்றுதல் 166,086 உம் கருங்காலி நோய்க்கான தடுப்பூசி ஏற்றுதல் 119,899 உம் தொண்டையடைப்பு நோய்க்கான தடுப்பூசி ஏற்றம் 103,268 உம் தற்போதைக்கு களத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் கால்நடைப் புலனாய்வு நிலையத்தில் ஆய்வுகூடத்தை பரீட்சிக்கும் பொருட்டு தேவையான மூலப் பொருட்கள் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த கருத்திட்டத்தின் பொருட்டு ரூபா 45 மில்லியன் 2023 ஆம் ஆண்டின் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இன்று வரை நிதி முன்னேற்றம் ரூபா 13.02 ஆகும்.*

#### 7.5.3.2. கோழி சுகாதார முகாமையின் ஊடாக கோழி இறைச்சி மற்றும முட்டை ஏற்றுமதிக்கான வசதிகள் செய்து கொடுத்தல்

கோழி சுகாதார முகாமையின் ஊடாக கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதியை மேம்படுத்துவது இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். அதன் பொருட்டு பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சல்மனெல்லா, ரெனிகட் மற்றும் பறவைக் காய்ச்சல் கட்டுப்பாட்டு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
சல்மனல்லா நோய் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தின் கீழ் கோழி இனவிருத்தி பண்ணைகளை 59 கண்கானிப்புக்களும், அடைகாப்பு கண்கானிப்பு 74 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரெனிகேட் நோய் கட்டுப்பாட்டின் கீழ் தடுப்பூசிகள் 3,979,800 உம் வினியோகிக்கப்பட்டன. பறவைக் காய்ச்சல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் இரத்த மாதிரிகள் 3,432 மற்றும் சாணம் மாதிரிகள் மற்றும் CLoacal awabs 12,241 உம் பறவைக் காய்ச்சல் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ன.

இந்த கருத்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டு ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு மீளாய்வு கால இறுதியின் போது நிதி முன்னேற்றம் ரூபா 5.9 ஆகும்.

#### 7.5.3.3. கால்நடைப் புலனாய்வு நிலையங்களில் கோழி மற்றும் மீன் நோய்களை இனங்காணல் மற்றும் தடுப்பு வசதிகளை மேம்படுத்துதல்

இந்த கருத்திட்டத்தின் கீழ் குறிப்பாக ஏற்றுமதியை நோக்காகக் கொண்டு அழகு மீன்கள், இரால் மற்றும் கோழி பண்ணைகள் பொருட்டு அவசரமாகவும், பொதுவானதாகவும் மிகவும் இலாபகரமானதுமான முறையின் கீழ் மூலக்கூற்று உயிரியல் பரிசோதனை மூலமாக நோய் சிகிச்சையளிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் ஊடாக அந்த நோயை கட்டுப்படுத்துவதற்கு உடனடியான நடவடிக்கை மேற்கொள்வதற்கு பண்ணை உரிமையாளருக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றன.

2023 ஆம் ஆண்டு இந்த கருத்திட்டத்தின் ஊடாக பிரதானமாக கோழிப் பண்ணைகளில் ELISA பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதன் ஊடாக பரீட்சிக்கப்பட்டு பண்ணை விலங்குகளின் நோய் எதிர்ப்பு மட்டத்தை போன்றே தடுப்பூசி ஏற்றுவதன் வெற்றி தொடர்பிலும் பரீட்சிக்கப்பட்டன. மனிதவள தட்டுப்பாடு காரணமாக எதிர்பார்த்த PCR பரிசோதனை முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியாது போனது அத்துடன் அனுமதித்தல் தொடர்பான பிரச்சினை காரணைமாகவும் அந்த பரிசோதனையின் பொருட்டு எதிர்பார்த்த இரசாயன பொருள் மற்றும் பரீட்சிப்பு தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கு முடியாது போனது. எதிர்காலத்தில் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு அழங்கார மீன்கள் பண்ணை பரீட்சிப்பு மற்றும் மாதிரி பரீ;சிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

### 7.5.3.4. வனவிலங்கு நோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டம்

இந்த வேலைத்திட்டம் அம்பாறை, திருகோணமலை, அனுராதபுரம், நுவரெலியா, குண்டசாலை, தம்புல்லை, ஹோமாகம, பெலன்னறுவை மற்றும் இரத்தினபுரி கால்நடை புலனாய்வு நிலையங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டது. அதன் ஊடாக வனவிலங்குகளில் நிலவுகின்ற கால்நடை நோய்கள் இல்லமுறையிலான மற்றும் விவசாய விலங்குகளுக்கு பரவுவதை கட்டுப்படுத்தும் பொருட்டும் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மெற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதைக்கு வனவிலங்கு வலயம் சார்ந்த மாவட்ட கால்நடை புலனாய்வு நிலையங்களின் ஊடாக வனவிலங்கு வலயத்தை உள்ளடக்கும் வகையில், நோய்களினால் இறந்து போன விலங்குகளது மரண பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய மாதிரிகள் ஆய்வுகூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கும் மேலாக மாவட்ட கால்நடை புலனாய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் வனஜீவி உத்தியோகத்தர்கள் பொருட்டு பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தி அறிவூட்டல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

2023 ஆம் அண்டு இந்த கருத்திட்டத்தின் பொருட்ட ரூபா 2 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு மீளாய்வு கால முடிவடைகின்ற போது நிதி முன்னேற்றம் ரூபா 0.84 மில்லியன் ஆகும்.

## 7.5.4. மனித வள அபிவிருத்தி அலகு

### 7.5.4.1. விலங்கு பரிபாலன டிப்ளோமாதாரத்களை உருவாக்கும் இயலுமையை வலுப்படுத்தல்

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி அலகின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற சீப்புக்குளம் மற்றும் கரந்தகொல்ல விலங்கு பரிபாலன பாடசாலைகளில் ஆலோசிக்கப்பட்ட செயற்பாடுகளை செயற்படுத்துவதன் பொருட்டு அரச செலவு மீளாய்வுக் குழுவின் (PERC) ஆலோசணைக்கு அமைய தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதோடு அத்தியவசியமான கருத்திட்டங்கள் பல மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த கருத்திட்டத்தின் பொருட்டு 2023 ஆம் ஆண்டு ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு மீளாய்வு கால முடிவின் போது நிதி முன்னேற்றம் ரூபா 1.5 மில்லியன் ஆகும்.

#### 7.5.4.2. கால்நடைவள மேம்படுத்தும் வேலைத்திட்டம்

தற்போதைக்கு கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியான்மையாளர்களுக்கு கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விருப்பம் உள்ள மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு புதிய தொழில்நுட்பம் தொடர்பான அறிவு பெற்றுக் கொடுக்கப்படுpகன்றன. 2023 செப்டம்பர் மாதம் முடிவடைகின்ற போது கண்காட்சிகள் 03 இன் பொருட்டு பங்களிப்பு செய்வதற்கும் தொலைக்காட்சி வேலைத்திட்டம் 15 மற்றும் வானொலி நிகழ்ச்சி 21 உம் ஒலிபரப்பு செய்ய முடியுமாக இருந்தது. இந்த கருத்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டின் பொருட்டு ரூபா 6 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு மீளாய்வு கால முடிவின் போது நிதி முன்னேற்றம் ரூபா 0.7 மில்லியன்கள் ஆகும்.

#### 7.5.4.3. புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள்

சீப்புக்குளம் மற்றும் கரந்தகொல்ல விலங்கு பரிபாலன பாடசாலை மற்றும் திணைக்கள நூலகத்தின் பொருட்டு புத்தகங்கள் கொள்வனவு செய்வதன் பொருட்டு 2023 ஆம் ஆண்டு ரூபா 0.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும் அரசாங்க செலவு மீளாய்வு குழுவின் (PERC ) ஆலோசணைக்கு அமைய அது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

#### 7.5.4.4. பயிற்சி இயலுமையை மேம்படுத்துதல்.

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் மனித வள அபிவிருத்தி அலகின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற மிருக வைத்திய பட்டதாரிகள் பொருட்டு மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் இந்த கருத்திட்டத்தின் பொருட்டு ரூபா 45 மில்லியன் 2023 ஆம் ஆண்டு 292 - 01 - 01 - 2401 செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2023.09.30 ஆம் திகதி அன்று நிதி முன்னேற்றம் ரூபா 22 மில்லியன்கள் ஆகும்.

### 7.5.5. கால்நடை வள திட்டமிடல் மற்றும் பொருளாதார அலகு

#### 7.5.5.1. சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம்.

இந்த வேலைத்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டின் பொருட்டு ரூபா 7.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு மீளாய்வு கால முடிவடைகின்ற போது நிதி முன்னேற்றம் ரூபா 0.65 மில்லியன்கள் ஆகும். இதன் கீழ் கால்நடை வளத்துரையில் உற்பத்தி தரவுகள், கால்நடை எண்ணிக்கை, பண்ணை எண்ணிக்கை மற்றும் மிருக வைத்திய பணிமனைகளினல் மனித மற்றும் பௌதீக வள தகவல்கள் ஒன்று சேர்க்கப்படும். அந்த தகவல்களுக்கு அமைய Livestock Statistical Bulletin, Livestock Outlook, Annual Report போன்ற வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன. கால்நடை வளத்துறையில் முயற்சியான்மை மற்றும் உற்பத்தியாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற புள்ளிவிபரத்தை அடிப்படையாகக் கொண்டு Poultry forecast, Poultry bulletin, Dairy bulletin வெளியிடப்படுகின்றன.

இந்த கருத்திட்டத்தின் ஊடாக கறவை மாடுகள், கோழி மற்றும் ஆடு வளர்ப்பு துரைகளின் கீழ் சமூக பொருளாதார ஆய்வுகள் 05 உம் 2023 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. மேலும் பண்ணை பதிவுகளை இற்றைப்படுத்துதல், தரவு தளத்தை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு அது திறனாகவும் முறையாகவும் நடாத்திச் செல்லும் நோக்கில் சகல மாகாணங்களிலும் உள்ள மிருக வைத்தியர்கள் மற்றும் ஏனைய பதவியனியினர் பொருட்டு அறிவூட்டும் வேலைத்திட்டம் நடாத்தப்பட்டன. மீளாய்வு கால முடிவின் போது பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த பண்ணைகளின் எண்ணிக்கை 42,528 ஆகும்.

7.5.5.2. மிருக வைத்திய பணிமனைகளில் சேவை வழங்கும் வளையமைப்பை மேம்பாடு செய்தல்.

இதன் பொருட்டு 2023 ஆம் ஆண்டின் பொருட்டு ரூபா 15 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு 2023.09.30 ஆம் திகதி ஆகின்ற போது நிதி முன்னேற்றம் ரூபா 0.67 மில்லியன் ஆகும். இந்த கருத்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டு பொருட்டு கால்நடை சட்ட ஒழுங்கமைப்பின் ஊடாக கால்நடை தனிமைப்படுத்தல் நிலையங்களை தொடர்புபடுத்தி டிஜிட்டல் வளையமைப்பு ஒன்றினை தயாரிக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் தற்போதைக்கு அதன் பொருட்டு பொருட் கொள்வனவு குழுவின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திணைக்கள புதிய இணையதள பக்கம் உருவாக்கப்படுவதோடு மீளாய்வு கால முடிவின் போது அதன் வேலைத் திட்டங்கள் 75% அளவு பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

7.5.6. மிருக ஆராய்ச்சி நிறுவனம்

7.5.6.1. உயர் தரத்தினாலான கால்நடை தடுப்பூசியை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்

2018 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த கருத்திட்டம் ஊடாக உயர் தரத்தினாலான கால்நடை தடுப்பூசிகள் உள்நாட்டில் உற்பத்தி செய்வது மேலும் விரிவாக்கப்பட்டது. தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற தடுப்பூசி நிலமைகளை மேம்படுத்தும் பொருட்டு புதிய தடுப்பூசிகள் புதிதாக உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. அதற்கு அமைய இந்த கருத்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டு தொண்டையடைப்பான், கருங்காலி மற்றும் ரெனிகேட் தடுப்பூசியை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு தேவையான வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

| தடுப்பூசி வகை | வருடாந்த இலக்கு | 2023.09.30 ஆம் திகதியாகின்ற போது உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பு மருந்து அளவு |
|---|---|---|
| தொண்டையடைப்பான் | 205,000 | 167,400 |
| கருங்காலி | 70,000 | 29,469 |
| ரெனிகட் | 4,697,200 | 3,630,000 |

7.5.6.2. உணவு பாதுகாப்பு மற்றம் ஏற்றுமதி நடவடிக்கைகள் இலகுபடுத்துதல் பொருட்டு விலங்கு உணவு மற்றும் கால்நடை உற்பத்திகளின் தரத்தை சான்றுபடுத்துதல்

2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கருத்திட்டத்தின் ஊடாக கால்நடை தீவணம் மற்றும் கால்நடை உற்பத்திகளின் தரத்தை சான்றுபடுத்துவதன் ஊடாக எற்றுமதியை இலகுபடுத்துதல் மற்றம் உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றன. இந்த கருத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு மூன்றாவது காலாண்டு முடிவடைகின்ற போது விலங்கு உணவு மற்றும் கால்நடை உற்பத்தி மாதிரிகள் 3,457 தரம் பற்றி பகுப்பாய்வு செய்யப்பட்டன.

*7.5.6.3. கால்நடைவள ஆய்வு வேலைத் திட்டங்கள்*

இந்த கருத்திட்டத்தின் கீழ் ஆய்வு கருத்திட்டங்கள் *27* தற்போது செயற்படுத்தப்படுகின்றன. வேண்டுகோலுக்கு அமைய மாதிரி பரீட்சிப்புக்கள் மற்றும் உயிரியல் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

| செயற்பாடு | வருடாந்த இலக்கு | *2023.09.30* ஆம் திகதியாகின்ற போது முன்னேற்றம் |
|---|---|---|
| மாதிரி பரீட்சிப்பு | வேண்டுகோலுக்கு அமைய | |
| நாளாந்த மாதிரி பரீட்சிப்பு (விலங்கு நோய் மற்றும் தர பரிசோதனை) | | *12,940* |
| முயற்சியான்மை செயற்பாடுகளை நோக்காகக் கொண்டு மாதிரி பரீட்சிப்பு | | *22,087* |
| தொற்றுக்கான மாதிகள் பரிசோதனை | | *10,098* |
| உயிரியல் உற்பத்தி | | |
| *CMT reagent* | | *23* லீட்டர் |
| *Pullorum antigen doses* | | *139,300* |
| *RBPT antigen doses* | | *6,000* |
| *Teat dip solution* | | *104.5* லீட்டர் |
| *Pasture cuttings* | | *17,551* |
| *DOC* | | *13,813* |
| *Table eggs* | | *12,106* |
| *Hatched eggs* | | *25,057* |

*7.5.6.4.* கால்வாய் நோய் தடுப்பூசி உள்நாட்டில் உற்பத்தி செய்தல்

இந்த கருத்திட்டத்தின் கீழ் உள்நாட்டில் கால்வாய் நோய் தடுப்பூசி தயாரிக்கப்பட்டது. *2023* ஆம் ஆண்டு பொருட்டு தடுப்பூசி சொட்டுக்கள் *500,000* உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. இந்த ஆண்டின் மூன்றாவது காலாண்டு முடிவடைகின்ற போது தடுப்பூசி சொட்டுக்கள் *108,960* உற்பத்தி செய்யப்பட்டன. *2023* ஆம் ஆண்டு இறுதியின் போதும் *2024* ஆம் ஆண்டு ஆரம்ப அரைப் பகுதியில் தடுப்பூசி தயாரிப்பதாற்கான தேவையான ஊடக மற்றும் ஆய்வுகூட பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. (டென்டர் முன்வைக்கப்பட்டுள்ளன) இந்த கொள்வனவுகள் மேற்கொள்ளும் வரை நிதி முன்னேறறம் குறைவாகும்.

*7.5.6.5.* மடியழற்சி நோயை கட்டுப்படுத்தல்

இந்த கருத்திட்டத்தின் கீழ் மடியழற்சி நோய் சிகிச்சையளிப்புகள் *50,000* மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. மீளாய்வு காலத்தின் போது மடியழற்சி சிகிச்சைமுறை *11,380* உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. *2023* ஆம் ஆண்டு இறுதியின் போதும் *2024* ஆம் ஆண்டு ஆரம்ப அரைப் பகுதியில் தடுப்பூசி தயாரிப்பதாற்கான தேவையான ஊடக மற்றும் ஆய்வுகூட பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. (டென்டர் முன்வைக்கப்பட்டுள்ளன)

## 08. மில்கோ (தனியார்) லிமிடெட்

### 8.1. அறிமுகம்

மில்கோ நிறுவனம் 03 முக்கிய பகுதிகள் ஊடாக தனது செயல்பாட்டுச் செயற்பாட்டை ஆரம்பிக்கின்றது.

- உள்ளூர் பால் பண்ணையாளர்களின் பால் விளைச்சலை சேகரித்தல்
- பால் தொடர்பான உற்பத்திளை மேற்கொள்ளல்
- "ஹைலேண்ட்" வியாபார பெயரின் நாடு முழுவதும் விநியோகித்தல்

### 8.2. 2024 ஆம் ஆண்டிற்காகன நிதி இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.மில்லியன்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவு | 680.00 |
| 2 | மீண்டுவரும் செலவினம் | 20,859.00 |

### 8.3. 2024 ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்)

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டங்கள் | அளவீட்டு அலகு | நோக்கம் | அலகு விலை (ரூ) | மொத்த செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|
| 1 | புல் வளர்ப்பு கருத்திட்டம் | ஏக்கர் | 1,000 | - | (விவசாயி நிதி) |
| 2 | பண்ணை மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துதல். | விவசாயிகளின் எண்ணிக்கை | 3,000 | - | 8.50 |
| 3 | சிறு விவசாயம் வணிக பங்கேற்பு திட்டம் (SAPP) | விவசாயிகளின் எண்ணிக்கை | 6,000 | - | 18.00 |
| 4 | கட்டியான போசனை கால்நடை உணவு உற்பத்தி மற்றும் வழங்கல் (சர்க்கரையைப் பயன்படுத்தி) | மெ.டொன் | 2,400 | - | (அறவிடுதல் அடிப்படையில்) |
| 5 | கன்றுகளுக்கு செறிவூட்டப்பட்ட கால்நடை தீவனம் தயாரித்தல் மற்றும் வழங்குதல் | மெ.டொன் | 240 | - | (அறவிடுதல் அடிப்படையில்) |
| 6 | கால்நடை மருந்துகள், தாதுக்கள் மற்றும் விற்றமீன்கள் வழங்கல் | விவசாயிகளின் எண்ணிக்கை | 14,000 | - | (அறவிடுதல் அடிப்படையில்) |
| 7 | கால்நடை வளர்ப்பை மிகவும் திறம்படச் செய்தல் | செயற்கை கருவூட்டல்களின் எண்ணிக்கை | 5,000 | 3,000 | 15.00 |
| 8 | அதிக பால் விளைச்சலுக்காக மாடுகளுக்கு தொடர்ந்து குடிநீர் விநியோகம் | தண்ணீர் தொட்டிகளின் எண்ணிக்கை | 250 | 5,000 | 1.30 |
| 9 | பாற் பண்ணையாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி பட்டறைகளை நடாத்துதல் | பயிற்சி பட்டறைகளின் எண்ணிக்கை | 97 | 15,000 | 1.50 |
| 10 | விரிவாக்க பணியாளர்களுக்கு இரண்டு நாள் குடியிருப்பு | பயிற்சி பட்டறைகளின் | 6 | 150,000 | 1.0 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டங்கள் | அளவீட்டு அலகு | நோக்கம் | அலகு விலை (ரூ) | மொத்த செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|
| | பயிற்சி பட்டறைகளை நடாத்துதல் | எண்ணிக்கை | | | |
| 11 | பொலன்னறுவை தொழிற்சாலையில் யோகட் உற்பத்தி அதிகரிப்பு | தினசரி யோகட் உற்பத்தி திறன் அதிகரிப்பு | 75,000 | - | 50.0 |
| 12 | பொலன்னறுவை தொழிற்சாலையில் தயிர் உற்பத்தி அதிகரிப்பு | தினசரி தயிர் உற்பத்தி திறன் அதிகரிப்பு (லீட்டர்) | 95,000 | - | 30.0 |

## 8.4. 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதிக்குள் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம் (2023.09.30வரை)

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டங்கள் | 2023ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி.) | 2023.09.30 வரை செலவிடப்பட்ட தொகை (ரூ.மி.) | நிதி முன்னேற்றம் சதவீதம் |
|---|---|---|---|---|
| | **மூலதன செலவு** | 669.0 | 157.0 | 23% |
| | **மீண்டுவரும் செலவுகள்** | 14,167.0 | 10,225.0 | 72% |
| | **அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்** | | | |
| 1 | கால்நடை இனப்பெருக்கத்தை மிகவும் திறனுடன் செய்தல் | 7.5 | - | - |
| 2 | கறவை மாடு கணக்கெடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.2 | 0.135 | 68% |
| 3 | சிறிய அளவிலான விவசாய வியாபார பங்கேற்பு திட்டம் (SAPP) | 21.3 | 3.3 | 15% |
| 4 | புதிய ஆலையின் கூரை பழுது மற்றும் சுவர் உறைகள் (அம்பேவெல தொழிற்சாலை) | 6.5 | - | - |
| 5 | போக்குவரத்து நடவடிக்கை திறம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் (மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து) | 2.0 | 1.5 | 75% |

## 8.5. 2023 மூன்றாம் காலாண்டின் இறுதிக்குள் அபிவிருத்தி திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

### 8.5.1. நாளாந்தம் 100 லீட்டர் பால் உற்பத்தியுடன் பண்ணை அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டம்

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் தலைமையின் கீழ், உள்ளூர் பால் உற்பத்தியாளர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அவர்களின் பால் உற்பத்தித் திறனை அடிப்படையாகக் கொண்டு, ஒரு நாளைக்கு 100 லீட்டர் வரை பால் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட பால் பண்ணைகளை உருவாக்கும் திட்டம் நாடு முழுவதும் தொடங்கப்பட்டது.

அதற்கமைய, மில்கோ நிறுவனத்தினால் நாளாந்தம் 100 லீட்டர் பால் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட 650 பாற்பண்ணைகளை நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பால் பண்ணையாளர்களுக்கு தேவையான நியாயமான மற்றும் நடைமுறை அறிவை வழங்குவதற்கு, மில்கோ கள அலுவலர்கள் மற்றும் பால் பயனாளிகளை அபிவிருத்தி செய்யும் சந்தை சார்ந்த பால் உற்பத்தி கருத்திட்டத்தின் (MOD) அதிகாரிகளால் இத்துறையில் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 510 பால் பண்ணையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக MOD கருத்திட்டம் உள்ளடங்கிய வெளி கட்சிகள் மூலம் வழங்கும் நிதிக்கு மேலதிகமாக மில்கோ நிறுவனம் கிட்டத்தட்ட ரூ 0. 3 மி செலவிடப்பட்டுள்ளது.

புகைப்பட எண் - 41 - 42

### 8.5.2. விழிப்புணர்வு பாற் பண்ணையாளர் கருத்திட்டம்

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதிக்குள் பால் உற்பத்தியை 30,000 லீட்டராக உயர்த்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். அதனடிப்படையில், மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியின் முடிவில், நாடளாவிய ரீதியில் மாகாண மட்டத்தில் 3,000 பால் பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட பால் பண்ணையாளர்களுக்கு தேவையான பயிற்சி வழங்குதல், செயல்திறன் தரவு பதிவுகள் மற்றும் கண்காணிப்பு ஆகியவை பால் தொழில் முனைவோர் வளர்ச்சிக்காக சந்தை சார்ந்த பால் உற்பத்தி கருத்திட்டம் (MOD) மற்றும் மில்கோ நிறுவனம் இணைந்து செய்யப்படுகிறது.

அதற்மைய, தற்போது 2,690 பால் பண்ணையாளர்களின் பங்களிப்புடன் 134 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. அதற்காக MOD கருத்திட்டம் உள்ளடங்கிய வெளி கட்சிகள் மூலம் வழங்கும் நிதிக்கு மேலதிகமாக மில்கோ நிறுவனத்தால் முதலீடுசெய்யப்பட்டுள்ள நிதி ரூ 0. 8 மி ஆகும்.

### 8.5.3. சிறிய அளவிலான விவசாய வியாபார பங்கேற்பு திட்டம் (SAPP)

இந் நிகழ்ச்சித்திட்டம் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் (IFAD) இலங்கையில் செயல்படுத்தப்படும் சிறிய அளவிலான விவசாய வணிக பங்கேற்பு திட்டம் (SAPP), மில்கோ நிறுவனம் மற்றும் இணைந்த 3,000 பால் பண்ணையாளர்களை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு ஊவா, மத்திய, வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களை உள்ளடக்கியவாறு செயல்படுத்தப்படும்.

மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியின் முடிவில், 353 கால்நடைக் கொட்டகைகள், 7 பயிர்ச் செய்கை கிணறுகள், ஒரு உயிர் எரிவாயு அலகு மற்றும் 129 அசோலா குளங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 4.75 ஏக்கர் பரப்பளவில் புல் வளர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன், 756 புல் வெட்டும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந் நிகழ்ச்சி திட்டத்திற்காக மில்கோ நிறுவனத்தால் ரூ 3.3 மி நிதி தற்போது செலவிடப்பட்டுள்ளது.

புகைப்பட எண் - 43

### 8.5.4. போசனையுடைய கால்நடை தீவன உற்பத்தி மற்றும் விநியோகம்

மில்கோ நிறுவனம் கரும்புகளைப் பயன்படுத்தி போசனையுடைய தீவனத்தை தயாரித்து விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்குகிறது. தினசரி உற்பத்தி திறன் 8 மெ.தொ ஆக உயர்த்தப்பட்டுள்ளதுடன், விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க கட்டியான கால்டைத் தீவனம் தயாரித்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், கல்நடை கன்றுகளுக்காக செறிவூட்டப்பட்ட தீவனம் தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகளும் இந்த ஆண்டில் தொடங்கப்பட்டன.

மில்கோ நிறுவனத்தினால், கன்றுகளுக்கான தீவனத்தில் ஊட்டச்சத்து மதிப்புக்காக விலங்கு ஆராய்ச்சி நிறுவனம் (VRI) சான்றிதழைப் பெற்றுள்ளதுடன், விரைவில் உற்பத்தி நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு மில்கோ பால் பண்ணையாளர்களின் செறிவூட்டப்பட்ட கால்நடைத் தீவனத்தின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

புகைப்பட எண் - 44

### 8.5.5. பசுமை புல் கருத்திட்டம்

2023 ஆம் ஆண்டு இக் கருத்திட்டத்தின் கீழ், நாட்டின் 9 மாகாணங்களையும் உள்ளடக்கியவாறு 2,000 ஏக்கர் நிலத்தில் பயர்ச்செய்கை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, மதிப்பாய்வு செய்யப்பட்ட காலத்தின் முடிவில் நாடு முழுவதும் 578 ஏக்கரில் பயர்ச்செய்கை செய்யப்பட்டுள்ளது. இங்கு வழிகாட்டுதல் மற்றும் தொழில்நுட்ப உதவி மட்டுமே மில்கோ பணிக்குழு மூலம் வழங்கப்படுவதுடன், மேலும் அதற்கான செலவு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளால் (விவசாயிகள்) ஏற்றுக்கொள்ளப்படும்.

### 8.5.6. கால்நடைகளுக்கு தொடர்ந்து குடிநீர் வழங்குதல்

அதிக பால் விளைச்சலுக்கு கால்நடைகளுக்கு தொடர்ந்து குடிநீர் வழங்குவது அவசியம் என்பதால், அதற்கு பதிலாக ஊக்கப்படுத்தலுக்காக, ஒதுக்கீட்டில் ஒரு பகுதியை அறவிடுதல் அடிப்படையில் விவசாயிகளுக்கு 500 குடிநீர் கொள்கலன்களை வழங்க மில்கோ நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதுவரை 148 குடிநீர் கொள்கலன்கள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 8.5.7. கால்நடை இனப் பெருக்கத்தை மிகவும் திறம்படச் செய்தல்

2023 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய 2,500 செயற்கை கருவூட்டல்கள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதுடன், மதிப்பாய்வு செய்யப்பட்ட காலத்தின் முடிவில், நாடு முழுவதும் 620 க்கும் மேற்பட்ட செயற்கை கருவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புகைப்பட எண் - 45

# 09. தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை

## 9.1. அறிமுகம்

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இல. விவசாயக் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையானது 1973 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இருப்பினும் அதன் கள நடவடிக்கைகள் 1974 இல் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 32 பண்ணைகள் கால்நடை அபிவிருத்தி சபையின் கீழ் இருப்துடன், இந்த நிறுவனம் உள்ளூர் விவசாயிகள் மற்றும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் அவர்களின் மாடுகள், எருமைகள், செம்மறி ஆடுகள், ஆடுகள், பன்றிகள், இனப்பெருக்க கோழிகள் மற்றும் பல பாரம்பரியமற்ற கால்நடை வளர்ப்பு கருத்திட்டங்களை வெற்றிகரமாக நிர்வகிப்பதுடன், இனப்பெருக்கத்திற்காக விவசாயிகளுக்கு கால்நடைகளை விடுவிப்பது முக்கிய நோக்கம் ஆகும். இதை தவிர, பண்ணை உற்பத்தியான பால், முட்டை, இறைச்சி போன்ற உயர்தர உற்பத்தியாக நுகர்வோருக்கு வழங்கப்படுகின்றன. மேலும், சபையின் அனைத்து பண்ணைகளிலும் ஆண்டுதோறும் விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்கு கால்நடை வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. தேசிய கால்நடை அபிவிருத்தி சபை கடந்த 50 ஆண்டுகளாக நாட்டின் கால்நடைத் துறையின் வளர்ச்சியில் முன்னோடியாக இருந்து வருகிறது.

## 9.2. 2024 ஆம் ஆண்டிற்கான நிதி இலக்குகள்

| தொ/ இல | முக்கிய மேம்பாட்டு கருத்திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.மி) |
|---|---|---|
| 1 | மூலதன செலவு | 300.00 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 4,500.00 |

## 9.3. 2024 இல் பௌதீக இலக்குகளை செயல்படுத்த எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்

| தொ/ இல | கருத்திட்டம் | அளவீட்டு அலகு | நோக்கம் | மதிப்பீட்டுச் செலவு (ரூ) | மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| 1. | பசும்பால் உற்பத்தி | மில்லியன் லீற்றர் | 3.8 | 243.92 | 926.90 |
| 2. | எருமைப் பால் உற்பத்தி | மில்லியன் லீற்றர் | 0.87 | 523.35 | 455.31 |
| 3. | ஆட்டுப்பால் உற்பத்தி | லீற்றர் | 15,000 | 815.88 | 12.24 |
| 4. | புரொயிலர் கோழிக் குஞ்சு உற்பத்தி | மில்லியன் | 3.5 | 172.67 | 604.35 |
| 5. | முட்டையிடும் கோழிகளின் உற்பத்தி | மில்லியன் | 0.8 | 100.00 | 80.00 |
| 6. | முட்டை உற்பத்தி | மில்லியன் | 5.4 | 51.47 | 277.94 |
| 7. | வான் கோழி முட்டைகள் | எண்ணிக்கை | 150,000 | 28.81 | 4.32 |
| 8. | நாட்டுக் கோழி முட்டைகள் | எண்ணிக்கை | 980,000 | 77.00 | 75.46 |

| தொ/ இல | கருத்திட்டம் | அளவீட்டு அலகு | நோக்கம் | மதிப்பீட்டுச் செலவு (ரூ) | மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| 9. | பரொய்லர் கோழி இறைச்சி | கி.கி | 261,000 | 1,220.00 | 319.15 |
| 10. | தெங்கு | காய் | 18.6 | 50.00 | 930.00 |
| **இனவிருத்திக்காக விலங்குகளினை வழங்குதல்** | | | | | |
| 11. | கால்நடை –ஆண் | | 970 | | |
| 12. | எருமை –ஆண் | | 400 | | |
| 13. | ஆடுகள் | | 320 | | |
| 14. | செம்மறியாடு | | 1,500 | | |
| 15. | பன்றி | | 3,800 | | |
| **பெறுமதி வாய்ந்த உற்பத்திப் பொருட்கள்** | | | | | |
| 16. | UHT பால் பைக்கற்று | | 621,000 | 389.92 | 242.14 |
| 17. | யோகட் | 80 மி.லீ (மி) | 1.4 | 50.00 | 71.34 |
| 18. | பால் டொபி | பாக்கெட் | 550,000 | 227.56 | 125.16 |
| 19. | தயிர் | லீற்றர் | 740,000 | 301.00 | 222.74 |
| 20. | யோகட் பானம் | 180 மி.லீ (போத்தல்) | 168,000 | 158.14 | 26.57 |
| 21. | ஐஸ் கிறீம் | லீற்றர் | 23,500 | 519.45 | 12.20 |
| 22. | தேங்காய் எண்ணெய் | லீற்றர் | 58,000 | 613.81 | 35.60 |
| 23. | பன்றி இறைச்சி | கி.கி | 79,000 | 1,731.00 | 136.75 |

## 9.4. 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதிக்குள் நிறுவனத்தின் திட்டங்களின் நிதி முன்னேற்றம் (2023.09.30 வரை)

| தொ/ இல | கருத்திட்டம்/ செயற்பாடு | 2023 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி) | 2023.09.30 வரை செலவிடப்பட்ட தொகை (ரூ.மி.) | சதவீதமாக நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவு | 456.80 | 128.10 | 28% |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 4,616.70 | 2,167.90 | 47% |
| | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | | |
| 1. | சைலேஜ் கருத்திட்டத்திற்காக ட்ரக்டர் (4 wheel) வாங்குதல். | | 22.70 | |
| 2. | கால்நடை கொட்டகைகளுக்கு மூடுபனி அமைப்பை (Fogging System) நிறுவுதல் | | 3.20 | |
| 3. | பெற்றோர் தலைமுறையாக முட்டையிடும் கோழிகளை இறக்குமதி செய்தல் | | 6.04 | |
| 4. | பாதுகாக்கப்பட்ட முட்டைகளை இறக்குமதி செய்தல். | | 70.70 | |
| 5. | பால் விநியோகிக்கும் நடமாடும் இயந்திரத்தை கொள்வனவு வாங்குதல் | | 3.90 | |

## 9.5. 2023 ஆம் காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

நாட்டில் ஏற்பட்டுள்ள முட்டை மற்றும் இறைச்சித் தட்டுப்பாட்டைப் போக்க உடனடித் தலையீடாக, முதன்முறையாக நெதர்லாந்தில் இருந்து பாதுகாப்பு முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டது. இங்கு முட்டையிடும் கோழி குஞ்சுகளைப் பெறுவதற்காக அடைகாக்கும் முட்டைகள் 36,000 படி 08 தொகுதிக்கும் மற்றும் புரொய்லர் அடைகாக்கும் முட்டைகள், 03 தொகுதி இறக்குமதி செய்யப்பட்டன.

இந்த முட்டைகள் சபைக்கு சொந்தமான கோழி வளர்ப்பு பண்ணைகளான மாரவில மற்றும் மிரிஸ்வத்தை பண்ணைகளுக்கு வழங்கப்பட்டு, இந்த முட்டைகளை அடை வைத்து பெறப்பட்ட ஒரு நாள் வயதுடைய குஞ்சுகள் மற்றும் புரொய்லர் குஞ்சுகளை விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டது.

புகைப்பட எண் - 46

கொழும்பை சுற்றியுள்ள நகர்ப்புற மக்களிடையே திரவப் பாலுக்கு அதிக கேள்வி இருப்பதால், அந்தத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், கொழும்பு மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு காலை மற்றும் மாலை நேரங்களில் புதிய பசும்பால் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

புகைப்பட எண் -47

*9.6. தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபைக்குரிய நிறுவனங்களின் முன்னேற்றம்*

### வ/ப இலங்கை கோழிவளர்ப்பு (தனியார்) நிறுவனம்

### 9.6.1. அறிமுகம்

வ/ப இலங்கை கோழி வளர்ப்பு (தனியார்) நிறுவனம் ஜனவரி 2022 இல் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் கைமாற்றப்பட்டது. இந்த பண்ணையின் மொத்த பரப்பளவு கிட்டத்தட்ட 350 ஏக்கர் மற்றும் 250 ஏக்கரில் தென்னை பயிர்ச்செய்கை செய்யப்பட்டுள்ளது. மேலும் எருமைத் கருத்திட்டம், முட்டையிடும் புரொய்லர் கோழித் கருத்திட்டம், கோழி இனப்பெருக்க கருத்திட்டம், செம்மறி ஆடு திட்டம் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 9.6.2. 2024 ஆம் ஆண்டிற்கான நிதி இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.மி) |
|---|---|---|
| 01 | மூலதன செலவு | 14.35 |
| 02 | மீண்டுவரும் செலவுகள் | 18.78 |

### 9.6.3. 2024 இல் பௌதீக முன்னேற்றம் (அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்)

| தொ/ இல | கருத்திட்டம்/ செயற்பாடு | அளவீட்டு அலகு | நோக்கம் | அலகுக்கான மதிப்பீட்டுச் செலவு (ரூ) | மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மி.) |
|---|---|---|---|---|---|
| 01 | தெங்கு உற்பத்தி | தேங்காய்களின் எண்ணிக்கை | 460,000 | 52.07 | 23.95 |
| 02 | கோழி வளர்ப்பு கருத்திட்டம் | ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகள் | 560,098 | 144.75 | 81.07 |
| 03 | முட்டையிடும் கோழிகளின் உற்பத்தி (commercial Layer ) | முட்டைகளின் எண்ணிக்கை | 958,127 | 41.75 | 40.00 |
| 04 | செம்மறி ஆடு கருத்திட்டம் | | | | 2.61 |
| 05 | எருமைமாடு கருத்திட்டம் | தயிர் | 10,880 | 395 | 4.30 |
| 06 | விற்பனை கூடங்கள் நடாத்துதல் | - | - | - | 14.75 |
| 07 | சிறியளவிலான பயிர்ச்செய்கை | - | - | - | 2.61 |

### 9.6.4. 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதிக்குள் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்.(30.08.2023 வரை)

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2023 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி) | 2023.08.30 வரை செலவிடப்பட்ட தொகை(ரூ.மி.) | நிதி முன்னேற்றம் சதவீதம் |
|---|---|---|---|---|
| 01 | மூலதன செலவு | - | - | - |
| 02 | மீண்டுவரும் செலவுகள் | 103.70 | 36.00 | 34.7% |

## 10. வ/ப மகாவலி கால்நடை வியாபார நிறுவனம்

### 10.1. அறிமுகம்

ஒரு நாள் வயதுடைய உயர்தரத்திலான புரொய்லர் குஞ்சுகள் மற்றும் புரொய்லர் கோழி இறைச்சியை உள்ளூர் சந்தையில் நியாயமான விலையில் தயாரிப்பதில் முன்னணியில் இருப்பதுடன், சர்வதேச தர அளவுக்கு ஏற்ப நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு நாள் வயதுடைய புரொய்லர் குஞ்சுகள் மற்றும் புரொய்லர் கோழி இறைச்சியின் தரத்தை மேம்படுத்துவதே இந்நிறுவனத்தின் தொலைநோக்குப் பார்வையாக இங்கு காட்டப்பட்டுள்ளது. சந்தை விலை சமநிலையை பேணும் நோக்கத்துடன் மனித நுகர்வுக்கு கோழி இறைச்சி, முட்டைகளை உற்பத்தி செய்தல் மற்றும் ஒரு நாள் வயதுடைய புரொய்லர் குஞ்சுகளை இனப்பெருக்கம் செய்தல் மற்றும் விவசாயத்தில் மஹாவலி "எச்" வலய விவசாயிகளின் கைத்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல் மூலம் வருமானத்தை அதிகரித்தல், வேலைவாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் நலன்புரி வசதிகளை வழங்குதல் போன்றவை இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

### 10.2. 2024 ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்)

#### 10.2.1. பிரதான பண்ணையில் எதிர்பார்க்கப்படும் பணிகள்

I. தாய் விலங்கு கன்றுகள் 05 தொகுதிகளை வாங்குவதற்கான ஏற்பாடுகள் (ஒரு தொகுதிக்கு 2,000 படி)
II. தற்போது செயற்படுத்தும் பன்றி வளர்ப்பு அலகின் இனப்பெருக்கப் பிரிவை விரிவுபடுத்துதல்.
III. வணிக புரொய்லர் அலகில் ஒரு மாதத்திற்கு 10,000 புரொய்லர் விலங்குளை பராமரிக்க நடவடிக்கை எடுத்தல்.
IV. ட்ரகன் பழ பயிர்ச்செய்கை விடயத்திற்கு மற்றொரு ஏக்கருக்கு விரிவுபடுத்துதல்.
V. ட்ரகன் பழ செடிகளை தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல்.
VI. இரண்டு ஏக்கர் பரப்பளவில் தேசிக்காய் பயிர்ச்செய்கை செய்தல்.
VII. இரண்டு ஏக்கர் நிலத்தில் பப்பாளி பயிர்ச்செய்கை செய்தல்.
VIII. தேனீ வளர்ப்பை மேற்கொள்ளல்
IX. சந்தையில் விற்பனைக் கூடத்தை விரிவுபடுத்தி கவர்ச்சிகரமான முறையில் அமைத்தல்.

#### 10.2.2. கலங்குட்டிய பண்ணை அலகில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் பணிகள்

I. 2022/23 பெரும் போகத்தில் 1 ஏக்கர் நிலத்தில் உழுந்து பயிர்ச்செய்கையை ஆரம்பித்தல்.
II. தற்போது செயலிலுள்ள Tom JC மா பயிர் செய்கைக்கு மேலதிகமாக 05 ஏக்கரில் மா செடிகள் நடப்பட்டு பயிர்ச் செய்கையை விரிவு படுத்தல்.
III. 4 - 5 ஏக்கர் நிலத்தில் வாழை பயிர்ச்செய்கை.
IV. ஒரு ஏக்கர் நிலத்தில் தர்பூசணி பயிர்ச்செய்கயை ஆரம்பித்தல்.
V. ஒரு ஏக்கர் நிலத்தில் பூசணிக்காய் பயிர்ச்செய்கயை ஆரம்பித்தல்.
VI. கலங்குட்டிய பண்ணையில் புதிய விற்பனை கூடத்தை நிறுவுதல்.

## 10.3. 2023 இல் மூன்றாம் காலாண்டின் இறுதிக்குள் அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

### 10.3.1. தாய்க் கோழி உற்பத்தியினை அதிகரித்தல்

| | |
|---|---|
| தாய் விலங்குகளின் எண்ணிக்கை (2023.01.01 இலுள்ளவாறு ) | 11,155 |
| மீளாய்வு காலப்பகுதியில் சேர்க்கப்பட்ட எண்ணிக்கை | 5,740 |
| மீளாய்வு காலப்பகுதியில் குழுவிலிருந்து நீக்கப்பட்ட தாய் விலங்குகளின் எண்ணிக்கை | (2,726) |
| குறித்த ஆண்டு காலப்பகுதியில் இறந்த தாய் விலங்குகளின் எண்ணிக்கை | (720) |
| **தாய் விலங்குகளின் எண்ணிக்கை (2023.09.30 இலுள்ளவாறு)** | **13,449** |

புகைப்பட எண். - 48

### 10.3.2. முட்டை உற்பத்தி

மீளாய்வு கலப்பகுதியில் தாய் விலங்குகளிலிருந்து பெறப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கையானது 715,556 ஆகும்.

| **மாதம்** | **முட்டைகளின் எண்ணிக்கை.** |
|---|---|
| ஜனவரி | 72,803 |
| பெப்ரவரி | 72,066 |
| மார்ச் | 80,620 |
| ஏப்ரல் | 82,872 |
| மே | 6,680 |
| ஜூன் | 73,900 |
| ஜூலை | 98,986 |
| ஆகஸ்ட் | 112,634 |
| செப்டெம்பர் | 114,995 |
| **மொத்தம்** | **715,556** |

### 10.3.3. கோழிக் குஞ்சு உற்பத்தி

மீளாய்வுக் காலப்பகுதியில் இனப்பெருக்க ஒரு நாள் புரொயிலர் கோழிக் குஞ்சின் மொத்த எண்ணிக்கையானது 586,605 ஆக இருந்துள்ளதுடன் ஒருநாள் புரொயிலர் கோழிக் குஞ்சின் மாதாந்த முன்னேற்றமானது பின்வருமாறு.

***கோழிக்குஞ்சு உற்பத்தியின் வளர்ச்சி***

| *மாதம்* | *பண்ணையில்* | *வெளி கொள்வனவாளர்கள்* | *மொத்தம்* |
|---|---|---|---|
| *ஜனவரி* | 2,000 | 66,575 | 68,575 |
| *பெப்ரவரி* | 2,000 | 46,325 | 48,325 |
| *மார்ச்* | 2,000 | 53,945 | 55,945 |
| *ஏப்ரல்* | 5,275 | 54,255 | 59,530 |
| *மே* | - | 70,285 | 70,285 |
| *ஜூன்* | 4,000 | 56,705 | 60,705 |
| *ஜூலை* | - | 65,085 | 65,085 |
| *ஆகஸ்ட்* | 4,025 | 78,065 | 82,090 |
| *செப்டெம்பர்* | 4,180 | 71,885 | 76,065 |
| ***மொத்தம்*** | **23,480** | **563,125** | **586,605** |

### 10.3.4. ஒரு நாள் வயதுடைய புரொயிலர் கோழிக் குஞ்சுகளின் விற்பனை வருமானம்

| **மாதம்** | **புரொய்லர் கோழிக் குஞ்சுகள்** | **விற்பனை வருமானம் (ரூ.மி.)** |
|---|---|---|
| *ஜனவரி* | 66,575 | 8.50 |
| *பெப்ரவரி* | 46,325 | 7.50 |
| *மார்ச்* | 53,945 | 10.40 |
| *ஏப்ரல்* | 54,255 | 11.80 |
| *மே* | 70,285 | 16.01 |
| *ஜூன்* | 56,705 | 19.80 |
| *ஜூலை* | 65,085 | 27.60 |
| *ஆகஸ்ட்* | 78,065 | 28.90 |
| *செப்டெம்பர்* | 71,885 | 16.49 |
| ***மொத்தம்*** | **563,125** | **147.00** |

புகைப்பட எண். - **49**

### 10.3.5 புரொய்லர் கோழி இறைச்சி உற்பத்தி

மீளாய்வு காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட கோழி இறைச்சியின மொத்த அளவு 25,200.90 மெ.தொன் ஆகும்.

| **மாதம்** | ***பண்ணை வர்த்தகசார் புரொயிலர் அலகு*** | | |
|---|---|---|---|
| | ***உயிருடன் நிறை*** | ***கழிவு நிறை*** | ***தேறிய நிறை*** |
| *ஜனவரி* | 1,797.20 | 453.60 | 1,343.60 |
| *பெப்ரவரி* | 1,683.40 | 424.60 | 1,258.80 |
| *மார்ச்* | 6,402.60 | 1,548.80 | 4,853.80 |
| *ஏப்ரல்* | 1,488.70 | 350.10 | 1,138.60 |
| *மே* | 6,572.50 | 1,454.90 | 5,117.60 |
| *ஜூன்* | 3,878.40 | 914.40 | 2,964.00 |
| *ஜூலை* | 2,837.20 | 672.80 | 2,164.40 |
| *ஆகஸ்ட்* | 3,218.70 | 662.90 | 2,555.80 |
| *செப்டெம்பர்* | 4,837.00 | 1,032.70 | 3,804.30 |
| ***மொத்தம்*** | **32,715.70** | **7,514.80** | **25,200.90** |

புகைப்பட எண் - **50**

### 10.3.6. பாதுகாப்பு மின் வேலி அமைத்தல்

முதற்கட்டமாக ரூ.363,250.00 செலவில் பண்ணையின் முகப்பில் பாதுகாப்பு மின் வேலியை அமைத்தல்.

### 10.3.7. பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மற்றும் பிற உற்பத்திகள்

| ***விபரம்*** | ***வருமானம் (ரூ.)*** |
|---|---|
| *1.5 ஏக்கரில் டிராகன் ப்ரூட் பயிரிடப்பட்டுள்ளது* | 78,891.08 |
| *பன்றி கைத்தொழில் அலகு –*<br>கன்றுளை சந்தைப்படுத்தல் | 423,420.00 |
| *05 ஏக்கர் நிலத்தில் தெங்கு பயிரிடப்பட்டுள்ளது.* | 815,535.00 |
| மா பயிர்ச்செய்கை | 74,535.50 |
| | **1,392,381.58** |

புகைப்பட எண். - **51**

## 11. கமநல அபிவிருத்தித் திணைக்களம்

### 11.1 திணைக்களம் தொடர்பான குறுகிய அறிமுகம்

இலங்கை வாழ் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் நோக்கில், அதுவரையில் நடைமுறையிருந்த உணவுத் திணைக்களம் இல்லாதொழிக்கப்பட்டு, 1957 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி கமநல சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. 1958 ஆண்டு 01 ஆம் இலக்கமுடைய வயற் காணிச்சட்டத்தினால் செயற்பட்ட இத்திணைக்களம், தற்போது 2000 ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்னும் பெயரில் செயற்படுகின்றது.

### 11.2 2024 ஆம் வருடத்தின் நிதி இலக்கு

| தொ.இல. | பிரதான அபிவிருத்தி வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை (மி.ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதனச் செலவுகள் | 5,761.73 |
| 2 | மீண்டெழும் செலவுகள் | 10,092.13 |

### 11.3 2024 ஆம் வருடத்தின் பௌதீக இலக்கு (நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்)

| தொ. இல. | வேலைத்திட்டங்கள் | அளவை அலகு | இலக்கு | மொத்தச் செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | சிறிய நீர்ப்பாசனங்களின் அபிவிருத்தி மற்றும் தரிசான வயற்காணிகளைப் பயிரிடல் | | | |
| | தரிசான வயற்காணிகளைப் பயிரிடும் வேலைத்திட்டம் | ஏக்கர் அளவு | 5785 ஏக்கர் | 1,117.84 |
| | கைவிடப்பட்டுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்தல் | குளங்களின் எண்ணிக்கை | 23 குளங்கள் | 379.00 |
| | சிறிய நீர்ப்பாசனங்களில் சிறிய புனரமைப்பு வேலைகள் (Kick Start) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 485 கருத்திட்டங்கள் | 348.28 |
| | வெள்ள அழிவு புனரமைப்பு | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 141 கருத்திட்டங்கள் | 199.75 |
| | குளங்கள் மற்றும் அணைகளின் புனரமைப்பு வேலைத்திட்டம் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 244 கருத்திட்டங்கள் | 705.00 |
| | விவசாய வீதிகளின் திருத்த வேலை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 101 கருத்திட்டங்கள் | 203.00 |
| | பயிர்ச் செய்கைக் கிணறுகளின் திருத்தவேலை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 180 கருத்திட்டங்கள் | 100.00 |
| | சுகுறு கிராமங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டம் | கிராமங்களின் எண்ணிக்கை | 34 கிராமங்கள் | 680.00 |
| | Digital PLR | துண்டங்களின் எண்ணிக்கை | 1.8 Mn | 72.00 |
| | நீர் முகாமைத்துவ வேலைத்திட்டம் | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | 20 வேலைத்திட்டங்கள் | 50.00 |
| | குளங்களில் ஆக்கிரமிப்புச் செய்துள்ள நீர் வாழ்த்தாவரங்களை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 30 கருத்திட்டங்கள | 9.10 |

| தொ. இல. | வேலைத்திட்டங்கள் | அளவை அலகு | இலக்கு | மொத்தச் செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| | அகற்றல் | | | |
| | பெரஷூட் பயிர்ச்செய்கையை பிரபலியப்படுத்தல் | ஏக்கர் அளவு | 9,262.95 ஏக்கர் | 277.89 |
